# மனுக் குலத்தின் தாயகம்

# இலங்கை



நூலாசிரியர்

## எம். எச். ஏ. சஹீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுக் குலத்தின் தாயகம்
# இலங்கை

நூலாசிரியர்
எம். எச். ஏ. சஹீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : மனுக் குலத்தின் தாயகம் இலங்கை

மொழி : தமிழ்

நூலாசிரியர் : எம். எச். ஏ சஹீத் (முன்னால் ஆசிரியர்)

புத்தகத அளவு : 220 X 145 mm

பக்கங்கள் : 95 + 3

விலை : ரூ. 200/-

வெளியீடு : 2015 நவம்பர் - முதலாம் பதிப்பு

1437 முஹர்ரம்

ISBN No : 978-955-42742-0-4

அச்சிட்டோர் : BEST ART PRINTERS

No: 410/2,
BK ROAD , ULAHITIWALA
MALWANA, SRI LANKA.

0094 773 669 664

Munawa07@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. அணிந்துரை | 04 - 05 |
| 2. நினைவேடு | 06 - 07 |
| 3. முன்னுரை | 08 - 11 |
| 4. அத்தியாயம் (I) | |
| படைப்புக்களின் தோற்றம் | 12 - 19 |
| 5. அத்தியாயம் (II) | |
| மனிதனைப் படைத்தல் | 20 - 21 |
| முஹம்மத் நபியவர்களின் மண் | 22 - 23 |
| ஆதம் (அலை) உயிரூட்டல்,பெயர் அர்த்தம் | 23 - 26 |
| மனுவும் மண்ணும் மேலான படைப்பு | 27 - 30 |
| 6. அத்தியாயம் (III) | |
| மண்ணுலகில் முதல் தம்பதி | 31 - 33 |
| இலங்கையின் பூர்வீகக் குடி | 34 |
| பிற மதத்தவர் நம்பிக்கை | 34 - 37 |
| மன்னர்களின் பங்களிப்பு, ஆதம் மலை | 37 - 46 |
| ஆய்வாளர்கள் தேசசஞ்சாரிகள் பார்வையில் பாவாதம் | |
| மலை, பெருவிரல் பெயர்த்தொதடுப்பு | 46 - 49 |
| கண்ணீர் ஆறு, இரத்தின தீபம் | 50 - 51 |
| 7. அத்தியாயம் (IV) | |
| மண்ணுலகில் மலர்ந்த மனித வாழ்வு | 52 - 54 |
| தொல் பொருள் சான்று மனித அகவை | 55 - 57 |
| சந்ததிகள் உருவாகல், பலப்பரீட்சை | 58 - 60 |
| இப்லீஸின் சூழ்ச்சி, சீது நபி பகரம் | 60 - 63 |
| அற்புதங்களை கண்டும் திருந்தாத உள்ளம் | 64 - 66 |
| பாவாத மலை வழி, ஆய்வியல் சான்று | 67 - 71 |
| ஆய்வாளர்களை அதிரவைத்த பல் | 71 - 73 |
| நல் வழிகாட்டிய நபிமார்கள் | 74 - 90 |
| இணைப்பு : நபிமார்கள் பெயர், வயது | 91 |
| வேண்டுதல் | 92 - 93 |
| முடிவுரை | 94 - 95 |
| நன்றி நவிலல் | 96 - 97 |
| தொடர்புகளுக்கு | 98 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமது பூர்வீகத்தின் ஆணிவேரைத் தேடி வெளிக் கொணர வேண்டிய சமூகப் பணியைச் செய்து வரும் அல்ஹாஜ் முஹம்மது ஹுஸைன் ஆலிம் இப்னு அஹ்மத் சஹீத் எழுதி யுள்ள மனுக்குலத்தின் தாயகம் இலங்கை என்ற நூல் உலகின் முதல் மனிதரான ஆதம் (அலை) அவர்களது வரலாறு மற்றும் மனித குலத்தின் ஆரம்ப கால வரலாறு பற்றிய நிறைந்த தகவல் களைக் கொண்டுள்ளது.

நூலாசிரியர் தனது நூலில் முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களுக்கும் இலங்கைக்குமுள்ள தொடர்பினை வரலாற்று ஆதாரங்களுடன் சிறப்பாக முன் வைத்துள்ளார்.

ஆதம் (அலை) அவர்களது பாதம் பதித்துள்ள பாவா ஆதம் மலை பற்றி பல்வேறு நூல்களிலும் ஆவணங்களில் வெளிவந்துள்ள தகவல்கள் மற்றும் சான்றுகளை திரட்டி ஓர் ஆய்வு நூலாக இதனை எழுதியுள்ளார். இந்த மலையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக நூலாசிரியர் இதனூடாக பெருமுயற்சி எடுத்துள்ளார்.

உலகில் முதல் மனிதன் வாழ்ந்த இடம் எமது நாடென்ற கருத்துப்படி அதன் முக்கியத்துவத்தை உணருவதற்கு எமது நாடு தவறியிருக்கிறது. தனது முதல் மனிதனை அனுப்பும் ஒரு பூமியாக இறைவன் எமது நாட்டை தெரிவு செய்திருப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது.

நூலாசிரியர் தான் கூறும் சகல விடயங்களுக்கும் ஆதாரமாக புகைப்படங்களை உள்ளடக்கியிருப்பது மற்றொரு சிறப்பம்சமாகும். அத்தோடு அல்குர்ஆனின் வசனங்களை தான் சொல்லும் கருத்துக்களை நிரூபிப்பதற்கு சிறப்பாக பயன்படுத் தியிருக்கிறார்.

ஆதம் நபி பற்றி கூறுவதற்கு படைப்புக்களின் தோற்றம் மனிதன் படைக்கப்பட்ட முறை ஆதம் நபியின் தோற்றம் என்பனவற்றுடன் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரையிலான முக்கிய நபிமார்களின் பிறப்பு தொடர்பான முக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புக்களையும் இந்நூலில் அடக்கியுள்ளார்.

பாவா ஆதம் மலை இன்று இலங்கையில் சகல மதத்தவர்களாலும் மதிக்கப்படும் ஓர் இடமாக உள்ளது. இதற்கும் இஸ்லாத்திற்குமுள்ள தொடர்புகள் மங்கிவரும் நிலையில் இஸ்லாத்திற்கும் இந்த மலைக்குமுள்ள தொன்மையான தொடர்பினை நூலாசிரியர் தனது முயற்சி மூலம் உலகறியச் செய்துள்ளார். இது தொடர்பாக ஆங்காங்கே சிதறிக்கிடந்த தகவல்களைத் திரட்டி இந்த அருமையான நூலை எழுதியுள்ளார்.

மள்வானை முஸ்லிம்களின் ஆரம்ப கால வரலாறு பற்றி ஆய்வு ரீதியாக எழுதிய நூலாசிரியர் சஹீத் அதன் தொடராகவே இந்த வரலாற்று முக்கியத்துவம் மிகுந்த நூலையும் எழுதியுள்ளார்.

முன்னாள் கல்வி அமைச்சர் காயிதே மில்லத் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் தலைமையிலான அகில இலங்கை இஸ்லாமிய சோசலிஸ முன்னணியில் இணைச் செயலாளராக பணிபுரிந்த, அரசியல் சிந்தனையுடைய முன்னாள் ஆசிரியரான இவர் தனக்குள்ள மும்மொழி ஆற்றலைப் பயன்படுத்தி இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை முஸ்லிம்களது வரலாறு பங்களிப்புக்கள் பற்றி கேள்வி எழுப்பும் யுகத்தில் முஸ்லிம்களுக்கும் இலங்கைக்குமுள்ள தொன்மை மிகு தொடர்பினை நூலாசிரியர் வெகுவாகவே வெளிப்படுத்துகிறார்.

நூலாசிரியர் அஹ்மத் சஹீத் காலத்தின் தேவையைக் கருதி இந்த நூலை எழுதியுள்ளார். இந்த நூலானது தமிழில் போன்று சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வெளிவருவது முக்கியமானது.

**என். எம். அமீன்**
(தலைவர்: முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீ-லங்கா
ஸ்ரீ-லங்கா முஸ்லிம் மீடியா போரம்
பிரதம ஆசிரியர் நவமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேட்டிலிருந்து . . .

அழுத்கம, பேருவளை, பிரதேசங்களில் இடம் பெற்ற துக்ககரமான சம்பவங்கள் ஒட்டு மொத்த முஸ்லிம்களையும் மன வேதனைக்குள்ளாக்கியது. எளிதில் மறந்து விட முடியாத ஒரு சோக சம்பவமாகும்.

இச்சோக சம்பவத்துடன் இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம் இருப்பு என்பன கேள்விக்குறியான போது இது சம்ப ந்தமான பூரண விவரங்களடங்கிய நூலொன்று அகில இலங்கை முஸ்லிம் தகவல் மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் (A.C.D.M.C) ஜனாப் M.I.M மொஹிதீன் அவர் களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இதன் பிரதி ஒன்றைப் பெற வேண்டி சர்வதேச Y.M.M.A. தலைவரும் நாடறிந்த சமூகப் பணியாளருமான அல்-ஹாஜ் அஷ்ரப் ஹுஸைன் அவர்களை அவரது ரொஸ் மிட் பிளேஸ் இல்லத்தில் சந்தித்த போது 'மனுக் குலத்தின் தந்தை ஆதம் நபி' இலங்கையில் கால் பதித்த வரலாற்றை நூலுருப்படுத்தி வெளியிட விரும்புவதாகவும் இந்நூலை ஆங்கிலம் சிங்கள மொழிகளில் வெளியிட எதிர்பார்ப்ப தெனவும் எடுத்துக் கூறிய போது, முழுமனதுடன் அங்கீகரி த்துச் செயல்பட முன்வந்தமை எனக்குப் பெரும் உற்சாக த்தையும் ஊக்கத்தையும் அளித்தது. உடனிருந்த காரிய தரிசி N.M.M றஸீன் J.P அவர்களும் ஆய்வாளர் A.J.M. நிலாம் அவர்களும் கூட இம் முயற்சிக்கு உதவ முன் வந்தனர். இதனடிப்படையில் தகவல்களைத் திரட்டி நூல் களைப் பெற்று ஆய்வு செய்து நூலகத்தில் ஈடுபடலானேன். இவ்வாறு முயற்சியில் உள்நுழைந்த போது தொல்பொருள் ஆய்வுகளின் கண்டுபிடிப்புக்கள், மற்றும் வரலாற்றுத் தகவல்கள், ஆதம் நபி இலங்கையில் பாவா ஆதம் மலை உச்சியில் இறங்கியதோடு மட்டுப் பெறாது மனுக் குலத்தின் தாயகமே இலங்கை என்று இந்நூலை எழுதி வெளியிடும் நிலைக்கு இட்டுச் செல்லப்பட்ட தென்பதை நன்றிபூர்வமாக எடுத்தியம்புவது பொருந்தும் என நினைக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் "மனுக் குலத்தின் தாயகம் இலங்கை" என்ற எனது நூலை வெளியிட்டு வைக்கும் வைபவத்தை முன்னின்று நடாத்த மனமுவந்து முன்வந்ததையிட்டு தலைவர் மதிப்புக்குரிய அஷ்ரப் ஹுஸைன் ஹாஜியார் அவர்களுட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும் மனப்பூர்வ மான நன்றியையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துகிறேன்.

மேலும் இந்நூல் ஆங்கிலம், சிங்களம் மற்றும் ஏனைய உலக மொழிகளிலும் வெளிக் கொணரும் பொறுப்பை நிறைவேற்றி உலகறியச் செய்ய முன் வரவேண்டும் என வேண்டிக் கொள்வதோடு இவ்வவா நிறைவேற எல்லாம் வல்ல அல்லாஹ், தலைவர் அஷ்ரப் ஹுஸைன் ஹாஜியார் அவர்களுக்கும் அவரது தலைமையிலான சர்வதேச Y.M.M.A. பேரவைக்கும் அருள் புரிய வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன்...

ஆதியும் அந்தமும் இல்லாத ஏக வல்லவனாகிய அல்லாஹ் வானம், பூமி, பிரபஞ்சங்கள் அனைத்தையும் ஆறே நாட்களில் படைத்தான்.

பூமியில் மனிதனல்லாத அநேக படைப்பினங்களை ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு காலச் சக்கரத்திலும் படைத்து அவை அழிந்த பின்னர் இறுதியாக உயர்ந்த மேலான படைப்பினமாக மனிதனைப் படைக்க நாடினான்.

உலகின் அனைத்து இடங்களில் இருந்தும் பல நிறங்கள், குணங்கள், தன்மைகள் அடங்கியதாக ஒரு தொகுதி மண்ணை தனது மலக்குகள் மூலம் எடுப்பித்தான். இதனைப் பல்வகை நீரிலும் பிசைந்து அவனது நாட்டப்படி முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்களை உருவமைத்தான். பின்னர்(றூஹை) உயிரை உட்புகுத்தி உயிர் பெறச் செய்தான். அதன் பின் அல்லாஹ் தனது மலக்குகளையும் அஸாஸீலையும் ஆதம் (அலை)க்கு ஸுஜூது - சிரம்பணிதல் செய்யும் படி ஏவினான். அனைத்து மலக்குமார்களும் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று ஸுஜூது செய்தனர். அஸாஸீல், ‘நெருப்பினால் படைக்கப்பட்ட நான் மண்ணால் படைக்கப்பட்ட மனிதனுக்கு ஸுஜூது செய்யமாட்டேன்’ என்று பெருமை பேசி மறுத்து விட்டான்.

இதனால் இறை சாபத்துக்குள்ளான அஸாஸீல் சபிக்கப்பட்ட இப்லீஸ் எனும் நிராசைக்காரனானதுடன் சுவர்க்கத்தை விட்டு வெளியேற்றப்பட்டான். அல்லாஹ் அவனது நாட்டப்படி ஒரு நீண்ட உறக்கத்தை ஆதம் (அலை) அவர்களுக்கு கொடுத்து அவர் அறியாத வண்ணம் அவரது இடது புற விலா எலும்பொன்றை எடுத்து ஹவ்வா (அலை) அவர்களை படைத்தான். துயில் நீங்கி விழித்தெழுந்த ஆதம் (அலை) இப்படைப்பு குறித்து வியப்புடன் அல்லாஹ் விடம் வினவ, ‘உமக்கு துணையாக ஹவ்வா எனும் இப்பெண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்திருக்கிறேன்' என்று சொல்லி இருவரையும் சுவன பதியில் குடியிருத்தாட்டினான். அவர்கள் இருவருக்கும் ஒரு மரத்தை காட்டி அதன் கனியைப் புசிக்கவோ அம்மரத்தை நெருங்கவோ வேண்டாம் எனக் கட்டளையிட்டான்.

இறை சாபத்துக்குள்ளான இப்லீஸ், ஆதம் (அலை) மீது பொறாமை கொண்டு, ஆதம் (அலை) அவர்களை வழி கெடுக்க எண்ணி, தந்திரமாக சுவனத்தினுள் நுழைந்து, ஆதம் (அலை)யை அணுகி, ஆசை வார்த்தைகளைக் கூறி தடுக்கப்பட்ட மரத்தின் கனியை உண்ண வைக்க முயன்றான். ஆதம் (அலை) இணங்க மறுத்தபோது, இப்லீஸ் ஹவ்வா (அலை) அவர்களிடம் பசப்பு வார்த்தைகளைக் கூறி, கனியைப் புசிக்க வைத்ததோடு, ஹவ்வா (அலை) மூல மாக ஆதம் (அலை) அவர்களையும் புசிக்க வைத்தான். இதனால் கோபமுற்ற அல்லாஹ், இவ்விருவரையும் சுவன லோகத் திலிருந்து வெளியேற்றிய வரலாறு முதலான தொடர் விபரங்களை நூலின் உள்நுழைந்து அறிய வேண்டுகிறோம். இந்நூலின் முக்கிய கருக்கோளான சுவனத் திலிருந்து, வெளியேற்றப்பட்ட ஆதம் (அலை) நமது இலங் கை நாட்டின் பாவா ஆதம் மலை உச்சியில் கால் பதித்து, நீண்ட காலம் அழுது மன்றாடினார், பின்னர் அல்லாஹ்வால் மன்னிக்கப்பட்டு, இலங்கையிலிருந்து கால் நடையாக மக்கா சென்று அறபா முற்ற வெளியில் ஹவ்வா (அலை)யை சந்தித்தார். மீண்டும் இலங்கைக்கு திரும்பி வந்து, வாழ்ந்த வரலாறும் நாற்பது தடவைகள் கால் நடையாகவே கஃபா வை தரிசித்து வந்த வரலாறுகளையும் இது தொடர்புடைய ஏனைய விடயங்களையும் நூலில் நுழைந்து வாசித்தறி யலாம்.

இந்நூலின் மற்றுமொரு கருப்பொருளான மனித குலத்தின் தந்தை ஆதம் நபியின் பாதச் சுவடு பதிந்த பாவா ஆதம் மலை பற்றி, ஏனைய சமுதாயத்தினரின் நம்பிக்கை குறித்து அறியும் போது,

1. பெரும்பான்மை பௌத்த மக்கள் "ஸ்ரீ பாத" கண்ணிய த்துக்குரிய பாதம் என்று சொல்வதன் அர்த்தத்தை சேர் றொபட் நொக்ஸ் என்பவர் தனது குறிப்பில் விண்ணுலகில் இருந்து வந்த பெரிய புத்தர் கால் பதித்ததாக குறிப்பிட்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளதோடு, பெரும்பாலான பௌத்த மக்கள், கௌதம புத்த பிரான் 500 சீடர்களுடன் களனிக்கு வந்த போது, பாவா ஆதம் மலையை தரிசித்து கால் பதித்த நம்பிக்கையோடும் பக்திப் பரவசத்தோடும் வருடா வருடம் தரிசிக்கும் வழமை இடம் பெற்று வருகிறது.

2. இந்துக்கள் பாவா ஆதம் மலையில் சிவ பெருமானுடைய பாதச் சுவடு பதிந்துள்ளதாக நம்பி, சிவனொளிபாத மலை என்று அழைக்கின்றனர்.

3. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஆதத்தின் சிகரம் என்று பொருள்பட Adam's Peak "அடம்ஸ் பீக்" என்று அழைக் கின்றனர்.

மேலும் உலகில் வாழும் அநேக மதங்களைப் பின்பற்றுவோரின் நம்பிக்கையும் இது ஆதம் (அலை) உடைய பாதம் என்பதேயாகும். மேலும் உலகில் ஆதம் மலை என்றும் ஆதமின் பாலமென்றும் குறிப்பிடும் இடங்கள் இலங்கையைத் தவிர உலகில் வேறெங்குமில்லை. சமீபத்திய நாஸா விண்வெளி ஆய்வு நிலையம் வெளியிட்டுள்ள விண்வெளியிலிருந்து எடுத்த ஆதமின் பாலத்தை காட்டும் படமும் இதற்கு பெரியதோர் அத்தாட்சியாகும். இன்னும் இற்றைவரை இக்கருத்துக்கு மாறாக பேசுவோரோ எழுது வோரோ உலகில் எந்த மூலை முடுக்குகளிலும் இல்லை.

மேலே சொன்ன அனைத்து விடயங்களிலிருந்தும் முழு உலக மக்களினதும், மனித குலத்தின் ஆதி பிதா ஆதம் நபியின் பாதச் சுவடு இலங்கை நாட்டில் பதியப் பெற் றிருப்பது என்பது சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமாகிறது.

எமது தாய்நாட்டில் நல்லாட்சி மலர்ந்து சகல இனங்களைச் சார்ந்தோருள் மிகப் பெரும்பான்மையினர் ஒன்றிணைந்து, தேசிய அரசாங்கம் அமைத்து முன்னோக்கிச் செல்லும் இக்கால கட்டம், இலங்கை வரலாற்றில் பொற் காலங்களில் ஒன்றாகும். இப்பொன்னான யுகத்தில் புரை யோடிப் போயுள்ள கசப்புணர்வுகள் அனைத்தும் மறக்க டிக்கப்பட்டு உண்மைகள் வெளிக் கொணரப்படுவது அனை வரதும் மகிழ்ச்சிக்கும் சுபீட்சத்திற்கும் உரிய நல்லதொரு சகுனமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய அனைத்து
மதங்களினதும் பெரியார்களே !
தேசாபிமானிகளே !
வரலாற்றாய்வாளர்களே !
தாய் நாட்டின் நன்மதிப்பையும் கீர்த்தியையும்
நேசிப்பவர்களே !
மதிப்புக்குரிய ஊடகவியலாளர்களே !
சகல பத்திரிகைகளினதும் கௌரவ பிரதம
ஆசிரியர்களே !
மனித குலத்தின் தந்தை ஆதம் நபியின்
பாதச் சுவடு எமது தாய்நாட்டின் மலை
உச்சியில் தான் பதிந்துள்ளது என்பதை
மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுள்ளோரே !
பெருமதிப்புக்குரிய மேன்மை தங்கிய
ஜனாதிபதியவர்களே !
கௌரவ பிரதம மந்திரியவர்களே !
அமைச்சர்களே !
நாட்டை நேசித்து உழைக்கும் அனைத்துக்
கட்சிகள், அமைப்புக்களினதும் பிரமுகர்களே !

இந்நூலில் எடுத்தாளப்பட்டிருக்கும் முக்கியமான அனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டு சீர்தூக்கிப் பாருங்கள். மனித குலத்தின் தந்தை ஆதமுடைய பாதச் சுவடு, முழு உலகத்தினதும் மரபுரிமைச் சொத்துக்களில் மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும்.

மறைக்கப்பட்டிருக்கும் இப்பாதச் சுவட்டை வெளிக் கொணர்ந்து நாட்டின் கீர்த்திக்கும் புகழுக்கும் பொருளாதார சுபீட்சத்துக்கும் வழி கோல வேண்டும், என்ற பெரும் எதிர் பார்ப்புடனே இந்நூலை எழுதி வெளியிடுகிறேன். .

எனவே நல்லுள்ளங் கொண்ட நாம் அனைவரும் ஒன்றி ணைந்து இம்முயற்சியில் வெற்றி பெற வல்ல நாயனின் துணை வேண்டி விடை பெறுகிறேன்.

நூலாசிரியர்
**எம். எச். ஏ சஹீத்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் ~01

## படைப்புக்களின் தோற்றம்.

வானம், பூமி மற்றும் உண்டான அனைத்தையும் படைத்த ஒருவனின் உள்ளமை, வல்லமை குறித்து விண்ணிலும் மண்ணிலும் உள்ள அனைத்து வஸ்துக்களும் சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன.

வானம் பூமி அடங்கலான பிரபஞ்சங்கள் யாவும் ஆறே நாட்களில் படைக்கப்பட்டதாக அல்லாஹ் தனது திருக் குர்ஆனில் எடுத்தியம்புகிறான். இந்த ஆறு நாட்களுக்குள் பூமியைப் படைக்க இரண்டு நாட்கள் எடுத்ததாக அல்லாஹ் மேலும் திருக்குர்ஆனில் குறிப்பிடுகின்றான்.

"நிச்சயமாக உங்கள் இரட்சகன் அல்லாஹ் தான், அவன் எத்தகையவன் என்றால் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான் (அல்-குர்ஆன் அல் அ.்.ராப் 7ம் அத்தியாயத்தின் 54ம் வசனத்தின் ஒரு பகுதி)

திருமறையில் மற்றோர் இடத்தில் அல்லாஹ் பின் வருமாறு கூறுகின்றான். "(நபியே!) நீர் கூறுவீராக, பூமியை இரண்டே நாட்களிலே படைத்தானே அத்தகையவனைத் திட்டமாக நிராகரித்து விட்டு அவனுக்கு சமமானவர்களையா நீங்கள் ஆக்குகிறீர்கள்? அவன் (தான்) அகிலத்தாரின் இரட்சகனாவான். அவனே அதிலிருந்து உறுதி பெற மலைகளை அமைத்தான். அதில் அபிவிருத்தியையும் நல்கினான், மேலும், அதில் உணவுகளை நான்கே நாட்களில் நிர்ணயம் செய்தான். (இவ்வாறு செய்ததைப் பற்றி) கேட்போருக்கு (பதில்) நிறைவாகி விட்டது. (அல் குர்ஆன் 41: 09)

பின்னர் வானத்தை அது புகையாக இருக்கும் நிலையில் அவன் நாடினான். பின்னர் அவன் அதற்கும், பூமிக்கும் "நீங்கள் இருவரும் கீழ்ப்படிந்தோ அல்லது நிர்பந்தமாகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள்" என்று கூறினான். (அதற்கு) அவை இரண்டும் "நாங்கள் கீழ்ப்படிந்தவர்களாகவே வந்தோம்" என்று கூறின.

பின்னர் அவன் அவைகளை இரண்டு நாட்களில் ஏழு வானங்களாக சமப்படுத்தி முடித்தான். ஒவ்வொரு வானத்திலும் அதனுடைய காரியத்தை அறிவித்தான். மேலும் தாழ்வாகவுள்ள (முதல்) வானத்தை (நட்சத்திர) விளக்குகளைக் கொண்டு அலங்கரித்தோம் என்றும் (அதனை ஷைத்தான்களை விட்டும்) பாதுகாக்கப்பட்டதாகவும் (ஆக்கினோம்) இது (யாவற்றையும்) மிகைத்தோன் (யாவையும்) நன்கு அறிந்தோனின் ஏற்பாடாகும் என்று சூரா ஹாமீம் ஸஜ்தா அத்தியாயம் 41: 9- 12ம் வசனங்கள் கூறுகின்றன.

எதனையும் படைக்குமுன் வெறுமை நிலையில் இருந்த போது துவர்க்கமும் முடிவும் இல்லாத அல்லாஹ் மாத்திரம்தான் இருந்துள்ளான். அவனே முதன்மையானவன். ஏனைய அனைத்தும் உருவாக அல்லாஹ்தான் மூலகர்த்தா. இஸ்லாத்தின் மூலாதாரமான அல்குர்ஆனின் கூற்றிலிருந்தும் அல்குர்ஆனுக்கு விளக்க உரை எழுதிய பேரறிஞர் பெரு மக்களின் தெளிவுரைகளில் இருந்தும் அல்லாஹ், முதன் முதலாக நீரைத்தான் படைத்திருக்கின்றான்.

மேற்படி கருத்தும் படைப்புக்கள் பற்றி தொடர்ந்துமாக வரும் தகவல்கள் அனைத்தும் தென் இந்திய ஆய்வறிஞர்களான ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அவர்களால் எழுதப்பட்ட கஸஸுல் அன்பியா மற்றும் டாக்டர் அப்துல் றஹீம் எழுதிய நபிமார்கள் வரலாறு, அத்துடன் தற்கால ஆய்வாளர்களின் நூல்களில் இருந்து தொகுக்கப்பட்டு இங்கு முன் வைக்கப்படுகிறது.

மேற்கண்ட தென் இந்திய ஆய்வாளர்களும் கூட அறபு, பார்ஸி, உருது கிதாபுகளில் இமாம்கள் மார்க்க சட்ட வல்லுனர்கள் குறிப்பாக இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் இஹ்யாவு உலூமுத்தீன் ,கீமிஆயே ஸஆதத் அடங்கலான இஸ்லாமிய தத்துவஞான ஆய்வறிஞர் பெருமக்களின் தேடல்களில் இருந்து, தேடி எடுக்கப்பட்ட ஆதாரங்களையே எடுத்தாண்டிருக்கிறார்கள் என்பது கவனிக்கத்தக்க விடயமாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட நூல்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களே இந்நூலிலும் ஆங்காங்கே எடுத்தாளப்பட்டிரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கின்றன. தொடர்ந்து வரும் பக்கங்கள், அத்தியாயங்களி லும் இதே ஆதாரங்களை முன்வைத்தே இந்த ஆய்வும் முன் னகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நீருக்குப் பின்னர் மலக்குகள் படைக்கப்பட்டிருக்கி றார்கள். அந்த வரிசையில் அர்ஷ், குர்ஸி படைக்கப்பட்டி ருக்கிறது. அத்துடன் கலம்-எழுது கோல், லவ்ஹுல் மஹ்பூல் - பாதுகாக்கப்பட்ட பலகை என்று பொருள்படும் பதிவுப் பலகை என்பன படைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலம் உலகம் உட்பட அண்ட சராசரங்கள் எல்லாம் எப்படி எப்படி இயங்க வேண்டுமோ உலகில், பிரபஞ்சங்களில் என்னென்ன வெல்லாம் நடக்க வேண்டுமோ அத்தனையும் திட்டமிட்டபடி முன் கூட்டியே ஏற்பாடு செய்து பதிந்து வைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, இடம் பெற்றிருக்கிறது.

அதன் படி ஜின் வர்க்கம் படைக்கப்பட்டிருக்கிறது. ஜின்கள் நெருப்பினால் படைக்கப்பட்டிருப்பதால் ஜின்களு க்கு முன்னர் நெருப்பு படைக்கப்பட்டிருக்கிறது. அல்லாஹ் வின் பதிவு குறித்து கலம், லவ்ஹுல் மஹ்பூல் என்ற பதங் கள் பிரயோகிக்கப்பட்டிருப்பினும் அவற்றினைப் பற்றி பூரண அறிவு அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு.

இன்று நவீன பதிவுப் பொருட்களான சிம், சிப் எவ்வளவு சிறு அளவிலான பொருட்கள். இவற்றிலே மிகப் பெரிய உலகமே உள்ளடக்கப்பட்டிருப்பதை காண்கிறோம் அல்லவா? இன்று இப்படி எதிர்காலத்தில் இதை விடவும் அதி நவீன நுண்சாதனங்கள் புழக்கத்திற்கு வரும் என்று எதிர் பார்க்கலாம்.

சாதாரண மனித அறிவு நுட்பத்தின் விளைவு இப்படி யிருக்கையில் அனைத்தையுமே படைத்த மஹா வல்லமை பொருந்திய அல்லாஹ்வின் மதி நுட்பம் எமது கற்பனைக்கு உட்படுமா?

எனவே எமக்கு அறிமுகமான பாணியில் கலம், லவ்ஹுல் மஹ்பூல் - எழுது கோலும் பதிவுப் பலகையும் என்ற பதங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. நடக்க விருக் கும் அல்லாஹ்வின் நாட்டம்தான் லவ்ஹுல் மஹ்பூல் பேரேட்டில் பதியப்பட்டிருக்கிறது. பேரேட்டில் பதிந்து வைத்து ள்ளபடி தானே எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பாட்டிலே வாழ்வோரும் உள்ளனர். இது தவறான வாதமாகும். இந்தச் சிந்தனை தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்வதற்கு ஈடானதாகும்.

அல்லாஹ்வின் நாட்டம் உண்டென்பது உண்மை. பாவ மன்னிப்புச் செய்வதன் மூலமும் நற்செயல்கள், தான தர்மங்களில் ஈடுபடுவதன் மூலமும் விதியை மாற்றியமைப்பதற்கு அல்லாஹ் போதுமானவன். இதனை உணர்ந்து அல்லாஹ்வின் ஏவலை ஏற்று, விலக்கலை விட்டும் தவிர்ந்து, நடப்பதே படைத்த நாயனுக்குச் செய்யும் கைமாறாகும். அல்லாஹ் எந்தத் தேவையுமற்றவன் நாம் அல்லாஹ் விரும்பியபடி வாழ்வதன் மூலம் அல்லாஹ்வுக்கு எந்தப் பயனும் இல்லை. ஆனால் எமது வாழ்வுக்குத் தான் ஈடேற்றம் கிடைக்கச் செய்வதே அல்லாஹ்வின் நாட்டமாகும்.

அறிவு மூலம் மனிதன் இன்று விஞ்ஞானத்தால் மகத்தான சாதனைகளை நிலைநாட்டி வரும் போது, மனிதன் ஈராக அனைத்துப் படைப்பினங்களினதும் சிருஷ்டி கர்த்தாவான அல்லாஹ்வின் திட்டமிடல் எமது அறிவு, கற்பனைக்கு எட்டாது என்று கூறிவைப்பதைத் தவிர வேறு வார்த்தை இல்லை.

படைப்பினங்களின் ஆரம்பம் குறித்து ரசூல் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறிய கூற்றொன்று இங்கு கவனிக்கத்தக்கதாகும். இஸ்லாத்தின் ஆரம்ப கட்டத்தில் யெமன் நாட்டிலிருந்து ஒரு தூதுக் குழுவினர் ரசூல் (ஸல்) அவர்களை சந்திக்க வந்தனர். அவர்கள் இஸ்லாத்தைப் பற்றிய கலந்துரையாடலின் போது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து, "மனிதன் படைக்கப்படுவதற்கு முன்னர் என்ன இருந்தது?" என்று யெமன் குழுவினர் கேள்வி எழுப்பினர். அதற்கு ரசூல் (ஸல்) அவர்கள் "அல்லாஹ் மட்டும் தான் இருந்தான், அவனுடன் வேறெதுவும் இருக்கவில்லை. தண்ணீரின் மீது தனது சிம்மாசனத்தை அமைத்தான். அல்லாஹ் தன் நினைவில் (பாதுகாக்கப்பட்ட பேரேடு) அனைத்தையும் பதிவு செய்தான். வானங்கள் பூமியைப் படைத்தான்". என்று பதிலுரைத்தார்கள். இச் சம்பவம் ஸஹீஹுல் புஹாரி எனும் ஹதீஸ் கிரந்தத்தில் இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். இம்ரான் பின் ஹுஸைன் (ரலி) அவர்கள் இதனை அறிவித்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவத்துடன் கூடிய இந்த ஹதீஸ் மூலம், ஆரம்பத்தில் அல்லாஹ் மாத்திரம் தான் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக படைப்புக்கள் ஒவ்வொன்றையும் அல்லாஹ் தோற்றுவித்தி ருக்கிறான் என்பது உறுதியாகிறது.

பூமியில் வாழும் மனிதனைப் படைப்பதற்கு முன் அல்லாஹ் ஜின் இனத்தின் ஆதித் தந்தையான ஜானைப் படைத்தான். தார்னூஷ் எனும் இயற்பெயர் கொண்ட ஜான், நெருப்பும் காற்றும் கலந்த புகை சூழ்ந்த ஒரு வகை நெருப்பி னால் படைக்கப்பட்டார். இவர் மூலம் எண்ணற்ற வழித் தோன்றல்களை பிறக்கச் செய்து அல்லாஹ் பூமியிலே வாழச் செய்தான்.

மனிதர்கள் நேர்வழியில் வாழ வேதங்கள், ஸுஹ்புகள் எனும் இறை கட்டளைகள் வழங்கப்பட்டமை போல ஜான் சந்ததியினருக்கும் பொதுவான ஒரு சட்டத்தை வழங்கி, அதன்படி செயலாற்றி வரும் படி கட்டளை பிறப்பித்திருந் தான். அந்தச் சந்ததியினரோ நாளடைவில் நெறி தவறி இறைவனுக்கு மாறு செய்ய ஆரம்பித்தனர். அதனால் அவர் கள் இறைவனால் அழித்தொழிக்கப்பட்டனர்.

காலச் சக்கரம் சுழன்றது. ஒரு காலச் சக்கரம் சுழலுமளவு, 24000 ஆண்டுகள் என்று முஹியத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். எனவே ஜானைப் படைத்து அவரது சந்ததிகள் 24000 ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் அல்லாஹ் ஜின் இனத்தின் இன்னொரு சந்ததியைப் படைத்தான். அவர்களுக்கு **ஹலியயிஷ்** எனும் பெயருடைய ஒரு தலைவரை வழங்கி, அவர் மூலம் ஒரு சட்டத்தையும் இறைவன் வழங்கினான். இக்கூட்டத்தினரும் காலப் போக் கில் ஒழுக்கம் கெட்டு, வழி தவறிச் சென்றனர். எனவே அவர்களும் அழித்தொழிக்கப்பட்டனர்.

காலச் சக்கரம் மீண்டும் சுழன்றது. 48000 ஆண்டுகள் உருண்டோடின. ஜின் இனத்தின் மூன்றாவது படைப்பை அல்லாஹ் தோற்றுவித்தான். அந்த சந்ததியினருக்கு மலிகா என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டு இறை கட்டளைகளோ டு வழிகாட்டுதல்களையும் அவர்களுக்கு அனுப்பி வைத் தான். அவர்களும் முன்னைய சந்ததிகள் போலவே இறைவனுக்கு மாறு செய்து, தீய வழியிலேயே சென்றனர். அக் கூட்டத்தினரும் இறைவனால் அழித்தொழிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலச் சக்கரம் சுழல மண்ணிலே நான்காவது படைப்பினங்கள் உருவாக்கப்பட்டன. அவர்களின் தலைவனாக ஹமூஸ் என்பவனை அல்லாஹ் நியமித்தான். அவன் இறைநெறியை நீதியுடன் நிலை நாட்டி வந்தான். அக் கூட்டத்தினரும் நாளடைவில் வழிகேட்டில் மூழ்கலாயினர். இச்சந்ததி விடயத்தில் அல்லாஹ் வித்தியாசமானதொரு முறையைக் கையாள ஆரம்பித்தான்.

மாறு செய்யும் ஜின் கூட்டத்தினரை எதிர்த்துப் போராட, அல்லாஹ் வானவர்களை மண்ணகத்துக்கு அனுப்பி வைத்தான். வானவர்கள் ஜின் இனங்களோடு சண்டை செய்து, அக்கூட்டத்தினரை சின்னாபின்னப்படுத்தினர். வானவர்களிடமிருந்து தப்பியோடிய சில ஜின்கள் தீவுகளிலும் பாழடைந்த இடங்களிலும் அடைக்கலம் புகுந்தனர். மற்றும் சிலர் மலக்குகளால் சிறை பிடிக்கப்பட்டு விண்ணகம் கொண்டு செல்லப்பட்டனர். அவ்வாறு விண்ணகம் புகுந்தவர்களில் அஸாஸீல் என்பவனும் ஒருவனாவான்.

காலச் சக்கரம் சுழன்று கொண்டே இருக்க இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக பதினெட்டு வகையான படைப்பினங்களை அல்லாஹ் பல்வேறு உருவங்களில் படைத்திருக்கிறான்.

இப்படைப்பினங்கள் அனைத்தும் மனித உருவில் அன்றி வெவ்வேறு உருவ அமைப்பிலேயே படைக்கப்பட்டிருக்கின்றன. 18 காலச் சக்கரம் என்ற தொகையை விடவும் கூடுதலான படைப்புச் சந்ததிகள் படைக்கப்பட்டிருப்பதாகவும் மற்றும் சிலர் ஆதாரங்களை முன்வைக்கிறார்கள்.

இவ்வாறு படைக்கப்பட்ட படைப்பினம் ஒன்றுக்கு முன்னும் பின்னும் இரண்டு முகங்கள் இருந்திருக்கின்றன. மற்றொரு படைப்புக்கு மனித முகம் போன்றும் ஆமையின் முதுகு போன்றும் இருந்திருக்கிறது. அத்துடன் அதன் தலையில் கொம்பும் நாய் குரைப்பது போன்று அதன் பேச்சும் இருந்திருக்கிறது.

கைதியாக விண்ணகம் அழைத்துச் செல்லப்பட்ட அஸாஸீல் அங்கு கல்வி வேள்விகளில் மிகைத்துக் காணப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலச் சக்கரம் சுழன்று கொண்டே இருக்க தீவுகளி லும் பாழடைந்த இடங்களிலும் அடைக்கலம் புகுந்திருந்த ஜின் இனங்கள் பல்கிப் பெருகின. இச்சந்தர்ப்பத்தில் விண் ணகத்தில் தன் கைவரிசையை காட்டிக் கொண்டிருந்த அஸாஸீல் அல்லாஹ்வின் அனுமதியோடு வானவர்களுடன் மண்ணகம் வந்தான். அவனைச் சூழ்ந்து கொண்ட சில ஜின் கள் அவனைத் தலைவனாக்கிக் கொண்டனர்.

பின்னர் அஸாஸீல் மலக்குகளுடன் விண்ணகம் மீண் டான். அங்கு ஜின்களில் **ஸஹ்லூப் இப்னு முல்லாத்** என்ப வர் ஜின்களிடையே சிறப்பு வாய்ந்தவராக இருந்தார். அவரை மண்ணகத்து ஜின்களுக்கு வழிகாட்டுவதற்காக அல்லாஹ் அஸாஸீலுடன் அனுப்பி வைத்தான். நேர் வழி காட்ட வந்த ஸஹ்லூப் இப்னு முல்லாத்தை கொடிய ஜின்கள் கொலை செய்துவிட்டார்கள். தன்னால் அனுப்பப்பட்ட தூதுவரிடமிரு ந்து எத்தகைய தகவலும் வராதநிலையில் அஸாஸீல் மற் றொருவரை அனுப்பி வைத்தான். அவரும் அதே நிலை யில் கொலை செய்யப்பட்டார். மீண்டும் ஒருவர் அனுப்பப் பட்டார். அவருக்கும் அதே கதியே நிகழ்ந்தது. இறுதியாக யூஸுப் இப்னு யூஸுப் என்பவரை அனுப்பினான். மண்ணக ஜின்கள் அவரையும் கொலை செய்ய எத்தனித்த போது அவர் அங்கிருந்து தப்பி விண்ணகம் மீண்டார். நடந்ததை கேட்ட அஸாஸீல் கொதித்தெழுந்தான். இறைவனின் அனுமதி பெற்று வானவர்களையும் துணைக்கு அழைத்துக் கொண்டு மண்ணுலகம் வந்தான். ஜின்களுடன் போரிட்டு அவர்களை அடிபணிய வைத்தான். அதனைத் தொடர்ந்து அல்லாஹ் அஸாஸீலுக்கு மண்ணகத்தின் ஆட்சியையும் முன் வானத்தின் ஆட்சி உரிமையையும் கொடுத்து சுவனத்துக் கருவூலங்களையும் வழங்கினான். இதனால் அஸாஸீல் விண்ணகத்திலிருந்து மண்ணகத்துக்கு அடிக்கடி வந்து போ கலானான். இந்தப் பதவிகளால், அஸாஸீலுக்கு மமதையும் பெருமையும் தலைக்கேற ஆரம்பித்தன. இறைவனுக்கு அடுத்தபடியாக நான் தான் பெரியவன் என்ற கர்வம் வளர ஆரம்பித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு நாள் வானவர்கள் "லவ் ஹுல் மஹ்பூல்" பலகையின் அருகில் சென்ற போது, அதில் இறையாண்மையை நெருங்கிய ஒருவர் "என்றென்றும் இறை சாபத்திற்கு இலக்காகி இழிவடைவார்" என்று பொறிக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கும் வாசகங்களை கண்டனர். அந்த வாக்கியம் அவர்களைப் பெரிதும் துயரத்தில் ஆழ்த்தியது. அந்த நிலைக்கு ஆளாகிறவர் யார்? ஒருவேளை நாமாக இருக்குமோ என்ற ஐய வினாக்கள் அவரவர் முகவதனங்களிலும் துளிர்விட்டன. இதனை அவர்கள் மூலம் அறிந்து கொண்ட அஸாஸீல் "நீங்கள் கவலைப்படாதீர்கள், அது நானோ உங்களில் எவருமோ ஆக இருக்காது." என்று அனைவரையும் ஆசுவாசப்படுத்தினான். அந்த அளவு அவன் மீதும் அவனுக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது.

அஸாஸீல் என்பது சுர்யாணி மொழியில் குறிப்பிடப்படும் ஒரு பெயராகும். அது பெரிய ஷாத்தான் - இப்லீஸ் என்பதைக் குறிக்க பயன்படுத்திய பெயராகும். இப்லீஸ் என்பதற்கு நிராசைக்காரன் என்பது பொருள். அல்லாஹ்வின் கட்டளையை மீறி அவனுடைய அன்பைப் பெறுவதை விட்டும் அஸாஸீல் நிராசைக்காரனாகி விட்டதால் இது காரணப் பெயராகிவிட்டது. ஷைத்தான்களுக்கெல்லாம் தந்தை இப்லீஸ், ஜின்களுக்கு தந்தை ஜான் என்று கஷ்புல் அஸ்ரார் என்ற நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

காலச் சக்கரச் சுழற்சியில் யுகத்துக்கு யுகம் அல்லாஹ் ஒன்றன் பின் ஒன்றாக மனிதனல்லாத வெவ்வேறு தோற்றங்களில் எமது சிந்தனைக்கும் அப்பாற்பட்ட படைப்பினங்களை படைத்துக் கொண்டே இருந்திருக்கின்றான்.

காலச் சக்கரம் இப்படியாக உருண்டோடிக் கொண்டிருக்கையில் தான் மனித இனம் படைக்கப்படும் படலம் ஆரம்பமாகிறது. இந்தக் கட்டத்தில் பெரும் பதவி பொறுப்புக்களில் இருந்த அஸாஸீல் - இப்லீஸ் அல்லாஹ்வால் சபிக்கப்பட்டவனாக நிராசைக்காரனாக ஆளாக்கப்படுகின்றான். மனித குலத்தின் முதற் தந்தையாக ஆதிபிதா ஆதம்(அலை) அவர்கள் படைக்கப்படுகிறார்கள்.

அவரது உருவாக்கம், இப்லீஸ் இறை சாபத்திற்கு இலக்கான பின்னணி என்பன குறித்து அடுத்து வரும் அத்தியாயத்தில் பார்ப்போம். இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் ~02

## மனிதனைப் படைத்தல்

காலச் சக்கரம் சுழலச் சுழல, அல்லாஹ் ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு யுகத்திலும் மனிதனல்லாத வெவ்வேறு அமைப்பிலான சந்ததிகளைப் படைத்துக் கொண்டே இருந் தான்.

இவ்வாறு கால சக்கரத்திற்கு ஒரு சந்ததியாக 18 வகையான படைப்பினங்களை அல்லாஹ் படைத்திருக் கிறான். இதனை முதலாவது அத்தியாயத்தில் கண்டோம்.

அடுத்துவரும் கால சக்கரத்தில் தன் வல்லமையை யும் உள்ளமையையும் காட்ட வெளிப்படுத்த அல்லாஹ் நாடினான். "நான் பூமியில் கலீபாவாக - மனிதனைப் படைக் கப் போகிறேன்" என்று தனது எண்ணத்தை அல்லாஹ் மலக்குகளிடம் - அமரர்களிடம் வெளியிட்டான். அதைக் கேட்ட மலக்குகள்,

"இறைவா பூமியிலே இரத்தம் சிந்தி, அட்டூழியங்கள் செய்யும் அநியாயக்காரர்களையா (மற்றொரு) சந்ததியாகப் படைக்கப் போகிறாய்" என்று சந்தேகத்துடன் வினாத் தொடு த்தார்கள். ஏற்கனவே படைக்கப்பட்ட ஜின் முதலான படைப் பினங்கள் பூமியிலே புரிந்த அட்டகாசங்கள், அட்டூழியங்க ளின் அனுபவத்தை கொண்டே மலக்குகள் இவ்வாறு கூறி யிருக்கிறார்கள்.

அதற்கு அல்லாஹ் "நீங்கள் அறியாதவற்றையெல் லாம் நான் அறிந்தவனாக இருக்கின்றேன்". என்று பதிலிறு த்தான். (அல்குர்ஆன்- அல்பகரா : 30).

எப்போதுமே அல்லாஹ்வையே சதா துதித்து வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுக் கொண்டிருக்கும் மலக்குகள் அல்லாஹ்வின் கூற்று க்கு மறுமொழி பேசாது அப்படியே மௌனம் சாதித்தார்கள்.

பல தரத்திலும் பல இடங்களிலும் இருந்து எடுக்க ப்பட்ட பலவகை மண் என்பதால் தான், ஆதம் நபியின் சந்ததிகள் அந்தந்த இடத்து மண்ணைப் பொறுத்து பல நிறங்கள், பல குணங்கள், பல குரல்கள், பல உருவங்கள் கொண்டு வித்தியாசமாகக் காட்சி தருகிறார்கள். அவர்களது வாழ்விடங்களும் அவ்வாறே அமைந்திருப்பதைக் கண் கூடாகக் காணலாம்.

மனிதன் மரணித்து எங்கு அடங்கப்பட்டாலும் மனிதனி ன் முள்ளந்தண்டின் கீழ் பகுதியிலுள்ள அணுப்பிரமாணமான துகள் மட்டும் அழியாது, மண்ணிலே அடங்கியிருக்கும். இது அஜ்புஸனபு என்று அரபியில் அழைக்கப்படுகிறது.

இஸ்ராபீல் (அலை) அவர்கள் இரண்டாம் முறை சூர்-ஊது குழல் ஊதப்படும் போது, மஹ்ஷர் வெளியில் இந்த அஜ்புஸனபு என்ற அணுவிலிருந்துதான் மனிதன் மீண்டும் உயிர் பெற்று எழுகிறான். இந்த அஜ்புஸனபு துணிக்கை தான் ஆதம் (அலை) அவர்களைப் படைப்பதற்காக அல்லாஹ்வின் ஆணைப்படி, இஸ்ராயீல் (அலை) அவர்க ளால் அள்ளி எடுத்துவரப்பட்ட மண்ணில் அடங்கியிருந்த அணுவாகும்.

அமானிதமாக மண் மீண்டும் பூமியில் ஒப்படைக்க இஸ்ராயீல் (அலை) அவர்களாலேயே எடுத்து வரப்பட்டதால் மனித உடல் மீண்டும் பூமியில் சங்கமமாக மனித உயிரை க் கைப்பற்றும் பொறுப்பும் இஸ்ராயீல் (அலை) அவர்களி டமே ஒப்படைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இஸ்ராயீல் (அலை) அவர்களால் கொண்டு வரப்பட்ட மண் குழைக்கப்பட்ட பின்னர் அல்லாஹ்வின் நாட்டப்படி பிறக்கவிருக்கும் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்குரிய மண்ணையும் இந்தக் குழைத்த கலவையுடன் சேர்க்க அல்லாஹ் ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு கட்டளையிட்டான். எனவே ஜிப்ரீல் (அலை) அவர்களும் பிர்தௌஸ் எனும் சுவர் க்கத்துக்குரிய சங்கையான மலக்குகளும் ஏழாம் வான த்துக்குரிய மலக்குகளும் புறப்பட்டுச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் கட்டமிட்டுக் காட்டப்பட்டிருக்கும் தகவல்கள் அனைத்துமே அல்-குர்ஆன், அல்ஹதீஸ் மூல கிரந்தங்களிலன்றி கஸஸுல் அன்பியா மற்றும் இந்திய அறிஞர் டாக்டர் அப்துல் றஹீம் எழுதிய நபிமார்கள் வரலாறு உட்பட மற்றும் பல வரலாற்றுக் குறிப்புக்கள் என்பதை கருத்திற் கொள்ள வேண்டுகிறேன்.

மேலும் கஸஸுல் அன்பியா எனும் நூல் பின்வரும் சஹாபாக்களின் வாயிலாக கிடைக்கப் பெற்ற தகவல்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், க.்.ப் (ரலி), அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) க.்.புல் அ.்.பார் (ரலி), வ.்.பு (ரலி), வபுல் காஸிமுல் அக்மு (ரலி) அவர்கள்

# முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மண்

மதீனமா நகரில், மஸ்ஜிதுந் நபவியில் ரஸுல் (ஸல்) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட புனித பூமியிலிருந்து ஜிப்ரீல் (அலை) அவர்கள் மண் எடுத்து வந்தனர். அந்த மண் அல்லாஹ்வின் ஆணைப்படி ஜிப்ரீல் (அலை) அவர்கள், தஸ்னீம் எனும் சுவனத்து ஆற்று நீர் ஊற்றி குழைத்தார்கள். அது வெண்மையான முத்துப் போல் ஆயிற்று, சுவனத்திலுள்ள ஆறுகள் அனைத்திலும் அந்த முத்து அமுழ்த்தப்பட்டது. பின்னர் வானங்கள், பூமி, கடல்கள், யாவற்றினுடாகவும் சுற்றி வரப்பட்டது. அதன் பின் அந்த முத்து ஏற்கனவே குழைக்கப்பட்ட மண்ணுடன் சேர்ந்து மீண்டும் குழைக்கப்பட்டது. அது உலர்ந்த சுட்ட மண் போன்று கெட்டியாகியது.

"தட்டினால் சத்தம் வரக் கூடிய கறுப்புக்களி மண்ணால் மனிதனை நாம் படைத்தோம்" (அல்குர்ஆன் சூரா ஹிஜ்ர்- 20ம் வசனம்)

பின்னர் அல்லாஹ் அந்த மண்ணைக் கொண்டு தனது நாட்டப்படி (மனிதனை) ஆதமை உருவமைத்தான். பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலக்குகள் போகும் பாதையில் அதனை கிடத்தி வைத்தான். அப்போது அது பேச முடியாத, அசைவற்ற உயிரற்ற மண் உருவாகவே இருந்தது. மலக்குகள் முன்பு இது போன்ற ஒன்றைக் கண்டிராததினால், இந்த உருவத்தையும் அதன் நீளத்தையும் கண்டு அதிசயித்துப் போயிருக்கிறார்கள்.

ஏற்கனவே ஒவ்வொரு காலச் சக்கரத்திலும் படைக்கப்பட்ட 18 வகையோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகையிலான படைப்பினங்களோ மனிதனைப் போன்று அழகிய உருவில் இல்லாமையே மலக்குகளின் வியப்புக்குக் காரணமாகும்.

மலக்குகளைத் தொடர்ந்து அஸாஸீலும் அவர் அருகே போய்ப் பார்த்துவிட்டு, எதற்காகத் தானோ இவர் படைக்கப்பட்டிருக்கிறார்? எனக் கூறியவனாக அவர் மீது தட்டியும் அடித்தும் பார்த்தான். பின்னர் 'எனக்கு எதிரியாக வந்திருக்கிறார்' எனக் கூறியவனாக ஆதம் நபியின் வாயால் புகுந்து அவரின் பின் புறத்தால் வெளியேறியிருக்கின்றான்.

இவ்வாறு வெளிவந்த அஸாஸீல், இதில் விஷேடமாக எதுவும் இல்லை, ஏனைய உயிரினங்கள் போன்று உணவுக்கும், நீருக்கும், ஆசைக்கும், தேவைக்கும் இவரை வசமாக்கிக் கொள்ளலாம் என்றவாறு ஆதம் (அலை) அவர்கள் மீது காரி உமிழ்ந்தான். அந்த உமிழ் நீரை எடுத்து விடும்படி அல்லாஹ் ஜிப்ரீல் (அலை)க்கு பணிக்கவே, அவர் எடுத்து விட்டார்.

அந்த இடத்தில் பிடுங்கி எடுத்த அடையாளமாக சிறு பள்ளம் உண்டானது. அதுவே தொப்புள் குழியாக இன்றும் மனிதர்களிடம் காணப்படுகிறது.

## ஆதமுக்கு உயிரூட்டல்.

இப்போது அல்லாஹ் ஆதம் நபிக்கு உயிரூட்டினான். அது சம்பந்தமாக கஸஸுல் அன்பியா நூல் பின்வருமாறு விபரிக்கிறது.

ஆதம் நபியின் தலைப் பகுதிக்குள் புகுந்த ரூஹு உயிர் அங்கு சுற்றிச் சுழன்றது. தலையிலிருந்து உயிர் இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிலும் இறங்கியது. கண் பார்வை பெறவே அங்கிருந்து, மூக்கினுள் பிரவேசித்தது, அப்போது ஆதம் நபி தும்மினார். உடனே இறைவன் "ஜிப்ரீலே அந்த தும்மலைப் பிடித்து வைத்துக் கொள்ளும் நான் அதைக் கொண்டு, என் நல்லடியார் ஈஸா வைப் படைக்க விரும்புகிறேன்" என்று கூறினான்.

அந்த தும்மலில் இருந்து வெளிப்பட்ட றூஹிலிருந்தே மர்யம் (அலை) அவர்களை கருத்தரிக்கச் செய்து ஈஸா (அலை) அவர்கள் பிறந்தார்கள். அதனாலேயே ஈஸா றூஹுல்லாஹ் என்று அழைக்கப்படுகிறார்கள்.

தொடர்ந்து, றூஹு - உயிர் வாய்க்குள் நுழைந்த போது, ஆதம் (அலை) அவர்கள் 'அல்ஹம்துலில்லாஹ்'- எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே என்று மொழிந்தார்கள், இதுவே மனிதன் முதன் முதலாகப் பகர்ந்த வார்த்தையாகும்.

இப்போது ஆதம் நபியின் கழுத்துக்கு மேல் உள்ள பகுதி முற்று முழுதாக தொழிற்பட ஆரம்பித்தது. நாடி, நாள நரம்புகள் எல்லாம் உருவாகி, பார்வை, கேள்வி, பேச்சு என்பன இயங்க ஆரம்பித்தன.

இந்த சந்தர்ப்பத்தில் ஆதம் (அலை) அவர்கள் சுவன வாயிலை அண்ணாந்து பார்த்தார்கள். அதன் மேலே இறைவனின் திருப்பெயருடன் இன்னொரு பெயரும் இருப்பதைக் கண்டு அது குறித்து அல்லாஹ்விடம் வினவினார்.

"ஆதமே ! அவர் உனது எதிர் கால சந்ததியில் பிறக்கப் போகும் உமது மகன்மார்களில் ஒருவராவார். அவர் எனது இறுதி நபியாகவும் ரசூலாகவும் திகழப் போகிறார். என்று அல்லாஹ் பதில் கூறினான்.

பின்னர் ஆன்மா மார்பு வரை ஊடுருவியது. அது சதையோடு எலும்பும் தோலுமாக மாறியது. தொடர்ந்து தொப்புள் வரை இறங்கியது. அப்போதே ஆதம் (அலை) எழுந்து நிற்க முற்பட்டார். இயலவில்லை. அப்படியே இடுப்புக்குள் நுழைந்தது. ஆதம் நபி துள்ளிக் குதிக்க முயன்றார். அதுவும் முடியாது போனது.

"இறைவா என்னைப் படைப்பதை துரிதப்படுத்து"என்று

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூறினார். அதைக் கேட்ட மலக்குகள் "இவர் அவசரகாரராக இருக்கிறாரே" என்று தங்களுக்குள் கதைத்துக் கொண்டார்கள்.

"மனிதன் அவசரக்காரனாகப் படைக்கப்பட்டுள்ளான்" - (அல்-குர்ஆன்- 21ம் அத்தியாயம் 38ம் வசனம்)

உயிர் வயிற்றுப் பிரதேசத்திற்குள் பிரவேசித்தது. வயிற்றிலிருந்து உயிர்- ஆன்மா இடுப்பை அடைந்து, இரு கால்கள் ஊடாக வந்து, பாதம் வரையும் வரவே, முழு மனித உடலும் உயிர் பெற்று விடுகிறது.

உலர்ந்து கெட்டியான மண் எலும்பு, நரம்பு, இரத்தத்துடன் கூடிய உயிருள்ள சதைப் பிண்டமாக மாறியது. முழுமையாக மனிதன் உருப்பெற்று விட்டான்.

## ஆதம் - பெயரின் அர்த்தம்

ஆதம் என்ற சொல் பைபிளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது ஹிப்று மொழிச் சொல் என்று அல்லாமா ஜவ்ஹரியும் ஜவாலிஹியும் கூறுகின்றனர். ஆதிம் என்ற சமஸ்கிருத சொல்லுக்கு முதல் அல்லது புராதன மனிதன் என்று பொருள்படும். ஆதி என்ற தமிழ் சொல்லுக்கு "தொடக்கம்"அல்லது "முதல்" என்று பொருள்படும்அந்த வகையில் ஆதி மனிதன் **ஆதம்** என பெயர் சூட்டப்பட்டிருக்கலாம்.

தற்போது கிறிஸ்துவ ஆண்டு 2015 நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இயேசு - ஈஸா (அலை) அவர்கள் பிறந்து 2015 வருடங்கள் ஆகின்றன. இஸ்லாமிய வருடக் கணக்கில் 1437ம் ஆண்டு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

சூரிய வருடக் கணிப்பில் நபிகளார் பிறந்து தற்போது 1444 வருடங்களாகின்றன. அவர்கள் கி.பி. 571யில் பிறந்தார்கள் என இஸ்லாமிய வானியல் அறிஞர்கள் கூறியுள்ளனர். இது சந்திர வருடக் கணிப்பின் படி 1488 வருடங்களாகும்.

இதே போன்று ஆதம் (அலை) அவர்கள் பூவுலகிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடி வைத்து இற்றைக்கு சுமார் எட்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன, என்று இஸ்லாமிய கணிப்பீடு ஒன்று கூறுகின்றது. பைபிளின் கணக்குப்படி ஆதம் (அலை) அவர்கள் எமது ஹிஜ்ரி ஆண்டின் ஆரம்பத்துக்கு ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் படைக்கப்பட்டிருக்கிறார்கள்.

## மனுவும் மண்ணும்

ஆதம் (அலை) அவர்கள் மண்ணினால் படைக்கப்பட்டார்கள், மனிதனில் எப்படி மண் அடங்குகின்றது? இப்படியொரு ஐயம் எழுகிறதல்லவா? மண்ணிலே உயிர்ச் சத்துக்கள், கனியுப்புக்களுடன் பல தரப்பட்ட சேதனப் பொருட்களும் அடங்கியிருக்கின்றன. இவற்றை உள்ளே இழுத்து கிரகித்து விளையும் உணவு வகைகளையே மனிதன் உட்கொண்டு உடல் வளர்ச்சி பெறுகின்றான். மாமிச உணவுகளிலும் மண்ணின் சேர்மானங்களே அடங்கியிருக்கின்றன. எனவே இவற்றை உண்டு வாழும் மனித உடலில் மண்ணிலுள்ள கூறுகளே அடங்குகின்றன. மனிதன் மண்ணால் படைக்கப்பட்டுள்ளான் என்பதிலுள்ள யதார்த்தம் இதுவேயாகும்.

முழு உடலும் உயிர் பெற்ற ஆதம் நபிக்கு அல்லாஹ் நகத்தினால் ஆன ஆடைகளையே அணிவித்தான். அந்த ஆடை நாளுக்கு நாள் அழகாலும் ஒளியாலும் பிரகாசித்துக் கொண்டே இருந்தது. ஆதம் (அலை) அவர்களும் அழகொளிரும் ஆண் அழகனாகவே காட்சி தந்தார்கள். சுவனத்தில் அவர் தனித்துவத்துடன் வீற்றிருந்தார்.

ஆரம்பத்தில் அவர் படைக்கப்பட்ட போது அவரது பருமன், உயரம் பற்றி அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால் அவர் பூமியில் இறக்கப்பட்ட போது 60 முழம் - 90 அடி உயரம் உடையவராகவே இருந்துள்ளார். ஆதம் (அலை) அவர்கள் நிறை மனிதனாக்கப்பட்டு, உயிரூட்டப்பட்டவுடன் முதல் பணியாக அல்லாஹ் அறிவூட்டலையே ஆரம்பித்தான்.

விண்ணகம் மண்ணகம் எங்குமுள்ள எல்லாப் பொருட்களின் பெயர்களையும் ஆதம் நபிக்கு அல்லாஹ் கற்றுக் கொடுத்தான். உலகில் பேசப்படவிருக்கும் ஆயிரக் கணக்கான மொழிகளையும் கற்றுக் கொடுத்தான். சகல உயிரினங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் பேசக்கூடிய பாஷைகளையும் சொல்லிக் கொடுத்தான். சொல்லியும் கற்றும் கொடுத்த சகல பொருட்களினதும் தன்மை, தகுதி, பண்பு, பயன்பாடு அனைத்தையும் அறியச் செய்தான்.

## மேலான படைப்பு

பின்னர் வானவர்கள் எல்லோரையும் அழைத்து ஒரு சில பொருட்களைச் சுட்டிக் காட்டி அவற்றின் பெயர்களை இயம்பும்படி கேட்டான்.

அதற்கு மலக்குகள் எல்லோரும் ஏக குரலில் "அல்லாஹ்வே! உனது ஏவல் விலக்கல்களை எடுத்து நடப்பதையும் உன்னைத் துதி செய்வதையும் தவிர நாம் ஒன்றும் அறியோம்". என்று மலக்குகள் மறுமொழி பகர்ந்தார்கள்.

பின்னர் ஆதம் நபியைப் பார்த்து, அல்லாஹ் அவற்றின் பெயர்களைக் கூறும் படி கேட்டான். உடனே ஆதம் (அலை) அவர்கள். மிகவும் அழகான முறையில் அவற்றின் பெயர்களை எடுத்துரைத்தார்கள்.

எல்லாப் படைப்புக்களை விடவும் மனிதன் மிகவும் மேலானவன் என்பதை அல்லாஹ் இந்த இடத்திலே உணர வைத்தான். இதனையே பின்வரும் குர்ஆன் வசனங்கள் கூறுகின்றன.

"ஆதம் (அலை)க்கு அவன் அனைத்துப் பெயர்களையும் கற்றுக் கொடுத்தான். பின்பு அவற்றை மலக்குகளுக்கு எடுத்துக் காட்டி, அவற்றை நீங்கள் கூறுங்கள் என்றான். அப்போது அவர்கள் நீ தூய்மையானவன், நீ கற்றுத் தந்ததைத் தவிர வேறு அறிவு எமக்குக் கிடையாது. நீ நன்கறிந்தவனும் ஞானம் நிறைந்தவனுமாக இருக்கின்றாய் என்றனர். (பின்னர் இறைவன்) அவற்றின் பெயர்களை நீங்கள் கூறுங்கள் என்றான். அவற்றின் பெயர்களை அவர் (ஆதம்) அறிவித்த போது, "நான் பூமியிலும் வானங்களிலுமுள்ள மறைவானவற்றையும் நீங்கள் பகிரங்கப்படுத்துபவற்றையும் மறைக்கின்றவற்றையும் நன்கறிகிறேன்- என்று நான் உங்களிடம் சொல்லவில்லையா என்று கூறினான்". (அல்குர்ஆன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரதுல் பகரா 31 வசனம் முதல் 33 வரை)

அதனைத் தொடர்ந்து மலக்குகளை நோக்கி, ஆதம் நபிக்கு ஸுஜூது - சிரம் தாழ்த்தும் படி அல்லாஹ் பணித் தான். அல்லாஹ்வின் ஏவலை ஏற்று நடக்கும் மலக்குகள் அனைவரும் உடனே ஆதம் நபிக்கு ஸுஜூது செய்தனர். ஆணவமும் கர்வமும் கொண்ட அஸாஸீல் மாத்திரம் இறு மாப்புடன் சிரம் பணியாது நின்றான். நெருப்பினால் படைக்கப் பட்ட நான், மண்ணால் படைக்கப்பட்டவருக்கு ஏன் சிரம் தாழ்த்த வேண்டும்? என்று பெருமை பேசினான்.

"ஆதம் (அலை)க்கு சிரம் பணியுமாறு வானவர்களைப் பார்த்து நாம் கூறினோம். அவர்கள் அனைவரும் சிரம் பணிந்தனர், இப்லீஸைத் தவிர, அவன் மறுத்துவிட்டு, பெரு மையடித்தான். எனவே நிராகரிப்பவர்களில் ஒருவராக மாறி னான்.

(அல்குர்ஆன் - சூரதுல் பகரா 34 ம் வசனம்)

பின்னர் மலக்குகள் கூட்டம் அங்கிருந்து கலைந்தது. அது வரையும் ஆதம் நபிக்கு சிரம் தாழ்த்தாது வீறாப்புடன் இருந்த அஸாஸீலை நோக்கி அல்லாஹ் "இப்லீஸே நீ இங்கிருந்து இழிந்து விடு, எனது முனிவும் சாபமும் உன் மீது உண்டாகட்டும்" என்று சபித்தான். அன்று முதல் அஸாஸீல் இப்லீஸ் எனும் நிராசைக் காரனானான். மனித குலத்தை வழி கெடுக்கும் பரம வைரியானான். அதற்குரிய ஆற்றல், வசதி வாய்ப்புக்களைத் தரும்படி அல்லாஹ்விடம் மன்றாடிக் கேட் டுப் பெற்றுக் கொண்டான்.

இப்போது சுவனப் பூங்காவிலே ஆதம் (அலை) அவர்கள் தன்னந் தனியாக வீற்றிருந்தார்கள். அப்போது அவருக்கு மனித இயல்புடன் கூடிய ஒரு நீண்ட உறக்கத்தை அல்லாஹ் அளித்தான்.

வெள்ளிக்கிழமை தினம் ஒன்றில் அவர் நீண்ட உற க்கத்தில் இருக்கும் போது, அவர் அறியாதவாறு அல்லாஹ் அவரது இடது புற விலா எலும்பொன்றை எடுத்து, பெண் ஒருவரை - ஹவ்வா (அலை) அவர்களைப் படைத்து ஆதம் நபிக்கு அருகே வைத்தான். துயில் எழுந்த ஆதம் (அலை) அவர்கள் தன் அருகே அழகே உருவான பெண் ஒருவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருப்பதைக் கண்டு, அல்லாஹ்விடம் வினவினார்கள்.

"இவள் ஒரு பெண், தனிமையில் இருக்கும் உனக்கு துணைவியாகப் படைத்திருக்கிறேன். உயிருள்ளவர் மூலம் உண்டானவள் என்ற பொருள் பட இவளுக்கு ஹவ்வா என்ற நாமம் சூட்டியிருக்கிறேன். என்று அல்லாஹ் பதிலளித்தான்.

பின்னர் இருவரையும் சுவனத்தில் குடியிருத்தாட்டிய அல்லாஹ், இருவருக்கும் சுவனப் பூஞ்சோலையிலே ஒரு மரத்தை சுட்டிக்காட்டினான். அல்லாஹ் "அந்த மரத்தை நெருங்கவோ அல்லது அதன் கனியைச் சுவைக்கவோ கூடாது". என்று இருவருக்கும் கட்டளை பிறப்பித்தான்.

ஆதம் (அலை), ஹவ்வா (அலை) தம்பதி பூம்பொழில் நிறைந்த சுவனப் பூங்காவிலேயே வாழ்ந்து கொண்டிருந் தார்கள்.

அப்படியொரு நாள் சுவனப் பூங்காவிலே உலா வந்து கொண்டிருக்கையில், இப்லீஸ் தனது தந்திரோபாயங்களை பிரயோகித்து, சுவன வாயிலில் இருக்கும் பல தடைகளை யும் தாண்டி, சுவர்க்கத்தினுள் பிரவேசித்தான். ஆதம்(அலை) யிடம் பலமுறை பலவாறு முயன்றும் அவர் தடுக்கப்பட்ட மரத்தை அணுகவே மறுத்துவிட்டார். பின்னர் இப்லீஸ் ஹவ்வாவை நாடினான். பசப்பு வார்த்தைகளைப் பகர்ந்து தன் வலைக்குள் சிக்க வைத்துக் கொண்டான். அதன் விளைவு குறித்து குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

"ஷைத்தான் ஆதமிடத்தில் ஊசலாட்டத்தை உண்டு பண்ணினான். ஆதமே! நித்திய மரத்தையும் அழிந்து போகாத ஆட்சியையும் நான் உனக்கு சுட்டிக் காட்டட்டுமா? என்று கூறிய போது அவர்களிருவரும் அந்த மரத்திலிருந்து சாப்பிட்டனர். உடனே அவர்களிருவரினதும் வெட்கத் தலங் கள் வெளிப்பட்டுவிட்டன. சுவன இலைகளைக் கொண்டு அவற்றை அவர்கள் மறைக்கலானார்கள்". அல் குர்ஆன் - சூரா தாஹா - 121ம் வசனம்)

இருவரும் அம்மரத்தை அணுகினர், கனிகளைப் பறித்துச் சுவைக்க ஆரம்பித்தனர். மறுகணம் அவர்கள் நிர் வாண கோலத்தை அடைந்தனர். அப்போது இருவரும் தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த தவறை உணர்ந்து கொண்டனர். சுவனச் சோலை யிலே அங்கும் இங்கும் ஓடித் திரிந்தனர். அப்போது . . .!

"நீங்கள் இருவரும் மண்ணகம் சென்று விடுங்கள்" என்று அல்லாஹ்வின் ஆணை பிறந்தது.

நகத்தினாலான அலங்கார ஆடைகளே அவர்களுக்கு அணிவிக்கப்பட்டிருந்தனவென்று ஏற்கனவே குறிப்பிட்டிருந் தோம். அல்லாஹ்வின் ஆணையை மீறியதால், ஆடைகள் அகன்று சுருங்கின. அவை கை, கால், விரல்களின் நுனிக ளில் மாத்திரம் அடையாளத்திற்காக விடப்பட்டன. அவை தான் இன்றும் எமது கை, கால்களின் இருபது விரல்களிலும் நகங்களாகக் காட்சி தருகின்றன.

சுவர்க்கத்தில் அல்லாஹ்வால் தடுக்கப்பட்ட மரம், கனி குறித்து வாழை, அத்திமரம் உட்பட பல மரங்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

சுவனத்தில் தடுக்கப்பட்ட கனியை உண்டு அல்லாஹ் வின் ஆணையை மீறியமைக்காக ஆதம் (அலை), ஹவ்வா (அலை) பூவுலகுக்கு அனுப்பப்படும் போது கூட ஒன்றாக அனுப்பப்படாமல் வெவ்வேறு திசைகளிலும் இறங்கச் செய் தான்.

ஆதம் (அலை), ஹவ்வா (அலை) வழிகெடுத்த இப்லீஸ், அவனது சூழ்ச்சிக்கு கைகொடுத்த பாம்பு, மயில் ஆகியனவும் மண்ணகத்தின் வெவ்வேறு திசைகளிலும் எறியச் செய்தமை வரலாற்றுக் குறிப்பேட்டில் காணக்கிடை க்கிறது.

ஆதம் (அலை), ஹவ்வா (அலை) தம்பதி உலகில் எங்கே எந்த இடங்களில் வந்து வீழ்ந்தார்கள்? எங்கே வாழ்ந் தார்கள்? சந்ததிகள் பெருகி மண்ணுலகிலே மனித சஞ்சாரம் எப்படி அமைந்தது? இந்த விபரங்களுக்கெல்லாம் விடையும் விளக்கங்களும் அறிய அடுத்துவரும் அத்தியாயத்தை புர ட்டுவோம், இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் ~03

## மண்ணுலகில் முதல் தம்பதி

சுவர்க்கலோகத்தில் அமர்த்தப்பட்ட ஆதம் (அலை) ஹவ்வா (அலை) தம்பதி அல்லாஹ்வால் தடுக்கப்பட்ட மரத்தின் கனியைச் சாப்பிட்டு, அல்லாஹ்வின் கட்டளையை மீறியதன் காரணத்தினால் இருவரும் அங்கிருக்கும் தகுதியை இழந்தனர். அங்கிருந்து பூலோகத்தில் இறக்கப்பட்டார்கள்.

இச்சம்பவம் குறித்து மூஸா (அலை) அவர்களது காலத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

அல்லாஹ்வுடன் நேரடியாக கதைக்கின்ற ஆற்றலை அல்லாஹ் மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கியிருந்தான். இதனால் தான் மூஸா கலீமுல்லாஹ் என்ற சிறப்புப் பெயரையும் அவர்கள் பெற்றிருந்தார்கள். அத்துடன் தேவைகளை அல்லாஹ்விடம் மன்றாடிக் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும் செய்தார்கள்.

ஒரு நாள் மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விடம், தனக்கு முதல் தந்தை ஆதம் (அலை) அவர்களை காண்பிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். அப்போது அவருக்கு ஆதம் (அலை) அவர்களைச் சந்திக்க அல்லாஹ் ஏற்பாடு செய்தான். அதன்படி மூஸா (அலை) அவர்கள் ஆதம் (அலை) அவர்களைச் சந்தித்து ,

"நீங்கள் குற்றம் புரிந்து, மனிதர்கள் எல்லோருக்கும் சுவனப் பேறு கிடைக்காமலிருக்க வழி செய்து விட்டீர்களே" என்று மூஸா (அலை), ஆதம் (அலை) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு ஆதம் (அலை) அவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் அல்லாஹ்வின் தூதராகவும் அல்லாஹ் வோடு பேசக் கூடியவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்ணி யத்துக்குரியவரல்லவா? அப்படிப்பட்ட நீங்கள் என்னைப் படைப்பதற்கு முன்னர் விதியாக்கப்பட்ட ஒரு விடயத்தை பற்றியா குறை காண்கிறீர்கள்". என்று கேட்டார்கள்.

இச்சம்பவத்தின் மூலம், "மூஸா (அலை)யை ஆதம் (அலை) மிகைத்து விட்டார்கள்". என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். இச்சம்பவத்துடனான ஹதீஸை புகாரி, முஸ்லிம், முஅத்தா·., அபூதாவூத், திர்மிதி ஆகிய ஹதீஸ் கிரந்தங்கள் பதிவு செய்திருக்கின்றன.

இதன் தொடராக இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களும் தனது இஹ்யாவுல் உலூமுத்தீனில் குறிப்பிட்டி ருப்ப தாவது,

மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அல்லாஹ் மூஸா (அலை) அவர்களுக்கு ஆதம் (அலை) அவர்களை சந்திக்க வாய்ப்பளித்தான். அப்போது மூஸா (அலை) அவர்கள், ஆதம் (அலை) அவர்களைப் பார்த்து கனியை உண்டமை குறித்து குறை கூறினார். அதைக் கேட்டு ஆதம் (அலை) அவர்கள் மூஸா (அலை) அவர்களைப் பார்த்து,

"உமக்கு அளிக்கப்பட்ட தௌராத் வேதம் என்னைப் படைப்பதற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது" என்று கேட்டார்கள்.

"நாற்பது ஆண்டுகளுக்கு முன்" என்று மூஸா (அலை) அவர்கள் பதிலளித்தார்கள். உடனே ஆதம் (அலை) அவர்கள்

"தடுக்கப்பட்ட கனியை நான் உண்டதால் தான், சுவனத்தை விட்டும் அகற்றப்பட்டேன்". என்று "அதில் எழுதப்பட்டிருக்கிறதல்லவா"? என்று மீண்டும் கேட்டார்கள்.

மூஸா (அலை) அவர்கள் "ஆம்" என்று பதில் கூறினார்கள். ஆதம் (அலை) அவர்கள் "அப்படியானால் நான் படைக்கப்படுவதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே விதியாக்கப்பட்டுள்ள அந்தச் சம்பவம் குறித்தா குறை காண்கிறீர்கள்"? என்று ஆதம் (அலை) அவர்கள், பதிலளித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கேட்டு மூஸா (அலை) அவர்கள் மௌனியாகி விட்டார்கள்.

இவ்வாறு இஹ்யா உலூமுத்தீனில் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"நான் பூவுலகிலே எனது கலீபாவாக - பிரதிநிதியாக மனிதனைப் படைக்கப் போகிறேன்" என்ற கருத்தை மலக்கு கள் மத்தியிலே வெளியிட்டான். அதற்கு மலக்குகளிடமிருந் து தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயம் குறித்து, நாம் முன்னைய அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

எனவே முதல் மனிதன், ஆதம் (அலை), ஹவ்வா (அலை) தம்பதியை பூவுலகில் வாழ வைப்பதே அல்லாஹ் வின் நாட்டமாக இருந்திருக்கிறது. அதனாலேயே அவர்களது மனித பலவீனங்களை சுவனத்திலே பரீட்சித்து கனியை உண்ண வேண்டாம் என்று தடுத்தும், அதனை அவர் மீறி நடக்கச் செய்தும் சந்தர்ப்ப சூழ்நிலையை உருவாக்கிய அல்லாஹ் அவர்களைப் பூமியில் இறக்கி வைத்தான். எனவே இது அல்லாஹ்வின் நாட்டமேயாகும்.

ஆதம் (அலை)- ஹவ்வா (அலை) தம்பதி பூமியில் எந்த இடத்தில் இறக்கப்பட்டார்கள் என்ற வினா எழுகிறதல் லவா?

ஆதம் (அலை) அவர்கள் இந்தியாவிலுள்ள நூத் எனும் மலை மீதும் ஹவ்வா (அலை) அவர்கள் சவுதி அரேபியாவிலுள்ள ஜித்தா நகரிலும் இறக்கப்பட்டார்கள் என்பது இஸ்லாமிய அறிஞர்கள் பலரதும் கருத்தாகும்.

ஆதம் (அலை) அவர்கள் இலங்கையில் இருக்கும் பாவா ஆதம் மலை உச்சியிலே இறக்கப்பட்டார்கள் என்பத ற்கு பலமான ஆதாரங்கள் இருந்து வருகின்றன. குறித்த மலைக்கு அன்று முதல் இன்று வரை நிலவி வரும் பெயரும் இங்கு கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பூர்வீகக் குடி

ஆதம் (அலை) அவர்கள் பாவா ஆதம் மலை மீது இறங்கி அங்கிருந்த குகையொன்றிலே வாழ்ந்து வந்ததால் தொண்டு தொட்டு 'பாவா ஆதம் மலை' என்று அழைக்கப்பட்டு வந்திருக்கிறது.

இஸ்லாமிய ஆய்வாளர்கள் வரலாற்றாசிரியர்களில் ஒரு பகுதியினர் ஆதம் (அலை) அவர்கள் இந்தியாவில் இறங்கியதாகவும் மற்றும் ஒரு பகுதியினர் செரன்தீப் - இலங்கையில் இறங்கினார் என்றும் கூறிவருகின்றனர். இவ்விரு சாராராலும் முன்மொழியப்படும் இருவேறு இடங்களும் ஒன்றே. கடற்கோள் ஏற்பட முன்னர் குறித்த இருநாடுகளும் ஒரே நிலப்பரப்பில் இருந்ததால் இலங்கையும் ஹிந்த் என்றே அழைக்கப்பட்டிருக்கிறது.

முன்னர் இலங்கை, இந்தியா உள்ளிட்ட இரு நாடுகளும் ஒரே நிலப்பரப்பைக் கொண்டு, லெமூரியா கண்டம் என்ற பெயரில் விளங்கி வந்திருக்கிறது. கடற்கோள் ஏற்பட்டு லெமூரியா மூழ்கவே இலங்கை வேறாகி, ஒரு தீவாகியது.

ஒரே நிலப்பரப்பைக் கொண்டிருந்ததால் தான் அப்போது ஆதம் (அலை) அவர்கள் செரன்தீப்பிலிருந்து மக்காவுக்கு கால் நடையாகச் சென்றிருக்கிறார்கள். ஆனால் இம்மலையைத் தரிசிக்கும் பிற சமூகத்தவர்களோ இம்மலை குறித்தும் அதிலுள்ள பாத அடையாளம் குறித்தும் தம் நம்பிக்கையை வேறு விதமாக முன் வைக்கிறார்கள்.

# பிற சமூகத்தவர் பார்வையில் ஆதம் (அலை) யின் பாதம்

பாவா ஆதம் மலையில் பதிந்திருப்பது சிவ பெருமானின் பாதச் சுவடு என்ற நம்பிக்கையோடு இந்து சமயத்தவர்கள் அதனைத் தரிசித்தும் வழிபட்டும் வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மலைக்கு சிவனொளி பாத மலை என்ற பெயரையும் சூட்டியிருக்கிறார்கள்.

புத்தபெருமான் இலங்கை வந்த போது, அவர் பதித்துச் சென்ற பாத அடையாளமும் இம்மலை உச்சியில் இருப்பதாக பௌத்த மதத்தினர் நம்பி வழிபட்டு வருகின்றனர்.

ஆரம்ப கால கட்டங்களிலேயே ஆதம் மலையை தரிசிக்க வந்த தேசசஞ்சாரிகளும் வரலாற்றாசிரியர்களும் அங்கு பதிந்துள்ள பாதத்தின் அளவைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 11 சாண் நீளம் -அதாவது 5அடி 4 அங்குலம் நீளமும் 2 அடி 6 அங்குல அகலமும் கொண்டது என்பதே அநேக ஆய்வாளர்கள், தேச சஞ்சாரிகளின் குறிப்புக்களில் காண முடிகிறது.

இற்றைக்கு சுமார் 2550 வருடங்களுக்கு முன்னர் பிறந்த புத்தபெருமான் இன்றுள்ள சாதாரண மனிதப் பருமன், உயரம் உடையவராகவே இருந்துள்ளார் என்பது அவரது வரலாற்றுக் குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது.

எனவே மேலே கண்ட பிரமாண்டமான அளவுடைய பாதம் 90 அடி உயரமுடைய ஒருவரது பாதமாகவே இருக்க வேண்டும் என்பது தெளிவு.

புகாரி ஷரீப் ஹதீஸ் கிரந்தத்தில் பதிவாகியுள்ள 6227ஆம் ஹதீஸை நோக்குவோம்.

"சுவனத்தில் நுழையும் ஒவ்வொருவரும் ஆதம்(அலை) அவர்களது தோற்றத்தில் தான் நுழைவார்கள். அவரது உயரம் அறுபது முழம். மனிதப் படைப்பின் தோற்றம் இன்று வரைக்கும் தொடர்ந்து குறைந்து கொண்டே வந்திருக்கின்றது.

ஆதம் (அலை) அவர்கள் பூமியில் இறக்கப்பட்ட போது 60 முழம் உயரமுடையவராகவே இருந்திருக்கிறார்கள். எனவே இம்மலையில் பதிந்திருப்பது ஆதம் (அலை) அவர்களுடைய பாதமே என்று உறுதிப்படுத்தலாம்.

யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் மும்மதத்தினரும் இம்மலையில் பதிந்திருப்பது ஆதம் (அலை) அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடைய பாதம் தான் என்ற கருத்தை கொண்டிருக்கின்ற னர்.

ஆதம் (அலை)யை தொடர்ந்து தோன்றிய ஒரு சில கவும்கள் - சந்ததிகள் 40 முழம் உயரம் கொண்டவர்களாக விளங்கியிருந்ததை இஸ்லாமிய வரலாறு எடுத்தியம்புகிறது. இதனை இலங்கையின் ஒரு சில பகுதிகளில் காணப்படும் நாற்பது முழம் நீளமான ஸியாரங்கள் - கல்லறைகள் சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன.

தலை மன்னாரில் அடுத்தடுத்து 40 முழம் நீளமான இரண்டு ஸியாரங்களும், மன்னார் கீரி பிரதேசத்திலும் கிண்ணியா டொக்கியாட்டில் இரண்டும், புத்தளம், மாத்தளை கோட்டேகொடை, வலிகாமம், பாணந்துறை ஆகிய பகுதிக ளிலும் 40 முழம் நீளமான ஸியாரங்கள் - கல்லறைகள் காணப்படுகின்றன.

இந்தியாவின் இராமேஸ்வரத்தில் ரயில் நிலைய மே ற்குப் புறத்திலுள்ள கோயிலில் 40 முழம் நீளமான இரண்டு ஸியாரங்கள் காணப்படுகின்றன.



இந்தியாவின் இராமேஸ்வர புகையிரத நிலையத்திற்கு அருகேயுள்ள 40 முழம் உள்ள ஸியாரம்

இவை பற்றி அடுத்து வரும் அத்தியாயத்தில் மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களை அறியலாம். மேலும் வட இந்தியாவில் கடற்கரையை அண்டிய பகுதிகளிலும் 40 முழம் கொண்ட ஸியாரங்கள் காணப்படுகின்றன.

ஆதம் மலையை உள்ளடக்கிய இலங்கை, இந்தியா பிராந்தியங்களிலும் இன்று சான்று பகர்ந்து கொண்டிருக்கும் 40 முழம் நீளமான ஸியாரங்கள் - கல்லறைகள் ஆதம் (அலை)க்கு அண்மிய காலத்தில் வாழ்ந்த சந்ததிகளின் கல்லறைகள் என்று நம்ப இடமுண்டு.

## மன்னர்களின் பங்களிப்பு

இலங்கையின் சிங்கள மக்களின் வரலாறு ஆரம்பமாகும் விஜயனின் இலங்கை வருகைக்கு முன்பிருந்தே ஆதம் (அலை) அவர்களின் ஆரம்ப சந்ததிகள் இங்கிருந்தும் வெளி நாடுகளிலில் இருந்தும் வந்து இம்மலையைத் தரிசித்திருக்கிறார்கள்.

விஜயன்-குவேனி தம்பதியின் கானகம் அனுப்பப்பட்ட மகனும் மகளும் பாவா ஆதம் மலையிலுள்ள குகையொன்றில் குடித்தனம் நடத்தியதாக பௌத்த கிரந்தமான மஹாவங்ஸயவில் குறிப்பிடப்பட்டிருப்பதாக "ஸ்ரீ பாதஸ்தானய ஹா பெந்துனு பூஜா ஷாரித்ர" என்ற நூலில் 103ம் பக்கத்தில் பதியப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இம்மலை மீதுள்ள தொடர்பு காரணமாகவே இம்மலை மீது இவ்வாறான கவனம் ஈர்க்கப்பட்டிருக்கிறது. இது புத்தபெருமான் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இடம் பெற்ற நிகழ்வாகும்.

இலங்கை வந்த கௌதம புத்தர் இம்மலை மீது பாதம் பதித்தார் என்று பௌத்தர்கள் தெரிவிக்கும் நம்பிக்கை கூட ஏற்கனவே இம்மலை மீது இருந்து வந்த முக்கியத்துவம் காரணமாகவே புத்த பிரானும் இம்மலையைத் தரிசித்திருக்கிறார் எனலாம்.

புத்தரின் வருகையைத் தொடர்ந்து இம்மலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 1187-1196 வரை இலங்கையை ஆண்ட நிஸ்ஸங்க மல்லவ என்ற மன்னன் ஒரு முறை இம்மலையைத் தரிசித்து விட்டு, அங்குள்ள பகவாலென எனும் கற்குகையின் சுவரில் கல்வெட்டு ஒன்றைச் செதுக்கி, அறக் கொடையொன்றையும் வழங்கியிருக்கிறார்.

இதன் பின்னரே சிங்கள் மன்னர்களும் சிங்கள மக்களும் இம்மலையைத் தரிசிப்பதை வழக்கமாக்கிக் கொண்டனர். இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் மலைக்குப் போகும் வழிகளைச் செப்பனிட்டிருக்கிறார். முதலாம் இராஜசிங்க மன்னனின் காலத்திலே பௌத்தர்களின் கையிலிருந்து பாவாத மலையின் பிடி இந்துக்களின் கைகளுக்கு மாறியிருக்கிறது.

முதலாம் இராஜசிங்க மன்னன் பதவியாசையில் தந்தை மாயாதுன்னையை கொலை செய்துவிட்டு, ஆட்சியைப் பிடித்துக் கொண்டான். பின்னர் தான் செய்த பாவத்திற்கு பிராயச் சித்தம் தேட பௌத்த தர்மத்தில் முடியாதபடியால் இந்து மதத்தால் அதற்குப் பரிகாரம் காண முடியும் என்ற ஆலோசனையை அரிஸ்ட கீ வெண்டு பெருமாள் என்ற இந்து குரு முன்வைத்தார்.

இதனைக் கேட்டு, ராஜசிங்கன் சைவ மதத்தைத் தழுவி, பௌத்த மதத்திற்கு எதிரான செயல்பாடுகளில் ஈடுபட்டான். இதன் விளைவாகவே பௌத்தர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்த பாவாத மலை இந்துக்களிடம் வந்தடைந்தது. 19-04-1966 இல் வெளியான த சிலோன் ஒப்சேவர் ஞாயிறு பத்திரிகையில் குயிண்டஸ் பெர்னாந்து எழுதிய கட்டுரையில் மேற்கண்ட தகவல் பிரசுரமாயிருக்கிறது.

ஆரம்ப கால தேச சஞ்சாரிகள் இங்கு வருகை தந்த போது பாவாத மலையில் ஆதம் (அலை) அவர்களுடைய மகன் ஷீது (அலை)அவர்கள் குடியிருந்த குகையையும் தரிசித்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன.

ஏற்கனவே குறிப்பிட்டிருந்த முஸ்லிம்களுக்குரிய அறபு வாசகங்கள், மற்றும் அடையாளச் சின்னங்கள் என்பன வற்றைப் பேணிப் பாதுகாக்க முஸ்லிம்கள் கரிசனை காட்டத் தவறியதனால் இரு பேரினத்தவர்களின் ஆளுகையின் போது, இயற்கையாகவோ அல்லது வேண்டுமென்றோ அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்குலைந்தும், உருக்குலைக்கப்பட்டும் அடையாளம் தெரியாது மங்கி மறைந்திருப்பதே உண்மையாகும்.

காலப் போக்கில் முஸ்லிம்களும் பாவாத மலை தரிசனம் குறித்து அவ்வளவாக அலட்டிக் கொள்வதாகவும் தெரியவில்லை. காரணம் பாதச் சுவடு அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் ஒன்றாக இருந்த போதிலும் பயணச் சிரமங்களின் காரணமாகவும் பிறசமூகத்தவர்களின் அதீத பக்திப் பரவசமும் உணர்வு பூர்வமான தரிசனமும் இடம் பெறுவதால் முஸ்லிம்கள் இம்மலை தரிசனத்தில் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடையும் வரையான காலப்பகுதியில் ஆதம் மலையில் பதிந்துள்ள பாதச் சுவடு எத்தகைய உருக்குலைவுமின்றி அதன் அசல் அமைப்பிலே இருந்ததைப் பிரித்தானிய தேசாதிபதிகளின் சுய சரிதைக் குறிப்புக்களில் பதிந்து வைத்துள்ளனர். அதற்குப் பின்னரும் பாதச் சுவட்டை தரிசித்ததாக சொல்லும் பலர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.



பாவா ஆதம் மலையின் எழில் கொஞ்சும் அழகிய தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதம் மலை

பாவா ஆதம் மலை மஸ்கெலியா, இரத்தினபுரி எல்லைகளில் அமைந்துள்ளது. இது 7351 அடி உயரம் கொண்டது. மற்றும் சில நூல்களில் 7360, 7420 அடிகள் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதன் மேல் பகுதியில் 74 அடி நீளமும் 24 அடி அகலமும் கொண்ட ஒரு தளம் காணப்படுகிறது. இப்பகுதியில் தான் ஆதம் (அலை) அவர்களுடைய பாதப் பதிவு காணப்படுகிறது. பாதம் ஏற்கனவே குறிப்பிட்டது போல 5 அடி 4 அங்குலம் நீளமும் 2அடி 6 அங்குல அகலமும் கொண்டதாகும்.

ஆதம் (அலை) அவர்கள் இந்தியாவின் தென் பகுதியிலுள்ள செரன்தீப்பில் இறங்கினார்கள் என்று சஹாபாப் பெருந்தகைகளான இப்னு அப்பாஸ் (ரலி), இப்னு உமர் (ரலி), அபூ ஹுரைரா (ரலி), அலி (ரலி) ஆகிய சஹாபாக்கள் அறிவித்துள்ளார்கள். இமாம் தபரானி (ரஹ்) அவர்கள் இந்த ஹதீஸைப் பதிவு செய்துள்ளார்கள்.

பேராசிரியர் மஹ்மூத் ஷாக்கிர், கலாநிதி ஷவ்கி, அபூ கலீல், வரலாற்றாய்வாளர் சாமி பின் அப்துல்லாஹ் ஆகியோர் தம் வரலாற்று ஆய்வுகளிலும் வரைபட நூல்களிலும் ஆதம் (அலை) அவர்கள் இலங்கையில் இறங்கியதான தகவல்களைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

பிரபல்யம் வாய்ந்த முஸ்லிம் தேச சஞ்சாரிகளான இப்னு பதூதா, இப்னு கதீர், த∴லபி, அல் ய∴கூபி, இப்னு அஸாக்கீர், அபுல் பரஜ், அல்-அஸ்பஹானி, அல்-மஸ்ஊதி மற்றும் தபரி போன்ற புகழ் பெற்ற வரலாற்றாய்வாளர்களும் தேச சஞ்சாரிகளும் தமது நூல் குறிப்புக்களில் ஆதம் (அலை) அவர்கள் இலங்கையில் இறங்கியதாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இப்னு குர்தாத்பே என்ற பாரசீகப் பயணியும் செரன்தீப்பில் தான் ஆதம் (அலை) அவர்களின் முதல் பாதச் சுவடு பதிந்திருக்கிறது என்று அவரது 'வழிகளும் அரசுகளும்' என்ற நூலில் (கி.பி. 844-848) எழுதியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள் மஸ்ஜிதுந் நபவியில் அமர்ந்திருக்கையில், "இந்தியாவின் தென் திசையிலிருந்து ஆதி இஸ்லாத்தின் தென்றலை உணர்கிறேன்" என்று கூறியதாக நபிமார்கள் வலராறு நூலில் பதியப்பட்டிருக்கிறது.இது ஆதம் (அலை) அவர்கள் இலங்கையிலிருந்து தான் வாழ்வை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை உணர்த்துவதாக இருக்கிறதல்லவா?

கி.மு 300ம் ஆண்டில் எகிப்து நாட்டை ஆட்சி செய்த, கிரேக்க பரம்பரையில் பிறந்த அலெக்சாண்டர் தனது உலக தரிசனத்தின் போது, இலங்கை வந்து பாவா ஆதம் மலையையும் தரிசித்திருக்கிறார். அதன் போது ஆதம் மலையை ஏறுவதற்காக அவருடைய கப்பலில் இருந்த சங்கிலியைக் கொண்டு வந்து பொருத்தியிருக்கிறார். இந்தச் சம்பவம் வரலாற்றுக் குறிப்புகள் பலவற்றிலும் பதிவாகியிருக்கிறது.

அலெக்சாண்டருடன் அவருடைய படைத்தளபதியும் புவியியல் ஆய்வாளருமான தொலமியும் இலங்கை வந்திருக்கிறார். உலக தரிசனத்தை முடித்த பின்னர் தொலமி உலகப்படத்தை வரைந்தார். அதில் இலங்கையையும் குறித்த அவர், இலங்கைக்கு, 'தப்ரபேன்' என்பதாகப் பெயர் வைத்தார். தப்ரபேன் என்ற கிரேக்க மொழிக்கு இரண்டாம் உலகம் என்பது பொருளாகும்.


கடலோடி தொலமியினால் வரையப்பட்ட இலங்கை வரை படம் "தப்ரபேன்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் மனிதன் ஆதம் (அலை) படைக்கப்பட்ட சுவனலோகத்திலிருந்து, பூலோகத்திற்கு இறக்கப்பட்டதால் இந்த உலகத்தில் அவர் இறங்கிய இடம் இரண்டாவது உலகம் என்ற கணிப்பீட்டிலே இலங்கைக்கு தொலமி இரண்டாம் உலகம் - தப்ரபேன் என்று பெயர் சூட்டியிருக்கிறார்.

மஹா அலெக்சாண்டர் தான் துல்கர்னைன் என்றும், அவர் நபிமார்களில் ஒருவராக விளங்கியவர் என்றும் சில ஆய்வுகளில் பதிவாகியிருக்கின்றன. தொலமி அவரது மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொரு வரலாற்றுப் பதிவின் படி அறபு நாட்டிலிருந்து துல்கர்னைன் ஆதம் மலையை தரிசிப்பதற்காக இலங்கை வந்திருந்த போது, அவருடன் உஸைர் என்ற தத்துவப் பேரறிஞரும் வந்ததாக குறிப்பிட்டிருக்கிறது. ஹிள்ர், ஹயாத்து நபி என்றெல்லாம் அழைக்கப்படுபவரும் வந்திருக்கின்றார். இவர் மூஸா (அலை) அவர்களின் மானசீக குரு என்ற சிறப்புக்கும் உரியவர்.



ஆதம் மலைக்கு ஏறும் வழியில் காணப்படுகின்ற மஹா அலெக்ஸான்டர் பொருத்திய இரும்புச் சங்கிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் துல்கர்னைன் அவர்களுடன் இலங்கை வந்து ஆதம் மலையை தரிசித்த பின்னர், கதிர்காமம் சென்றதாகவும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கி.மு. 1600களில் ஹிள்ர் (அலை) இங்கு கதிர்காமத்தில் தங்கியிருந்த போதே மூஸா (அலை) இலங்கை வந்து ஹிள்ர் (அலை) அவர்களிடம் பல விடயங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறார்.

அடுத்து உலகம் முழுவதையும் ஆளும் வல்லமை பெற்றிருந்த சுலைமான் (அலை) அவர்கள் சுமார் 2900 வருடங்களுக்கு முன்னர், கி.மு 900 ஆண்டுகளில் இலங்கை வந்திருக்கிறார். இதற்கு ஆதம் மலையே பிரதான காரணமாகும்.

சுலைமான் நபி இங்கிருந்து இரத்தினங்களோடு முத்துக்களையும் மயில் ஒன்றையும் எடுத்துச் சென்றிருக்கிறார்.

இந்த விலை மதிக்க முடியாத இரத்தினங்கள், முத்துக்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்களை சுலைமான் நபி ஸிபாவின் ராணி பல்கீஸுக்கு அன்பளிப்புச் செய்திருக்கிறார்கள்.

அல்லாஹ் வசப்படுத்திக் கொடுத்த காற்றின் உதவியுடன் சுலைமான் நபியவர்கள் உலக நாடுகளுக்கெல்லாம் விஜயம் செய்திருக்கிறார்கள். எறும்பு முதல், பறவைகள், உட்பட அனைத்து உயிரினங்களுடன் பேசக் கூடிய ஆற்றலையும் வல்ல அல்லாஹ் சுலைமான் நபியவர்களுக்கு கொடுத்திருந்தான். அத்துடன் ஜின்களையும் மேற்கூறியவாறு காற்றையும் வசப்படுத்திக் கொடுத்திருந்தான்.

சுலைமான் நபி யெமன் தேசத்தைச் சேர்ந்த பல்கீஸ் ராணியை மணம் முடித்ததாக வரலாறு குறிப்பிடுகிறது. இலங்கையிலிருந்து எடுத்துச் சென்ற மயிலே இவரது அரண்மனையில் வைக்கப்பட்டிருந்ததாகவும் வரலாற்றுக் குறிப்புக்களில் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நபி ஸுலைமான் (அலை)
அவர்கள் கோட்டை

இந்த அடிப்படையில் தான் 1804 இல் இலங்கைக்கு விஜயம் செய்த பிரித்தானியாவைச் சேர்ந்த புவிச்சரிதை வியலாளர் இலங்கையில் பல்வேறு இடங்களையும் உலகில் ஏனைய பிரதேசங்களில் காணப்பட்ட வரலாற்று நூற்கள் மற்றும் வேதங்களை அடிப்படையாகக் கொண்டு பெயரிட்டார்.

ஆதமின் பாலம், (ADAM'S BRIDGE) ஆதமின் உச்சி (ADAM'S PEAK) போன்ற வரலாற்று முக்கியத் துவம் மிக்க இடங்கள் அடையாளம் காணப்பட்டு வரலாற்று ஆய்வுக் குழுவின் சிபாரிசிக்கு இணங்க பொருத்த மான பெயர்கள் இடப்பட்டன.

இந்த வரலாற்று தொன்மை மிக்க பெயர்களினூ டாகவும் இலங்கை ஆதிமனிதனின் தாயகமாகவும் மனித நாகரீகத்தின் தோற்றுவாயாகவும் விளங்கியதை அறிந்து கொள்ளலாம்.

ஆதம் (அலை) இறக்கப்பட்ட இடம் சம்பந்தமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய வரலாற்று ஆய்வுக் குழுவினர் வேறு எந்த நாட்டையும் குறிப்பிடாததும் இங்கு நோக்கப்படல் வேண்டும். முதல் மனிதன் இலங்கையில் வாழ்ந்ததையிட்டு இலங்கையர் பெருமிதமடைவதில் களிப்படைய வேண்டும்.

மேற்கண்ட தகவல்கள், ஆய்வாளர் எம். எஸ். முஹம்மது ஜான்ஸின் எழுதிய இலங்கை முஸ்லிம்களின் வரலாறு என்ற நூலில் 41, 42ம் பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆதம் மலையைத் தரிசிக்கும் வரிசையில் உலக நாடுகள் பலவற்றுடனான வர்த்தகத் தொடர்புகளும் மேலோங்கியிருக்கின்றன. மத்திய கிழக்கு நாடுகளும் இவற்றில் சிறப்பிடம் பெறுகின்றன. குறிப்பாக யெமன் தேசத்துடனான வர்த்தக தொடர்புகள் குறிப்பிடத்தக்க முறையில் இடம் பெற்றிருக்கின்றன.

இங்கு ஏராளமான யானைகள் காணப்பட்டதால், பின் நாட்களில் யானைகளும் அறபு நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. 1500 வருடங்களுக்கு முன்பு யெமன் நாட்டின் சன்ஆ பிரதசத்தை ஆண்ட ஆப்ரஹா மன்னன் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட யானைகளையும் கொண்ட பெரும் படையொன்றையே வைத்திருந்தான்.

ரசூல் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் க.'.பாவை இடிக்க ஆப்ரஹா மன்னன் இந்த யானைப் படையுடனே வந்தான். அந்தப் பெரும் படையை சிறு பறவைக் கூட்டம் எறிந்த சிறிய கற்களாலே அழித்தொழிக்கப்பட்ட வரலாற்றை அல்குர்ஆனின் சூரா அல்-பீல் குறிப்பிடுகிறது. அதனாலேயே ரசூல் (ஸல்) அவர்கள் பிறந்த குறித்த ஆண்டு யானை வருடம் என்று அழைக்கப்படுகிறது.

இவ்வாறு நபிமார்களுடன் தொடர்புபட்ட நாடாக செரன்தீப் - இலங்கை விளங்கியிருக்கிறது. இலங்கையின் பூர்வீகக் குடிகள் முஸ்லிம்களே என்பதும் மேற்கண்ட வரலாற்றுச் சம்பவங்கள் மூலம் உறுதியாகிறது.

கி.பி 833 இல் வாழ்ந்த பைஹக்கி (ரஹ்) அவர்கள், ஆதம் (அலை) செரன்தீப் என்ற இலங்கையிலேயே இறக்கப்பட்டார்கள்'என்ற ஹதீஸைப் பதிவு செய்திருக்கிறார்கள். மற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொரு ஹதீஸில் ஆதம் (அலை) அவர்கள் ராஹுூன் என்னு மிடத்தில் இறக்கப்பட்டார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ராஹுூன் என்பது றுஹுூணு ரட்டை என்பதைக் குறிக்கும் பத மாகும். அறபிகள் வர்த்தக தொடர்புகளுக்கு காலித் துறை முகம் முன்பு பிரசித்தி பெற்று விளங்கியிருக்கிறது. ஆதம் மலையைத் தரிசிக்க வருவதற்கும் பெரும்பாலும் காலித் துறைமுகத்தினூடாகவே பிரவேசித்து ஆதம் மலையை அடைந்திருக்கிறார்கள்.

அதனாலேயே றுஹுூணு ரட்டை என்ற பெயரை வைத்து ராஹுூன் என்று இலங்கையை விளித்திருக்கிறார்கள்.

தென் கடற் பிராந்தியத்தில் சுமார் 20 மைல் தொலைவில் இருக்கும் போதே பாவாத மலை, கடற்பயணிகளின் கண்களுக்கு புலப்படுவதாகவும் அதனை வெளிச்ச வீடு போல அடையாளம் வைத்தே கப்பல்கள் தென் கடற்கரையில் நங்கூரமிடப்படுவதாகவும் கடற்சஞ்சாரிகள் தம் குறிப்புக்களில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

## ஆய்வாளர்கள், தேச சஞ்சாரிகள் பார்வையில் பாவாத மலை

ஒன்பதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் வாழ்ந்த சுலைமான் என்ற தேச சஞ்சாரி இம்மலையைத் தரிசித்து விட்டு, எழுதியுள்ள தம் குறிப்பில், இம்மலையில் சிவப்பு நிறம் கொண்ட மாணிக்கங்கள் கிடைத்ததாக எழுதியள்ளார். இவருக்கு பின் 60 ஆண்டுகள் கழித்து இங்கு வந்த அபூ ஸைத்து என்ற எழுத்தாளரும் கூட இந்த மலையில் கிடைக்கும் மாணிக்கம், வாசனைத்திரவியம் பற்றியும் எழுதியிருக்கிறார்.

இவர்களைப் போன்றே ஆயிரத்தோர் இரவுகள் கதையின் ஆசிரியர் சிந்துபாத்தின் ஏழாவது கடற் பிரயாணத்தின் போது, இலங்கையை தரிசித்ததாகவும் அங்குள்ள உயர்ந்த சிகரத்தில் ஏறியதாகவும் அந்த மலையில் சிகப்பு மாணிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கள், வாசனைத் திரவியங்களைக் கண்டதாகவும் எழுதியுள்ளார்.

அறபு நாடுகள் முதல் ஆபிரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், சீனா, உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் அப்போதிருந்தே ஆதம் மலை பிரசித்தம் பெற்று விளங்கி வந்திருக்கிறது. ஆதம் (அலை) அவர்களின் சந்ததிகள் உலகெங்கும் வியாபிக்கும் போது, தம் மக்களுக்கு ஆதம் (அலை) அவர்கள் தாம் முதன் முதலில் பாதம் பதித்த இடத்தையும் வாழ்ந்த இடத்தையும் அறியச் செய்திருக்கிறார்கள். அதன் காரணமாகவே இந்த இடத்திற்கு சந்ததிகள் வந்து போயிருக்கிறார்கள். இது வாழையடி வாழையாக நிகழ்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் மூலமே இந்த இடம் பலருக்கும் தெரிய வரவும் பிரசித்தம் பெறவும் வழிவகுத்திருக்கிறது.

இதுவன்றி, இந்த காடடர்ந்த மலை உச்சியில் ஏறி, பாதம் பதிந்திருப்பதை யாரால் தான் கண்டு கொள்ள முடிந்திருக்கும்?

## பெருவிரல் பெயர்த்தெடுப்பு

இந்த மலையைத் தரிசிக்க வந்த, சீன நாட்டு சஞ்சாரி பாஹியன் என்பவர், மேற்படி பாதத்தின் பெருவிரல் பகுதியைப் பெயர்த்தெடுத்துச் சென்று சீனாவிலுள்ள சைத்தூன் நகரக் கோவிலில் வைத்து பூஜித்து வந்ததாக குறிப்புக்கள் கூறுகின்றன. இதனையும் ஏ.பி.எம் இத்ரீஸ் தனது நூலில் பதிவு செய்திருக்கிறார்.

இலங்கைக்கு வந்த தேச சஞ்சாரிகளில் இப்னு பதூதா மிகவும் முக்கியமானவர். இவர் கி.பி 1344 இல் ஆபிரிக்காவின் தன்ஜீர் என்னும் இடத்திலிருந்து இலங்கை வந்திருக்கின்றார். இவருக்கு முன்னர் கி.பி. 942 இல் ஆதம் மலையைத் தரிசிப்பதற்காக இந்தியாவிலிருந்து இங்கு வந்த வேளையிலேயே இங்கே காலமான இமாம் அபூ அப்துல்லாஹ் என்பவரின் ஸியாரத்தையும் கண்டு தரிசித்ததாகவும் அவர் எழுதியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்ஸீர் பைளாவி, தப்ஸீர் காஸீன் ஆகிய சகல குர்ஆன் விளக்க நூல்களும் ஆதம் நபியவர்கள் செரன் தீப்பில் உள்ள நூத் எனும் மலை மீதே இறக்கப்பட்டார்கள் என்பதை உறுதி செய்திருக்கின்றன.

கி.பி 1293யில் இலங்கை வந்த மார்க்கோ போலோ ஆதம் மலையில் எமது முதல் தந்தையான ஆதமின் கல்ல றை இருக்கிறது என்று எழுதி வைத்திருக்கிறார். ஆதம் நபி யின் பாத அடையாளத்தைத் தான் அவர் கல்லறை என்று எண்ணியிருக்க வேண்டும்.

ஆதம் மலையிலுள்ள பாதத்தைத் தரிசிக்க வந்த அபூ அப்துல்லாஹ் என்ற செய்கு கைவிடப்பட்ட காடடர்ந்து போயிருந்த பாதையைக் கண்டு பிடித்ததாக இப்னு பதூதா தனது குறிப்பில் பதித்துள்ளார். பாதம் பதிந்துள்ள இடத்திற் கு ஏறிச்செல்ல இரு வழிகள் இருக்கின்றன. என்பதையும் அவர் குறிப்பிடுகிறார். ஒன்று இரத்தின புரி ஊடாக ஏறும்வழி, மற்றது மஸ்கெலியாவிலிருந்து ஏறக் கூடிய வழி. இதனை ஆதம் வழி என்றும் இரத்தினபுரி வழியை ஏவாள்- ஹவ்வா வழி என்றும் பெயரிட்டிருக்கிறார்கள்.

ஆதம் வழி கரடு முரடான பாதையாகும். ஏறுவதற்கு கடினம் என்று கூறப்படுகிறது. ஏவாள் வழி ஏறுவதற்கு எளி தான அமைப்பில் இருக்கிறது. ஆனால் இப்பாதை வழியாகச் செல்வது, புனித யாத்திரையாகக் கருதப்படுவதில்லை என்ற கூற்றையும் இப்னு பதூதாவின் பதிவு குறிப்பிடுகின்றது.

ஏவாள் வழியின் கீழே ஷியாம் என்பவரின் குகையொ ன்று இருப்பதாகவும், ஷியாம் என்பவர் ஆதம் (அலை) அவர் களின் மகன் ஷீத் (அலை) என்றும் இப்னு பதூதாவின் குறி ப்பில் மேலும் பதியப்பட்டிருக்கிறது.

ஆதம் வழியை பாபா வழி என்றும், ஏவாள்- ஹவ்வா வழியை மமா வழி என்றும் அழைத்திருக்கிறார்கள். இப்பதங் கள் தாய், தந்தை என்பதைக் குறிக்கும் அறபுச் சொற்க ளாகும். இங்கு வந்த அறபிகளாலேயே இப்பதப் பிரயோகம் இடம் பெற்றிருக்கிறது.

கி.பி. 1332ம் ஆண்டில் இலங்கை வந்த ஆங்கில தேச சஞ்சாரி சேர் ஜோன் மண்டர்வில், ஆதமும் ஏவாளும் ஆபே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லின் மரணத்தையிட்டு துக்கம் அனுஷ்டித்த இடம் இம்மலையாகும் என்று கூறுகிறார். ஆபேல் என்று கிறிஸ்தவர்கள் விளிப்பது, ஆதம் (அலை) அவர்களின் இரண்டாவது புதல்வர் ஹாபீலையாகும்.

ஆர். எஸ். புரோஹியர் என்பவர் "ஸ்ரீபாத மலையின் வசீகரம்" எனும் தலைப்பில் 1962-02-05ம் திகதி த சிலோன் டெய்லி நியுஸ் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில்,

'மலை உச்சியிலிருந்து சுமார் 100 அடி தூரத்தில் அமைந்துள்ள குகையின் சுவரில், 12ம் நூற்றாண்டில் முஸ்லிம் யாத்திரிகர் ஒருவரால் கல்வெட்டொன்றும் செதுக்கப்பட்டுள்ளது.

அதில் 'முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மனித குலத்தின் சிரேஷ்டமானவர்' என்று பொறிக்கப்பட்டுள்ளது என அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆதம் மலை உள்ள பிரதேசம் இதமான சுவாத்தியம் கொண்ட பகுதியாகும்.

## கண்ணீர் ஆறு

ஆதம் (அலை) அவர்கள் செரன்தீப்பில் - இலங்கையில் இறங்கியவுடன் சுவனத்தில் தாம் செய்த தவறை எண்ணி கண்ணீர் வடித்தார்கள். மலை உச்சி மீது ஒற்றைக் காலில் நின்று வானத்தை அண்ணாந்து பார்க்க வெட்கப்பட்டவராக தலை குனிந்து பாவ மன்னிப்புக் கேட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு நீண்ட நாட்களாக ஒற்றைக் காலில் நின்று, அழுது தெளபாக் கேட்டு மன்றாடியிருக்கிறார்கள்.

ஆதம் (அலை) இம் மலை உச்சியில் ஒற்றைக் காலில் நின்றவாறு நீண்ட நாட்கள் பாவ மன்னிப்பில் ஈடுபட்டிருந்ததால் தான் 60 முழம் உயரமான மாபெரும் மனிதனின் பாரம் தாங்கும் பாதம் மலை மீது பதிந்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிமார்கள் ஒரு கல்லின் மீது சில மணி நேரம் தொடர்ந்து நின்றால், அந்தக் கல்லில் அவர்களின் பாத அடையாளம் பதிந்து விடும் என்பதாக மார்க்க அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த வகையிலேயே இப்றாஹீம் (அலை) அவர்களின் கால்பாதம் பதித்த கல் க.்.பதுல்லாவிற்கு அரு காமையில் காணப்படுகிறது.

ஆதம் (அலை) பாவ மீட்சிக்காக அழுத விதம் குறித்து ரசூல் (ஸல்) அவர்கள் குறிப்பிடுகையில், உலக த்திலுள்ளோரின் அழுகையை விட தாவூத் (அலை) அவர் களின் அழுகை அதிகமாகும். இவ்விரண்டையும் விட நூஹ் (அலை) அவர்களின் அழுகை அதிகமாகும். இம்மூன்றையும் சேர்த்தாலும் ஆதம் (அலை) அவர்களின் அழுகைக்கு ஈடாகாது மிக மிக அதிகமாகும் என்று கூறியிருக்கிறார்கள்.

மேற்படி தகவல்கள் கஸஸுல் அன்பியா மற்றும் டாக்டர் அப்துல் றஹீம் எழுதிய நபிமார்கள் வரலாறு முதலாம் பாகம் என்ற நூலிலும் பதியப்பட்டிருக்கிறது.

## இரத்தின தீபம்

இச் சிறிய இலங்கைத் திருநாட்டில் எல்லா வகை யான மிகப் பெறுமதி வாய்ந்த மாணிக்கக் கற்கள் நிறை யவே கிடைக்கப் பெறுகின்றது. சமீபத்தில் பல வெளிநாட்டு நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு இரத்தினக் கற் களை அகழ்ந்தெடுக்க முண்டியடித்துக் கொண்டு வருகின்ற னர். உலகில் இவ்வாறு எந்தவொரு நாட்டிற்கும் இல்லாத தனிச்சிறப்பு அல்லாஹ்வின் பேரளுளன்றி வேறில்லை. இவ்வதிசயம் ஆதம் (அலை) அவர்களின் கண்ணீர் ஆற்றின் காரணமென்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?

## சுவனத்துக் கருவூலங்கள்

ஆதம் மலையிலிருந்து பிரதான ஆறுகள் ஊற்றெடுத்து ஓடிக் கொண்டிருக்கின்றன. மலையைச் சூழவுள்ள பகுதிகளில் விலைமதிக்கவொண்ணாத இரத்தி னங்கள் விளைந்து கொண்டிருக்கின்றன. இப்பகுதிகளில் வாசனைத் திரவியம் மரம், செடி, கொடிகள் செறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. மூலிகைத் தாவரங்களுக்கும் பஞ்சமில்லை.

கனி வர்க்கங்கள், பழம் தரும் மரங்கள், என்று பரவலாக காட்சி தருகின்றன. இவையெல்லாம் சுவர்க்கப் பூஞ்சோலையையே நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன.

இவற்றின் சிறப்புக்கள் குறித்து, தேசசஞ்சாரிகள் பலரும் விதந்துரைத்துள்ளார்கள். சுவனத்துக் கரூவூலங்களாகக் கருதப்படக் கூடிய இயற்கையின் அருட்கொடைகள் யாவும் இங்கு காணப்படுவதற்கு ஆதம் (அலை) அவர்கள் இறங்கிய இடம் என்பதே காரணமெனலாம்.

13ம் நூற்றாண்டில் வாழ்ந்த பூகோள நிபுணர் யாக்கூத் அல்குஸ்ரினி இலங்கையில் விளைந்த மூலிகைகள் மிகவும் மதிப்புள்ளவை, அறபு நாடுகளுக்கு தாராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டன என்ற குறிப்பையும் தந்திருக்கிறார்.

தன்னை நொந்து ஒற்றைக் காலில் நின்று அழுது புலம்பி பல நாட்களாக ஆதம் (அலை) அவர்கள் கேட்ட தௌபாவை - பாவ மன்னிப்பை அல்லாஹ் அங்கீகரித்தான்.

தொடர்ந்து என்ன நடந்தது? வெவ்வேறு திசைகளில் இறக்கப்பட்ட ஆதம்- ஹவ்வா தம்பதியின் சந்திப்பு, பூவுலகில் முதல் தம்பதியின் இல்லற வாழ்வு, மண்ணுலகில் மனித சஞ்சாரம், முதலாவது கொலை என்றெல்லாம் தொடரும் மனித வாழ்வின் பலம், பலவீனங்கள், என்பனவற்றை அறிய அடுத்த அத்தியாயத்தில் நுழைவோம். - இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் - 04

## மண்ணுலகில் மலர்ந்த மனித வாழ்வு

பாவா ஆதம் மலையிலிருந்து ஆதம் (அலை) அவர்கள் கேட்ட தௌபாவை அல்லாஹ் அங்கீகரித்தான். மக்கா சென்று புனித க.்.பாவை வலம் வரும்படி அல்லாஹ் கட்டளையிடுகிறான்.

ஜிப்ரீல் (அலை) அவர்கள் வழிகாட்ட ஆதம் (அலை) அவர்கள் மக்கா பயணமானார்கள். அங்கு வானவர்கள் முன்னர் வலம் வந்த க.்.பா இருக்கும் இடத்தை ஜிப்ரீல் (அலை) சுட்டிக்காட்ட, ஆதம் (அலை) அடையாளமிட்டு, அதனை வலம் வந்தார்கள்.

மனிதனால் - அதுவும் முதல் மனிதனால் முதன் முதலாக அமைக்கப்பட்ட ஆதி இறை இல்லம் க.்.பாதான். முதலாவதாக மனிதன் வழிபட்ட ஆலயமும் க.்.பாதான். இத்தகைய சிறப்பு க.்.பாவுக்குண்டு.

ஆதம் (அலை) அவர்கள் க.்.பாவை வலம் வந்த பின்னர் அல்லாஹ்வின் ஆணைப்படி இன்று அறபா என்றழைக்கப்படும் இடத்திற்குப் போகிறார்கள். அங்கு அவர் கண்ட காட்சி...!

மலைக்குன்று ஒன்றில் சாதுவான மாது ஒருவர், அமர்ந்திருப்பதைக் காண்கிறார். சோகமே உருவாக ஏக்கத்துடன் வீற்றிருக்கும் அந்தப் பெண்ணைக் கண்டு, ஆதம் (அலை) அவர்கள் பிரமித்துப் போகிறார்கள். உடனே வானவர் கோன் ஜிப்ரீல் (அலை) அவர்கள், ஆதம் (அலை) அவர்களை அணுகி "அப்பெண் வேறு யாருமல்ல, சுவனத்திலே உங்களுடன் இணையாகவிருந்த அன்புத் துணைவி ஹவ்வா (அலை) தான் என்று அறிமுகம் செய்து வைக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதம் (அலை) - ஹவ்வா(அலை) தம்பதி விண்ணகத்திலிருந்து மண்ணகம் அனுப்பப்பட்ட போது, ஆதம் (அலை) அவர்கள் செரன்தீப்பில் இறக்கப்பட, ஹவ்வா (அலை) அவர்கள் ஜித்தாவில் இறக்கப்பட்டார்கள். அவர் தன்னந் தனியாக இருந்த நிலையில், கணவரைத் தேடி பாலை வெளியெங்கும் அலைந்து திரிந்திருக்கிறார்கள். அப்போதே இந்தச் சந்திப்பு இடம் பெற்றிருக்கிறது.

ஒருவரை ஒருவர் இனம் கண்டு கொண்டதும் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இருவரும் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். சந்தித்த இடம் என்று பொருள் பட அந்த இடம் 'அறபா' என்ற நாமம் பெறுகிறது. ஹவ்வா (அலை) அமர்ந்திருந்த குன்று "ஜபலே றஹ்மத்" - அருள் குன்று என்ற சிறப்புப் பெயரையும் பெற்றுக் கொள்கிறது.

பின்னர் ஆதம் (அலை) அவர்கள், ஹவ்வா (அலை) அவர்களையும் அழைத்துக் கொண்டு செரன்தீப் வந்தார்கள்.

கால் நடையாக வரும் போது தென் இந்தியாவின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலை மன்னாருக்கும் இடையே உள்ள மண் திட்டே இவர்களின் பாதையாக இருந்தது.




ஆதமின் பாலம் என நாஸா வெளியிட்ட படம்

அதனாலேயே அந்தக் கடல்வழி '**ஆதம் பிரிஜ் - ஆதமின் பாலம்**' என்று இன்று வரையும் அழைக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று இப்பகுதி கடலுக்கும் சேது சமுத்திரம் என்ற பெயர் வழங்கப்பட்டிருப்பதும் மற்றொரு வரலாற்றுண் மையாகும்.

ஆதம் (அலை) அவர்களுக்கு மற்றொரு மகனாகப் பிறந்தவர் ஷீது (அலை) அவர்களாவார்கள். எனவே சேது சமுத்திரம் என்ற பெயரும் ஆதம் பாலம், ஆதமின் உச்சி என்ற பெயரும் ஆதம் (அலை)- ஹவ்வா (அலை) குடும்ப த்தின் ஆரம்ப வாழ்விடம் இலங்கை என்பதையே உறுதிப் படுத்துவதாகவே உள்ளன.

தலை மன்னாருக்கும் தனுஷ் கோடிக்கும் இடையே அமையப் பெற்றுள்ள மண் திட்டை ஆதமின் பாலம் என்று லங்காதீப பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டுரை யொன்று 2015-03-29ம் திகதி வெளிவந்திருக்கிறது.

மேற்படி பத்திரிகையில் தக்ஸலாவ என்ற இணைப்புப் பகுதியில் சாந்தகுமார விதான, அலெக்ஸாண்டர் பாலசூரிய இருவரும் மேற்படி பாலத்தின் படத்துடன் கட்டுரையை விபரித்திருக்கிறார்கள்.

இதுவும் ஆதம் (அலை) இலங்கையில் வாழ்ந்த தற்கான பிற சமூகத்தவர்களாலேயே முன் வைக்கப்படும் அத்தாட்சிகளில் ஒன்றாகும்.

மனுக் குலத்தின் முதற் தம்பதியான இவர்கள் ஆதம் மலையிலுள்ள கற்குகையொன்றில் ஆரம்ப வாழ்வைக் கழித்திருக்கிறார்கள். குடும்பம் பெருக மலையைச் சூழவுள் ள பகுதிகளில் குடியேறியும் இரத்தினபுரி, பலாங்கொடை, ஜெய்லானி மலைக் குகை, புளத்சிங்ஹல போன்ற பகுதிகளி லும் வாழ்ந்திருப்பதற்கான அத்தாட்சிகள் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் ஆய்வு தரும் சான்று

ஆதி மனிதர்களின் இல்லிடம் கற்குகைகள் என்பது வரலாறாகும். மனித குலத்தின் முதற் சந்ததியினரின் சஞ் சாரம் இலங்கையில் அதுவும் ஆதம் மலையை அண்டிய பகுதியில் தான் இடம் பெற்றிருக்கிறது. இதற்கான தொல் பொருள் ஆதாரங்கள் தற்போது வெளிவந்து கொண்டிருக் கின்றன.

பலாங்கொடை மற்றும் புளத்சிங்ஹள பகுதிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஆதிவாசிகளின் எலும்புப் பகுதி கள் இதனை உறுதி செய்கின்றன.

களுத்துறை, சப்ரகமுவ, தென் மாகாணத்தின் எல்லைகளில் அமைந்துள்ள புளத்சிங்ஹள - பஹியன் கலலென என்ற கற்குகையில் 2012ம் ஆண்டு கண்டெடுக்க ப்பட்ட எலும்புப் பகுதி, இலண்டன் நகரிலுள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலை கழகத்திற்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டிருந்தது. சுமார் மூன்று வருட ஆய்வின் பின்னர் அண்மையில், அதன் ஆய்வறிக்கை வெளியிடப்பட்டி ருக்கிறது. அதில் . . . !

'குறித்த எலும்புப் பகுதி சுமார் 10 ஆயிரம் வருடங்கள் பழமையானது, அது சுமார் 20-22 வயதில் மரணித்த ஒருவரு டையது'. என்பதே அந்த ஆய்வு தரும் விளக்கமாகும்.

இது ஆதம் (அலை) ஹவ்வா (அலை) தம்பதி வாழ்ந் த ஆரம்ப காலப் பகுதியை ஒத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புளத் சிங்ஹல பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய குகை

## எட்டாயிரம் வருட அகவையில் மனிதன்.

ஆதம் (அலை) அவர்கள் பூமியில் இறங்கிய காலத்தை இஸ்லாமிய அறிஞர்கள் கணிப்பீடு செய்து வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சுமார் எட்டாயிரம் ஆண்டுகளை எட்டிப் பிடிக்கும் கால எல்லையாகவே அவர்களது கணிப்பீடுகள் மூலம் உணர முடிகிறது.

இதன்படி ஆதம் (அலை) அவர்கள் பூவுலகில் வாழ்வை ஆரம்பித்து இற்றைக்கு சுமார் 7451 ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் கணிப்பை முஹம்மது இப்னு அஹ்மத் கியாஸுல் ஹனபி (ரஹ்) அவர்கள் பதாஹுஸ் ஸுஹுர் எனும் தனது நூலில் முன் வைக்கிறார்.

படைப்புக்கள் பற்றி பதிவு செய்திருக்கும் விவிலிய முதல் அதிகாரமான ஜெனஸிஸ் குறிப்பிடும் காலக்கணக்கும் இதனை உறுதி செய்கிறது.

ஆதம் (அலை) தம்பதி ஆரம்பத்தில் இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைந்த காய், கனி வர்க்கங்களையே உணவாகக் கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் இங்கு முதன் முதலில் உண்டது அத்திக்கனி என்று வரலாற்றுக் குறிப்பொன்று கூறுகிறது.

தொடர்ந்து அவர்களது வாழ்வுக்குத் தேவையான உணவுக்காக விவசாயம் செய்யவும் உடைத் தேவைக்காக நெசவுத் தொழில் மேற்கொள்ளவும் ஜிப்ரீல் (அலை) மூலம் வழிகாட்டப்பட்டது.

அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களைப் படைத்த போது, சுவனத்தில் வைத்தே அவருக்கு மொழிகளையும் தொழில் களையும் கற்றுக் கொடுத்தான். உலகில் இதுவரை என்னென்ன மொழிகள் பேசப்படுகின்றனவோ, உலகம் முடியும் வரை எத்தனை மொழிகள் தோன்றப் போகின்றனவோ அத்தனை மொழிகளையும் அல்லாஹ் அப்போதே கற்றுக் கொடுத்தான். அம் மொழிகளே அவரின் சந்ததிகளால் பேசப்பட்டு வருகின்றன.

இதே போன்றே தொழில் விடயத்திலும் ஆதி முதல் அந்தம் வரை என்னென்ன தொழில்கள் உலகில் உள்ளனவோ அத்தனை தொழில்களையும் அல்லாஹ்வால் ஆதம் (அலை) அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அல்லாஹ்வின் மேலான படைப்பல்லவா ஆதம் (அலை) - மனிதன்.

மனிதனை - ஆதம் (அலை)யை படைப்பதற்கு முன்னர் அல்லாஹ் மலக்குகளிடம் கூறிய வார்த்தை, மனிதன் மேலான படைப்பு என்பதாகும். அத்துடன் அல்லாஹ், தனது ஆற்றல்களை வெளிப்படுத்த நாடியே, தனது வல்லமைகள் மனிதனில் பிரதிபலிக்கும் வகையில், முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்களைத் தானே உருவமைத்து, சிருஷ்டித்தான். அதனால் எத்தகைய குறைவேதும் இல்லாத நிறைவான படைப்பாக மனிதன் விளங்குகிறான்.

மனிதனில் அறிவு, மொழி, தொழில், சிருஷ்டிப்பு, எல்லா ஆற்றல்களும் படிப்படியாக தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அவை உலகம் உள்ளளவும் தொடரவே செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்ததிகள் உருவாகல்

மனித வாழ்வுக்கு அடித்தளமிட்ட முதல் தம்பதிக்கு தலைப் பிரசவத்திலே ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாக இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. ஆண் மகவுக்கு காபில் என்றும் பெண் குழந்தைக்கு அக்லிமா என்றும் பெயர் சூட்டப்படுகிறது.

இரண்டாவது சூலிலும் ஆணும் பெண்ணுமாக இரு பிள்ளைகள் பிறக்கின்றன. இவர்களில் ஆணுக்கு ஹாபில் என்றும் பெண்ணுக்கு லபூதா என்றும் பெயர் வைக்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு சூலிலும் ஆணும் பெண்ணுமாக சோடி சோடியாக குழந்தைகள் பிறக்கின்றன. அல்லாஹ்வின் நாட்டப்படி துரிதமாக வளர்ச்சி கண்டார்கள். இதனால் சந்ததிப் பெருக்கமும் துரிதமாகியது.

முதல் சூலில் பிறந்த காபிலுக்கு இரண்டாம் பிரசவத்தில் ஈன்றெடுத்த லபூதாவையும் அவருடன் பிறந்த ஹாபிலுக்கு முதல் சூலில் பிறந்த அக்லிமாவையும் மணமுடித்து வைக்க அல்லாஹ் ஆணையிடுகிறான்.

காபிலுடன் பிறந்த அக்லிமா மிகவும் அழகு வடிவானவள். அதனால் காபில் அவளையே மணக்க நாடி அல்லாஹ்வின் ஏற்பாட்டை நிராகரித்தான். இதனால் காபில் - ஹாபில் இருவருக்குமிடையே மனக் கசப்பு வலுக்க ஆரம்பிக்கிறது.

ஆதம் (அலை) அவர்களோ, இது அல்லாஹ்வின் கட்டளை எனக் கூறி, காபிலை வற்புறுத்தி லபூதாவை மணமுடித்து வைக்கிறார். இவ்வாறே பின்னர் ஆண், பெண், சோடி சோடியாகப் பிறந்த மக்களுக்கும் மாறி மாறி திருமணங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

காபிலுக்கோ விருப்பத்திற்கு மாறாக நடந்த திருமணத்தில் திருப்தியில்லை. ஹாபிலைப் பலிவாங்கவே தருணம் பார்த்திருந்தான். இந்த நிலையில் காபில் - ஹாபில் இருவரதும் ஈமானைப் பரீட்சிக்க அல்லாஹ் ஒரு பலப் பரீட்சையை முன் வைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலப்பரீட்சையும் ஸக்காத்துக்கான அடித்தாளமும்.

காபில் ஜீவனோபாயத்திற்காக விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வந்தான். ஹாபில் மந்தை வளர்க்கும் தொழிலைச் செய்து வந்தான்.

இவர்கள் இருவரதும் தொழில் வருவாயிலிருந்து தருமம் செய்யும்படி அல்லாஹ் ஆணை பிறப்பித்தான்.

காபில் தனது தானிய விளைச்சலில் பாவனைக் குதவாத பொருட்களை எடுத்து தானம் செய்ய, அல்லாஹ் குறிப்பிட்ட மலை ஒன்றின் மீது வைத்தார். அதே போன்று ஹாபில் தனது மந்தையிலுள்ள மிகவும் திடகாத்திரமான ஓர் ஆட்டை எடுத்து அதனுடன் பால், வெண்ணெய் என்பனவற்றையும் சேர்த்து குறித்த மலை மீது பிறிதொரு இடத்தில் வைத்தார்.

புதல்வர்கள் இருவரினதும் தருமங்களை ஏற்கும்படி ஆதம் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் வேண்டினார்கள். வானிலிருந்து தீப்பிழம்பொன்று வந்தது. அது காபிலின் பழுதடைந்த தானியங்களை அணுகாது ஹாபிலின் ஆடு, பால், வெண்ணெய்யை நாடி வந்து காவிச் சென்றது.

ஆதம் (அலை) அவர்களுடைய காலத்தில் தானியங்களும் கால்நடைகளும் தான் புழக்கத்தில் இருந்தன. மேற்கண்ட சம்பவம் மூலம் ரசூல் (ஸல்) அவர்களுடைய காலத்தில் இஸ்லாத்தில் கடமையாக்கப்பட்ட சகாத் முறைமைக்கு ஆதம் (அலை) அவர்களின் காலத்திலேயே வித்திடப் பட்டிருப்பது புலனாகிறது. அல்லாஹ்வின் திட்டமிடலின் மகிமை தான் என்ன?

தனது தருமம் ஏற்கப்படாததைக் கண்டு காபில், ஹாபில் மீது மேலும் சினம் கொண்டான். சந்தர்ப்ப சூழ்நிலை இவ்வாறு இருக்கையில்தான் கஃபாவைத் தரிசிக்க ஆதம் (அலை) அவர்கள் மக்கா பயணமானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு பொறுமை, சகிப்புத் தன்மையுடன் இருந்தாலும் அண்ணன் காபிலால் தனக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆபத்து நேரலாம் என்பதை ஹாபிலும் உணர்ந்திருந்தார். இதனால் தந்தை மக்காவிலிருந்து திரும்பி வரும் வரையில், ஹாபில் அடிக்கடி மலை ஒன்றின் உச்சியில் ஏறி பதுங்கியிருந்தான். இப்படி இருந்த போது ஒரு நாள், காபில் தம்பியிருக்கும் இடத்தைக் கண்டு பிடித்தான். அப்போது ஹாபில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

இப்லீஸும் இந்த இடத்தில் நன்கு புகுந்து விளையாட ஆரம்பித்தான். ஆதம் (அலை) அவர்களைப் படைத்து, அவருக்கு ஸுஜூது செய்யும் படி அல்லாஹ்வால் பணிக்கப்பட்ட போது, முரண்பட்ட இப்லீஸ், ஆதம் (அலை) தம்பதியரையும் அவர்களது சந்ததியையும் வழி கெடுப்பதாக அல்லாஹ்விடம் சபதம் செய்திருந்தான்.

அதற்கான சகல விதமான ஆற்றல்களையும் ஏகன் அல்லாஹ்விடம் கெஞ்சியும் மன்றாடியும் கேட்டுப் பெற்றுக் கொண்டான். இப்போது ஹாபிலை எப்படி வஞ்சம் தீர்ப்பது என்று காபில் செய்வதறியாது திண்டாடிக் கொண்டிருந்தான். இந்தத் தருணம் பார்த்து, இப்லீஸ் ஒரு பாராங் கல்லை எடுத்து அங்கு வந்த பாம்பொன்றின் தலை மீது போட்டான். அது செத்து மடிந்தது.

## பூவுலகில் இப்லீஸின் முதல் சூழ்ச்சியும் காகங்கள் காட்டிய முன்மாதிரியும்

ஹாபிலையும் இவ்வாறு கொலை செய்வதற்கு காபிலுக்கு இப்லீஸ் இப்படி ஓர் உதிப்பை உணர்த்தினான். மறு கணம் . . . ! காபில் பாராங் கல் ஒன்றை எடுத்தான், தூக்கத்திலிருக்கும் ஹாபிலின் தலை மீது தூக்கிப் போட்டான். தலை நொறுங்கி ஹாபில் அந்த இடத்திலேயே உயிர் துறந்தார்.

உலகில் முதலாவது படுகொலை நடந்தேறிவிடுகிறது. காபில் படுபாவியாகிறான். இருபது வயது இளம் வாலிபப் பருவத்தில் ஹாபில் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாபிலின் உயிரற்ற உடலை என்ன செய்வது என்று தெரியாமல் காபில் திகைத்து நிற்கிறார். தம்பியின் பூதவுடலை தோளிலே சுமந்தவராக அலைந்து திரிகிறார். அப்போது அவர் எதிரிலே இரண்டு காகங்கள் வந்து சண்டை பிடிக்கின்றன. ஒன்றை மற்றொன்று கொலை செய்கிறது. உயிருள்ள காகம், தரையிலே குழியொன்றை அமைத்து இறந்த காகத்தை அந்தக் குழியுள்ளே தள்ளி மண்ணால் மூடி விடுகிறது.

இறந்த உடலை அடக்கம் செய்வதை உணர்த்துவதற்காக அல்லாஹ் காகங்களைக் கொண்டு காட்டிய முன்மாதிரி இதுவாகும்.

இதனை கண்டு காபிலும் தம்பியின் பூதவுடலை அவ்வாறே அடக்கம் செய்கிறார். ஹாபில் அடக்கம் செய்யப்பட்ட இடம் குறித்து இவ்வாறு ஒரு கருத்து நிலவுகிறது !

இந்தியாவின் இராமேஸ்வரத்திலுள்ள, புகையிரத நிலையத்திற்கருகேயுள்ள கோயிலுக்குப் பின் புறமாக இரண்டு சமாதிகள் இன்றும் இருந்து வருகின்றன. அவை ஹாபில், காபில் சகோதரர்களுடையது என்று பண்டு தொட்டு கூறப்பட்டு வருவதான தகவல் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

மேலும் அவற்றில் ஒன்று ஹாபிலுடையது மற்றையது ஹாபிலை அடக்கம் செய்வது எப்படி என்பதைக் கற்றுக் கொடுக்க வந்து இறந்த காகத்தினுடையது, என்றும் கூறப்படுகிறது. இதனை இந்து மக்கள் **காக்கை முனிவருடையது** என்று குறிப்பிடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இளம் வாலிபப் பருவத்திலே அன்பு மகன் ஹாபிலை இழந்ததால் ஆதம் (அலை)- ஹவ்வா (அலை) தம்பதி ஆழ்ந்த கவலையில் மூழ்கினர்.

பெண் ஆசைக்காக தம்பியைக் கொலை செய்த தனயன் என்ற அவப் பெயருக்கும், பழிச் சொல்லுக்கும் காபில் இலக்கானான். அல்லாஹ்வின் கோபத்திற்கும் ஆளானான். எவருடைய முகத்திலும் விழிக்க முடியாதவனாக அக்லிமாவையும் பலவந்தமாக அழைத்துக் கொண்டு, யெமன் தேசத்துக்கு ஓடி அங்கு அடைக்கலம் புகுந்தான். அந்நாட்டில் காட்டு மிருகங்களை வேட்டையாடி, கட்டுப்பாடற்ற முறையில் வாழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவுலகிலே முதன் முதலாக காபில் இப்லீஸின் வலையில் வீழ்ந்ததால், இப்லீஸும் தொடர்ந்து தனது கைவரிசையைக் காட்ட காபிலையும் அவனது சந்ததிகளை யும் நாடியிருந்தான். ஒவ்வொரு கட்டத்திலும் வழிகெடுக்கும் காயை நகர்த்திக் கொண்டே இருந்தான்.

அல்லாஹ்வின் ஆணைக்கிணங்க காபிலும் ஹாபிலும் மலை மீது வைத்த தர்மம் பொருட்களை தீப்பிழம்பு ஒன்ற ல்லவா வந்து எடுத்துச் சென்றது, இதனை இப்லீஸ் தனக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டான். இப்லீஸ் காபிலிடம் வந்து,

"நீ தீயை வணங்கு என்று தீயுரை பகர்ந்தான். மலை மீது வைக்கப்பட்ட தர்மப் பொருட்களை நெருப்புத் தானே வந்து, அள்ளிச் சென்றது" என்ற ஆதாரத்தையும் தீயோன் இப்லீஸ் முன் வைத்தான்.

காபிலும் அதனைச் சரி கண்டான். தீக் கோயில் ஒன்றை அமைத்து தீ வணக்க வழிபாட்டுக்கு வழிகோ லினான். இதனையே அவனது சந்ததியினரும் பின்பற்றி தொடரலாயினர்.

அல்லாஹ்வுக்கு இணை வைக்கும் வழிபாட்டுக்கு இது வே முதல் அத்திவாரமாக அமைந்தது. இதன் பின்னரே நெருப்பு, சூரியன், சந்திரன் என்று இணை வைப்புக்கு இப்லீ ஸ் மக்களைத் தூண்டி வெற்றியும் கண்டான்.

இப்லீஸ் வழிகெடுக்கும் நிலைப் பாட்டிலே கண்ணாக யிருந்து காரியம் சாதித்துக் கொண்டிருந்தான். மது. விபச் சாரம், திருட்டு, கொலை, கொள்ளை என்ற பஞ்ச மாபாதகச் செயல்களும் காபிலின் வழித் தோன்றல்களால் உலகில் அறிமுகமாகின.

இப்படி தீ வணக்கத்துடன் ஆரம்பமான தீச் செயல்கள் ஒரு புறம் வளர்ந்து கொண்டே போனது. ஏறக்குறைய பத்து நூற்றாண்டுகளில் நூஹ் (அலை) அவர்களின் காலத்தில் சிலை வணக்கமும் வழிகேடுகளும் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றன. இக் கால கட்டத்தில் சிலை வணக்கம் தலை தூக்கி, வாழ்வு நிலைகுழைந்து போன விளைவுகள் குறித்து அடுத்த அத்தியாயத்தில் நூஹ் (அலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் வரலாற்றுச் சுருக்கத்தில் படிப்போம்.

ஹாபில் கொலை செய்யப்பட்டு, மரணிக்கும் தருவாயில் ஆதம் (அலை) அவர்களுக்கு 130 வயதென்று என்று அறியக்கிடைக்கிறது.

## பகரமாகப் பிறந்த ஷீது (அலை) அவர்கள்.

ஹாபில் வபாத்தான துயரத்துடன் ஐந்தாண்டுகள் உருண்டோடின. பின்னர் ஹாபிலுக்கு ஈடாக அல்லாஹ் மற்றொரு மகவை ஆதம் (அலை) தம்பதிக்கு அருளினான்.

ஆதம் (அலை) அவர்களின் 135 வது வயதில் அவருக்கு அருமை மகனாக ஷீது (அலை) அவர்கள் பிறந்தார்கள். ஒவ்வொரு சூலிலும் ஆணும் பெண்ணுமாக இரட்டைக் குழந்தைகளை ஈன்றெடுத்த ஹவ்வா (அலை) அவர்கள் இப்போது, ஓர் ஆண் மகவை மாத்திரம் பிரசவித்தார்கள். மறைந்த ஹாபிலுக்குப் பகரமாகவே அல்லாஹ் தனிக் குழந்தையாக ஷீது (அலை) அவர்களை ஈந்து, ஈன்றெடுக்கச் செய்தான். **ஷீது என்ற பதத்துக்கு பகரம் என்று பொருள்** அமைவது குறிப்பிடத்தக்கது.

ஒரு புறத்தில் நல்லடியார்களும் மறு புறத்தில் வழி தவறியவர்களும் வளர்ந்து ஆதம் (அலை) அவர்களின் சந்ததிகள் பல்கிப் பெருகிக் கொண்டே இருந்தனர்.

ஆதம் (அலை) அவர்களுக்கு 500 வயது ஆகும் போது, அவருக்கு ஸுஹ்புகள் எனும் பத்து கட்டளைகளுடன் நபித்துவமும் வழங்கப்பட்டது. ஆதம் (அலை) அவர்கள் தொடர்ந்து அறப்போதனைகள் புரிந்து மக்களை நேர் வழியின் பால் வாழ வழி காட்டிக் கொண்டே இருந்தார்கள். ஆதம் (அலை) கஃபாவைத் தரிசிக்கச் செல்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

ஆதம் (அலை) அவர்களுக்கு இறுதிக் காலமும் நெருங்கிக் கொண்டிருந்த வேளையில், மக்கா பயணமானார்கள். இது செரன்தீப்பிலிருந்து செல்லும் நாற்பதாவது மக்கா பயணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதம் (அலை) க∴பாவில் கடமைகளை முடித்து விட்டு, வழமை போல் அறபா வெளியில் அமர்ந்திருக்கிறார்கள். அப்போது . . . !

"ஆதமே ! வீடு திரும்பும் முன் யெமன் தேசம் சென்று, அங்கு நேர்வழிகெட்டு, சீரழிந்து கொண்டிருக்கும் காபில், அக்லிமாவோடு, அவர்களுடைய சந்ததிகளையும் நேர்வழியின் பால் அழைத்து வாரும்". என்று இறை கட்டளை பிறந்தது.

அதனை ஏற்று யெமன் தேசம் ஏகிய ஆதம் (அலை) அவர்கள், ஏக தெய்வ வழிபாட்டையும் நன்நெறி வாழ்வையும் வலியுறுத்தி, மக்களுக்கு உபதேசம் புரிந்தார்கள்.

## அற்புதங்களைக் கண்டும் திருந்தாத உள்ளங்கள்.

வழிகேட்டில் இருந்த அந்த மக்களோ, அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபியென்றால் அற்புதங்கள் செய்து காட்டும் படி ஆதம் (அலை)யை கேட்டுக் கொண்டார்கள்.

உடனே நபியவர்களும் வன விலங்குகளை அழைத்தார். அவை அவர் முன்னே வந்து நின்றன. அவற்றைப் பார்த்து ஆதம் (அலை) "இம் மக்களுக்கு தீங்கு இழைக்கக் கூடாது" என்று அவற்றிடம் கேட்டுக் கொண்டார். அவை தலை தாழ்த்தி ஆதம் (அலை)யின் கூற்றை ஆமோதித்தன. பின்னர் மிருகங்களை வழியனுப்பி வைத்தார்கள்.

அதனைக் கண்டும் அம் மக்கள் திருப்தி அடையவில்லை. பின்னர் ஆதம் (அலை) அவர்கள், கற்பாறையொன்றிலிருந்து நீர் பீறிட்டு வரச் செய்து காட்டினார். பின்னர் தொலைவில் உள்ள மரம் ஒன்றை அழைத்தார். அது வேருடன் பெயர்ந்து மனிதன் நடந்து வருவது போன்று வந்தது. அப்போதும் மக்கள் திருப்தி காணாத நிலையில் கூழாங்கற்களைக் கையில் எடுத்து அவற்றைப் பேச வைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒன்றன் பின் ஒன்றாக அற்புதங்கள் பல நிகழ்த்திக் காட்டிய போதிலும் சொற்ப தொகையினரே நேர் வழியின் பால் திரும்பினர். பெரும்பாலான மக்கள் வழி தவறியோர் கூட்டத்திலே இருந்தனர்.

இப்லீஸும் தன் மாய வலையை வீசி வழிகெடுத்துக் கொண்டே இருந்தான். ஆதம் (அலை) அவர்கள் தம் இறுதிக் காலத்தை நெருங்கும் போது நோய் வாய்ப்பட்டார்கள். 21 நாட்கள் நோயிலே இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அன்பு மகன் ஷீது (அலை) அவர்களும் அருமை மனைவி ஹவ்வா (அலை) அவர்களும் அருகே இருக்க ஒரு வெள்ளிக்கிழமை தினத்தன்று ஆதம் (அலை) அவர்களது உயிர் பிரிகிறது. இன்னாலில்லாஹி வயின்னா இலைஹி ராஜிஊன். !



ஆதம் (அலை), ஹவ்வா (அலை) அவர்களது என ஒரு சிலரால் அழைக்கப்படும் தலைமன்னாரிலுள்ள அடுத்தடுத்தான 2 ஸியாரங்கள்

சுமார் ஆயிரம் வருடங்கள் வாழ்ந்ததால் ஆதம் (அலை) இறக்கும் போது, உலகில் நாலா திசைகளிலும் அவரது சந்ததிகள் பல்கிப் பெருகி, சுமார் 40000 பேர் அளவில் இருந்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதம் (அலை) அவர்கள் சந்திர வருடக் கணக்கின் படி சுமார் 960 வருடங்கள் வாழ்ந்ததாகவும், சூரிய ஆண்டுக் கணிப்பில் 930 வருடங்கள் என்றும் கூறப்படுகிறது.

அன்னாரின் பூதவுடல் அபூ குபைஸ் மலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஷீது (அலை) அவர்கள் இமாமாக நின்று ஜனாஸா தொழுகை நடத்தியிருக்கிறார்கள். பின்னர் அம் மலையடிவாரத்திலுள்ள, மகாரதுல் குன்ஸ் என்ற குகையில் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ், நூஹ் நபி காலத்தில் ஏற்பட்ட தூபான் என்னும் ஜலப் பிரலயத்தின் போது அபூ குபைஸ் எனும் மலைக் குகையில் அடங்கப்பட்டிருந்த ஆதம் நபியின் ஜனாஸா அடங்கிய பேழை நீரில் மிதந்து வந்த போது மக்காவுக்கு அண்மையிலுள்ள மினா எனுமிடத்தில் மஸ்ஜிதுல் கைபில் நல்லடக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆதம் (அலை) அவர்கள் மறைந்து சில காலத்தில் ஹவ்வா (அலை) அவர்களும் வபாத்தானார்கள். ஹவ்வா (அலை) அவர்கள் ஜித்தாவில் மரணித்ததாகவும் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டதாகவும் சில குறிப்புகள் கூறுகின்றன. ஜித்தாவில் "முகபர் ஹவ்வா" அதாவது ஹவ்வா (அலை) அவர்களின் அடக்கஸ்தலம் என்ற இடமொன்று இன்று வரை அந்தப் பெயரில் அழைக்கப்படுவது நோக்கப்பட வேண்டும். நபி நூஹ் (அலை) கால தூபான் வெள்ளத்தின் போது ஆதம் (அலை) அவர்களின் உடல் இருந்த பெட்டி மிதந்ததாகவும் பிறகு அது மஸ்ஜிதுல் கைபில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் ஒரு கருத்து உண்டு.

ஆதம் (அலை) அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு அருகே ஹவ்வா (அலை) அவர்களும் அடக்கம் செய்யப்பட்டார்கள் என்று குறிப்புக்கள் கூறுகின்றன.

ஆதம் (அலை) அவர்களை சுவனத்திலிருந்து வெளிப்படுத்தும் வேளையில் அவருக்குச் சொல்லப்பட்ட பிரகாரம் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டுவதற்காக வேதங்கள், ஸுஹ்புகள் எனும் வேதக் கட்டளைகள் வழங்கப்பட்ட, நபிமார்களையும் ரசூல்மார்களையும் அனுப்பப்பட்ட வரலாற்றினை அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினபுரியூடாக பாவா ஆதம் மலையைத் தரிசித்த வரலாறு

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அறபு தீப கற்பத்திலிருந்து வியாபார நோக்கமாகவும் ஆதிபிதா ஆதம் (அலை) அவர்கள் பாதம் பதித்த மலையைத் தரிசிப் பதற்காகவும் இங்கு வந்தவர்களில் ஒரு சந்தர்ப்பத்தில் 41 பேர் கொண்ட ஒரு குழுவினரும் இலங்கை வந்துள்ளனர்.

பொதுவாக இவர்கள் தென் கடற் பிராந்தியத்திலிருந் து களுகங்கையூடாக பயணித்து இரத்தினபுரி ஆற்றங் கரையில் இறங்கி, அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் முகா மிட்டு தங்கியிருந்துள்ளனர்.

அங்கிருந்து கால்நடையாக பாவாத மலையைத் தரிசிக்கச் சென்று மீண்டும் திரும்பி வந்து அதே இடத்தில் தங்கியுள்ளனர். குழுவில் வந்தவர்கள் வபாத்தாக அவ் விடத்திலே அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் தங்கியிருந்த போது தொழுகைக்காக 17 x 11 சதுர அடி அளவுள்ள தற்காலிக கொட்டில் ஒன்றையும் நிறுவியுள்ளனர். அந்தக் குழுவில் வபாத்தாகி அடக்கம் செய்யப்பட்டவர்களில் பெரிய ஒரு மகான் ஒருவரும் இருந்தி ருக்கிறார்கள்.

சூழவும் காடடர்ந்திருந்த இவ்விடத்தில் நடந்த நிகழ்வு பற்றி, உள்ளூர்வாசிகள் எவரும் அப்போது அறிந்திருக் கவில்லை. இவ்விடம் இரத்தினபுரி, குடுகல்வத்தை என்ற பிரதேசமாகும். இவ் விடத்தில் சற்றுத் தொலைவில் உள்ள பகுதியில் ஜபரூத் மௌலானா என்ற பெரியார் ஒருவரும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்திருக்கிறார்.

அவர் இரத்தினக் கற்கள், வாசனைத் திரவியங்கள். யானைத் தந்தங்கள், முத்துக்கள் முதலான உள்ளூர் விளை பொருட்களை சேகரித்து, அறபு நாடுகளுக்கு எடுத்துச் சென்று வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் அவர் தாயகம் சென்றிருந்த போது, அபூர்வமானதொரு கனவு கண்டிருக்கிறார். அக்கனவிலே, அவர் இலங்கையில் வியாபாரம் செய்யுமிடத்திற்கு சற்றுத் தொலைவில் களுகங்கையை அண்மித்ததாக ஓர் ஆல மரத்தடியில் ஒரு மகான் அடங்கப்பட்டுள்ளதாக கனவு மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளார். அத்துடன் அவர் மீண்டும் இலங்கை வரும் போது அவ்விடத்தை கண்டறிந்து, அடையாளமிட்டு ஸியாரத்துச் செய்யும்படியும் கனவிலே கேட்கப்பட்டுள்ளார்.

ஜபரூத் மௌலானா மீண்டும் இலங்கை வந்த போது, குறிப்பிட்ட இடத்தை தேடி அலைந்து இறுதியில் குடுகல்வத்தையில் ஓர் ஒதுக்குப் புறமாக குறிப்பிட்ட ஆல மரத்தை கண்டுபிடித்துள்ளார்.

பின்னர் சூழவுள்ளவர்களின் உதவியுடன் அவ்விடத்தை சுத்தம் செய்து ஒரு ஸியாரத்தையும் கட்டி அமைத்துள்ளனர். தொழுகைக்காக 40 x 40 சதுர அடி அளவுடைய தற்காலிக மண்டபம் ஒன்றையும் அமைத்துள்ளனர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்த இடத்திலே தங்கியிருந்த வேளையில் வபாத்தாகி அடக்கம் செய்யப்பட்ட 41 பேர்களில் மேற்படி மகானுடன் ஒரு பெண்ணும் வந்திருக்கிறார். அந்தப் பெண்ணின் பெயரை நினைவு கூரும் வகையில் தொழுகை மண்டபம் "**ஜென்னத்துப் பள்ளி**" என்று பெயர் சூட்டப்பட்டு இன்று வரைக்கும் அழைக்கப்பட்டு வருகிறது.

இத்தகவலை இரத்தினபுரி பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் எம்.எஸ்.எம். ஸரூக் அவர்கள் உறுதி செய்து வழங்கியுள்ளார்கள்.

இலங்கையில் 1809 முதல் 1821 வரை ஆங்கிலேய இராணுவத்தில் வைத்தியராக கடமையாற்றிய ஹென்றி மார்ஷல், இலங்கை குறித்து நூல் ஒன்றையும் எழுதியுள்ளார். அவரும் அப்போது மலைநாட்டுப் பிரதேசங்களுக்கு வரி அறவீட்டு ஆணையாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த சோயர்ஸ் என்பவரும் 1819 இல் ஆதம் மலையைத் தரிசிக்கச் சென்றபோது, அவர்கள் இருவரும் நேரடியாகக் கண்ட காட்சிகள் அவரது நூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி குறிப்புக்கள், வரலாற்றாய்வாளர், ரன்ஜனி மலவி பதிரண எழுதிய, "ஸ்ரீ-பாதஸ்தானய ஹா பெந்துணு ஷாரித்ர" என்ற நூலின் 132 முதல் 135ம் பக்கங்கள் வரையில் தரப்பட்டிருக்கின்றன. அந்த நீண்ட விரிவான குறிப்புக்களில், ஆதம் மலையில் பதிந்துள்ள பாதத்தின் நீளம் 5 அடி 6 அங்குலமும் அகலம் 2 அடி 6 அங்குலமும் ஆழம் கிட்டத்தட்ட 1½ - 2 அங்குலம் வரையிலும் இருந்ததாக அவர்கள் இருவராலும் நேரடியாகக் கண்ட கூற்று முன் வைக்கப்பட்டிருக்கிறது.

மற்றோர் ஆய்வாளரான சோமரத்தின எச்.எம். அல்லே பொல எழுதிய **'சிங்ஹலே'** என்ற ஆய்வு நூலில் குறிப்பிடப் பட்டிருந்த மேற்படி கூற்றே "ஸ்ரீ-பாதஸ்தானய ஹா பெந்துணு ஷாரித்ர" என்ற நூலிலும் எடுத்தாளப்பட்டிருக்கிறது.

மேலும் சா ஓ ஜுகுவா என்ற சீன சஞ்சாரியும், செரன்தீப் மலை மீது 7 அடிக்கு மேல் நீளம் கொண்ட மனித பாதம் பதிந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கும் கூற்றும் மேற்படி நூலில் 97ம் பக்கத்தில் பதிவாகியிருக்கிறது. 'விதேஷின் துடு புராண லங்காவ' என்ற நூலில் உள்ள குறிப்பே இங்கும் எடுத்தாளப்பட்டிருக்கிறது.

பாவா ஆதம் மலையில் 2 அடி அகலமும் சுமார் 8 அடி நீளமும் உடைய பாதம் பதிந்திருப்பதாக மற்றொரு சீன யாத்திரியான மாஹுவான் என்பவரும் கூறியிருக்கிறார். போர்த்துக்கேய இராணுவத்தில் கடமையாற்றிய ரிபெய்ரோ என்ற எழுத்தாளரும் ஆதம் மலையிலுள்ள பிரமாண்டமான பாதச் சின்னம் ஒரு ராட்சத மனிதனுடையது என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

போர்த்துக்கீச பரிபாலனத்தின் இறுதி எழுத்தாளராகக் கருதப்படும், 1635யில் இந்தியா கோவாவிலுள்ள மிஷனரியில் பாதிரியாராக இருந்த பர்ணாவோ க்வேரோஸ் என்பவரும் அவருக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் பாரிய அளவு பாதம் குறித்து பிரஸ்தாபித்துள்ளதுடன் ஆதம் மலையடிவாரத்தில், சுமார் 2000 பேர் அளவில் தங்கக்கூடிய பாரிய குகையொன்று இருப்பது குறித்தும் தகவல் வெளியிட்டிருக்கிறார். இக்குறிப்புக்கள் யாவுமே "ஸ்ரீ-பாதஸ்தானய ஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்துணு ஷாரித்ர" என்ற நூலின் 120 முதல் 124 வரையான பக்கங்களில் பதிவாகியிருக்கின்றன.

ஆங்கில இராணுவத்தில் மற்றொரு வைத்தியராகயிருந்த ஜோன் குடவ் என்பவரும், 5 அடி 7 அங்குல நீளமும் 3 அடி 7 அங்குல அகலமும் கொண்ட சீமெந்துக் கலவையால் சுற்றிக் கட்டப்பட்ட சுற்று வட்டத்திற்குள் வெள்ளைத் துணியால் மூடப்பட்ட பாத அடையாளத்தை கண்டதாக "ஸ்ரீ-பாத ஸ்தானயஹா பந்துணு ஷாரித்ர" என்ற நூலின் 138ம் பக்கத்தில் பதியப்பட்டிருக்கின்றது.

பாதடையாளம் 5 அடிக்கு மேல் நீளம் கொண்டதாக இருப்பதாகவே நேரில் கண்ட பெரும்பாலானோரின் தகவல்கள் உறுதி செய்கின்றன.

இதனையே மேலே கண்ட குறிப்புக்கள் யாவும் உணர்த்துகின்றன. அண்மைக் காலம் வரை இருந்த இப்பாத அடையாளம் மூடி மறைக்கப்பட்ட மர்மம் துலங்கப்பட வேண்டும். இதில் நுணுக்கமான தொல்பொருள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, முன்னோர் முன்வைத்துள்ள உண்மை வெளிக் கொணரப்பட வேண்டும்.

முழு உலக மனித குலத்தின் ஆதித் தந்தையின் பாதம் தான் என்ற உண்மை உலகறியச் செய்யப்பட வேண்டும் அதன் மூலம் முழு உலகின் கவனமும் இலங்கை மீது ஈர்க்கப்படும் உல்லாசப் பயணிகள் வரவு அதிகரித்து நாட்டுக்கு மேலதிகமாக அந்நியச் செலாவணி ஈட்டித்தர வழி பிறக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வியல் சான்று

நமது இலங்கையில் 1982 க்கும் 2005 க்கு இடைப் பட்ட காலப்பகுதிகளில் வெளிநாட்டு நிபுணர்களின் பங்களிப் புடன் செய்த அகழ்வாராய்ச்சிகளின் கண்டு பிடிப்புக்களின் மூலம் ஆரம்ப கால மக்கள் வாழ்ந்த கற்குகைகளில் உபயோகித்த பொருட்கள் பாவித்த கல் ஆயுதங்கள் என்பன வும் கண்டு பிடிக்கப்பட்டு இது வரை உலகில் எங்கும் வெளி ப்படாத ஆரம்ப கால மனித வாழ்வு இலங்கையிலிருந்துள் ளதாக சமீபத்தில் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளன.


2015 செப்டெம்பர் 17ம் திகதி டெய்லிமிரர் பத்திரிகையில் பேராசிரியர் ராஜ்சோம தேவ அவர்கள் எட்டாண்டு காலம் 'வலிகபொல, இலுக்கும்புர' என்ற பகுதியில் நடத்திய அகழ் வாராய்ச்சியின் மூலம் 3500 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதன் வாழ்ந்த கற்குகைகளையும் பயன்படுத்திய பொருட்களையும் கண்டுபிடித்து ஆரம்ப கால மனித வாழ்வை உறுதி செய்கி றார்.

# உலக ஆய்வாளர்களை அதிர வைத்த இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட பல்

அண்மையில் அகழ்வாரய்ச்சியின் போது இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட பாரிய பல் ஒன்று இலங் கையில் மட்டுமன்றி உலக ஆய்வாளர்களையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. இது தொடர்பான தகவல் கள் அடங்கிய கட்டுரையொன்று 2015 மார்ச் மாதம் 29ம் திகதி லங்காதீப பத்திரிகையில் தக்ஸலாவ எனும் இணைப்பு பகுதியில் வெளிவந்திருக்கிறது.

இலங்கை ஆதி மனிதனின் பல்லினால் உலக ஆய்வா ளர்கள் அதிர்ந்து போயுள்ளனர்' என்ற தலைப்பில் வேர கொடகே சஜீவ விஜேசேகர என்பவர் இதனை எழுதியி ருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் இலங்கையில் கண்டெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட பாரிய பல்

பல்லின் புகைப்படத்துடன் கட்டுரை விபரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பல்லின் படமே மேலே காண்கிறீர்கள். மேற்படி பல் கூட ஆரம்ப மனிதர்கள் இலங்கையில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கான ஓர் பலமான அத்தாட்சியாகும்.

புதைபொருள் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட இன்னும் பல இடங்கள் பின்வருமாறு.

1. பலாங்கொடை தப்தர் ஜெய்லானி என அழைக்கப்படும் கூரகல கற்குகைகள்.

2. பாபா ஆதம் மலையின் இரத்தினபுரி பக்கமாக அமைந்துள்ள "பகவாலென" என்றழைக்கப்படும் சுமார் 2000 பேர் அளவில் தங்கக்கூடிய மாபெரும் குகை.

3. ஹப்புத்தளை, பெரகலையிலுள்ள குகைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


4. புளத்சிங்கள பாஹியான் கற்குகைகள்.
5. பலாங்கொடையில் ஆதி மனிதர்கள் வாழ்ந்ததற்கான கண்டுபிடிக்கப்பட்ட கற்குகைகள்.

இன்னும் இவை போன்ற தகவல் காலத்துக்கு காலம் ஆய்வுகளின் போது வெளியாகிக் கொண்டே இருக்கின்றன.

## கூரகல (தப்தர் ஜெய்லானி) ஆய்வுக்கு பிரதமர் ஆலோசனை

கூரகலை எனும் ஜெய்லானிப் பகுதியில் பௌத்தர்கள், முஸ்லிம்களது மரபுரிமை குறித்து வெவ் வேறாக ஆய்வுகள் மேற்கொண்டு அறிக்கையொன்று சமர்ப்பிக்கும்படி பிரதமர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் (2015-10-30) பணிப்புரை விடுத்திருக்கிறார்.

அவரது வேண்டுகோளின் படி மேற்கொள்ளப்படும் ஆய்வுகளிலும் கூட பல அதிர்ச்சி தரும் தகவல்கள் கிடைக் கும் என்று எதிர்பார்க்கலாம்.



அல்-குர்ஆன் கூறும் குகைவாசிகள் தங்கியிருந்த இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் ~05

## நல் வழிகாட்டிய நபிமார்கள்.

ஆதம் (அலை) அவர்களைப் பூமிக்கு அனுப்பும் போது அங்கு சென்று சந்ததிகளைப் பெருக்கிக் கொண்டு வாழும் படியும் இறை வழிகாட்டல்கள் வந்து கொண்டே இருக்கும் என்றும் அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களிடம் கூறியிருந்தான்.

அதற்கிணங்க ஆதம் (அலை) முதல் இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை வழிகாட்டுவதற்காக ஒரு லட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களை அல்லாஹ் உலகுக்கு அனுப்பியிருக்கிறான்.

இவர்களில் 313 பேர் ரசூல்மார்களாவார்கள். புதிய வேதம் கொள்கை, கோட்பாடுகளை மக்களிடம் போதிப் பவர்கள் ரசூல்மார்களாவார்கள். முன்னுள்ள வேதத்தை அப்படியே கூட்டல் குறைச்சலின்றி போதனை செய்பவர்கள் நபிமார்களாவார்கள். இந்த வகையில் தவ்றாத், ஸபூர், இன்ஜீல், புர்கான் ஆகிய வேதங்களும் 110 ஸுஹ்புகள் எனும் வேதக் கட்டளைகளும் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டுவதற்காக அருளப்பட்டுள்ளன.

உலகில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபிமார்களில் 25 நபிமார், ரசூல்மார்களின் பெயர்களே அல்குர்ஆனில் இடம் பெற்றிருக்கின்றன. அவர்களின் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புக்களே இங்கு தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷீது நபி (அலை) அவர்கள்

ஆதம் (அலை) - ஹவ்வா (அலை) தம்பதியின் அருமை மகன் ஹாபில் மறைந்து ஐந்து வருடங்களின் பின்னர் அத்தம்பதிக்கு மகனாக ஷீது (அலை) அவர்கள் பிறக்கிறார்கள்.

ஹாபிலுக்குப் பகரமாக கிடைக்கப்பட்டவர் என்ற பொருள் பட ஷீது என்ற பெயர் அமைகிறது. அவர் செரன்தீப் - இலங்கையில் பிறந்து, ஆதம் மலைக் குகையில் வாழ்ந்ததாக பெரும்பாலான ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அல்லாஹ் ஷீது (அலை) அவர்களுக்கு 50 ஸுஹ்புகளை - கட்டளைகளை வழங்கி அவரை நபியாக அங்கீகரித்தான்.

யெமன் பிரதேசத்தில் இறை கட்டளைக்கு மாறு செய்து வழிகேட்டிலிருந்த காபிலுடன் போரிட அல்லாஹ்வால் பணிக்கப்பட்டார்கள். அதற்கிணங்க உலகில் முதலில் வாளேந்தி காபிலுடன் போரிட்டார்கள். அதன்போது கைது செய்யப்பட்ட காபில் கானகம் அனுப்பப்பட்டு, அங்கு புத்தி பேதலித்து மாண்டு போனான். ஷீது (அலை) அவர்கள் நஹ்வா மக்கா என்ற பெண்ணை மணந்து தனது 710 ஆவது வயதில் வபாத்தானார்கள்.

## இத்ரீஸ் நபி (அலை) அவர்கள்

ஆதம் நபியின் பரம்பரையில் எட்டாவது தலைமுறையில் இத்ரீஸ் (அலை) அவர்கள் பிறக்கிறார்கள். அவரது 40ஆம் வயதில் 30 ஸுஹ்புகளுடன் நபிப்பட்டம் வழங்கப்படுகிறது. எழுதுகோலை முதன் முதலில் பயன்படுத்தியவரும் தைக்கப்பட்ட ஆடையை முதன் முதலில் அணிந்தவரும் இவரே. நட்சத்திர கணிப்பையும் புத்தக வாசிப்பையும் முதலில் கண்டு பிடித்து அறிமுகப்படுத்திய பெருமையும் இத்ரீஸ் (அலை) அவர்களின் காலத்தையே சாரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூஹ் நபி (அலை) அவர்கள்

லாமத் - புவாச் தம்பதிக்கு அருமை மகனாக நூஹ் (அலை) அவர்கள் பிறந்தார்கள். அக்காலை அக்காள் நாட்டில் சிலை வணக்கம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. நூஹ் (அலை) அவர்கள் வஹீ அருளப்பட்டு நபியாக அங்கீகரிக்கப்படுகிறார்.

உம்ராத்து எனும் பெண்ணையும் பின்னர் தும்காவீலு எனும் பெண்ணையும் மணந்து கொள்கிறார். இரண்டாம் மனைவிக்கு கன்ஆன் என்ற மகன் பிறக்கிறான். இவர்களும் இஸ்லாத்தின் பால் வரவில்லை.

பல வருடங்களாக போதனை புரிந்தும் மக்கள் நேர் வழி பெறவில்லை. நபிக்கு தொல்லைகள் விளை வித்துக் கொண்டேயிருந்தனர். பின்னர் அல்லாஹ்வின் உத்தரவுக்கமைய மூன்று மாடிக் கப்பல் அமைக்கப்பட்டு தூபான் எனும் மாபெரும் பிரளயத்தில் நல்லோர் உயிர் தப்ப, தீயோர் அழிந்தனர். 950 வது வயதில் நூஹ் (அலை) அவர்கள் பூவுலகைவிட்டும் மறைந்தார்கள்.



ஜூதி மலையில் தங்கிய கப்பல் சிவப்பு அம்புக்குறி கப்பலின் விளிம்புப் பகுதியை காட்டுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹூது நபி (அலை) அவர்கள்

நூஹ் நபி (அலை) அவர்களின் ஏழாவது தலைமுறையில் ஹுூது (அலை) அவர்கள் பிறந்தார்கள். அன்னாரின் 40 வது வயதில் ஆது கூட்டத்திற்கு நபியாக நியமிக்கப்பட்டார்கள். அக் கூட்டத்தினரும் நபிக்கு தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டே இருந்தனர்.

ஊழிக் காற்று மூலம் அக்கூட்டத்திற்கும் இறை தண்டனை இறங்கியது.




அண்மையில் சவுதி அரேபியாவில் கண்டெடுக்கப்பட்ட பாரிய எலும்புக் கூடு

# ஸாலிஹ் நபி (அலை) அவர்கள்

ஆத் கூட்டத்தை தொடர்ந்து உலகில் ஸமூத் கூட்டம் தலையெடுத்தது. முன்பு பூசாரியாகயிருந்த காபூக் தம்பதிக்கு மகனாக ஸாலிஹ் (அலை) அவர்கள் பிறந்தார்கள். இவருக்கும் நாற்பதாம் வயதில் நபிப்பட்டம் கிடைத்தது.

ஸமூத் கூட்டத்தினரும் நபியை ஏற்காது வழிகேட்டிலேயே இருந்தனர். பயங்கர இடியோசையில் இக் கூட்டத்திற்கும் அழிவு ஏற்பட்டது. ஸாலிஹ் (அலை) அவர்களும் தனது இறுதிக் காலத்தில் மக்கா சென்று தனது 85ம் வயதில் வபாத்தானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸமூத் கூட்டம் வாழ்ந்த இடம்

## இப்றாஹீம் நபி (அலை) அவர்கள்

நூஹ் (அலை) அவர்களின் 13 ஆவது தலை முறையான ஆஸர்-உஷா தம்பதியின் புதல்வராக இப்றா ஹீம் (அலை) பிறந்தார்கள்.

சிறு வயதிலிருந்தே சிலை வணக்கத்திற்கு எதிராக குரல் கொடுத்தார்கள். இதனால் நம்றூத் மன்னனின் இம் சைக்கு இழக்கானார்கள். கொழுந்து விட்டெறியும் பாரிய நெருப்புக் கிடங்கிலே போடப்பட்ட போது நெருப்பு குளிர்ச் சியடைந்து நபியைக் காப்பாற்றியது.

முதலில் ஸாரா எனும் பெண்ணை மணந்து குழந்தைப் பாக்கியம் இல்லாததால் ஹாஜர் என்ற பெண்ணை மணந்து இஸ்மாயில் (அலை) அவர்கள் பிறக்கிறார்கள். பின்னர் ஸாராவுக்கு 90 வயதாகயிருக்கும் போது இஸ்ஹாக் (அலை) அவர்கள் பிறக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை இஸ்மாயிலும் அன்னை ஹாஜரும் பாலை வனத்திலே தனித்திருக்கையில் தாகத்தால் குழந்தை கதறி அழ 'ஸம் ஸம் நீர்' ஊற்றெடுக்கிறது.

பின்னர் இஸ்மாயில் (அலை) அவர்கள் சிறுவனாக யிருக்கையில் அறுத்துப் பலியிட கனவு மூலம் அல்லாஹ் ஆணையிடுகிறான். எல்லா சோதனைகளிலும் வெற்றி பெறு கிறார்கள். 127 ஆவது வயதில் ஸாரா மரணிக்கிறார்கள். அதன் பின்னர் இப்றாஹீம் (அலை) அவர்கள் கந்துாரா என்ற பெண்ணையும் பின்னர் நான்காவதாக ஜுஹுனு என்ற பெண் ணையும் மணக்கிறார்கள்.

மகனுடன் சேர்ந்து க.்.பாவையும் புனரமைத்துக் கட்டு கிறார்கள். அன்னாரின் 265 ம் வயதில் வபாத்தானார்கள்.

## இஸ்மாயில் நபி (அலை) அவர்கள்

இப்றாஹீம் (அலை) - ஹாஜர் தம்பதியின் புதல்வராக இஸ்மாயில் (அலை) அவர்கள் பிறக்கிறார்கள். இஸ்மாயில் (அலை) அவர்கள் சிறுவனாயிருக்கும் போது தந்தை இப்றாஹீம் நபிக்கு கனவின் மூலம் மகன் இஸ்மா யில் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட கட்டளையிடப் படுகிறது. மகனுடைய சம்மதத்துடன் இப்றாஹீம் (அலை) இறை கட்டளை யை நிறைவேற்ற முனைந்த போது, அல்லாஹ் இஸ்மாயில் (அலை) அவர்களுக்கு பதிலாக ஒரு செம்மறி ஆட்டை அறுத்துப் பலியிட வைத்தான். இச் சம்பவமே மினாவிலே குர்பான் கொடுக்கும் வழக்கமாக இடம் பெறுகிறது. 15 ஆம் வயதிலேயே தாயை இழக்கிறார்கள்.


இவர் அம்ரா என்ற பெண்ணை மணக்க தந்தையின் வேண்டு கோளில் அப்பெண்ணை மண விடுதலை செய்து விட்டு அம்ருவின் மகள் ஆயிலாவை மணமுடிக்கிறார்கள்.

நபிப்பட்டம் பெற்று மக்களை நேர் வழியின் பால் அழைத்துக் கொண்டிருந்தார்கள். தந்தையின் பின் 47 ஆண்டுகள் வாழ்ந்து தனது 137 வயதில் வபாத்தானார்கள். இவரது வழித் தோன்றலிலிருந்தே இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூத் நபி (அலை) அவர்கள்

இப்றாஹீம் (அலை) அவர்கள் வாழ்ந்த சம காலத்திலேயே லூத் (அலை) அவர்கள் நபியாக அங்கீகரிக்கப்படுகிறார்கள். இவர் இப்றாஹீம் நபியின் சிறிய தந்தையான சாறான் என்பவரின் மகனாவார்கள். ஸாரா இவரின் சகோதரியாவார்கள்.



நபி லூத் (அலை)
அவர்கள் தங்கியிருந்த இடம்

சிரியா, ஜோர்தான், நதிதீரத்திலுள்ள ஒரு கூட்டத்திற்கு இவர் நபியாக்கப்பட்டார்கள். நேர்வழி பெறாத இக்கூட்டமும் நபியைத் துன்புறுத்தியது. சூறாவளி, நெருப்புக் கற்களோடு நெருப்பு மழை பொழிந்தது. ஐந்து நகரங்கள் வானளாவ உயர்த்தப்பட்டு ரொட்டியைப் புரட்டிப் போடுவது போல நகரங்கள் தலைகீழாகப் புரட்டப்பட்டன. இதன் பின்னர் 7 ஆண்டுகள் வாழ்ந்து லூத் (அலை) வபாத்தானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ஹாக் நபி (அலை) அவர்கள்

இப்றாஹீம் (அலை) அவர்களின் முதல் மனைவி ஸாராவுக்கு 90 வது வயதில் இஸ்ஹாக் (அலை) அவர்கள் பிறந்தார்கள்.

யெமன் தேசத்திற்கு நபியாக்கப்பட்டார்கள். இவரது வழித் தோன்றலில் 4000 நபிமார்கள் தோன்றுவார்கள் என்று அல்லாஹ்வும் வாக்களித்திருந்தான். இவரது வழித் தோன்றலிலே மூஸா (அலை) அவர்களும் பிறந்திருக்கி றார்கள்.

மாமன் மகள் ருபக்கா என்பவரை மணந்தார்கள். 180 வது வயதில் பூவுலகை விட்டுப் பிரிந்தார்கள்.

# யஃகூப் நபி (அலை) அவர்கள்

இஸ்ஹாக் (அலை) அவர்களுக்கு ஈசு, யஃகூப் ஆகிய இரு புதல்வர்கள் இருந்தார்கள்.

யஃகூப் (அலை) அவர்கள் நஜ்ரான் நாட்டிலுள்ள மாமா லாபன் என்பவரின் மூத்த மகள் லியா என்பவரை மணந்தார். பின்னர் அவரது சகோதரி ராஹிலாவையும் மணந்தார். அன்று ஏக காலத்தில் இரு சகோதரிகளை மணக்க அனுமதியிருந்தது. மூஸா (அலை) அவர்களின் காலத்தி லேயே இத்தகைய திருமணத்திற்கு தடை வந்தது.

இவரும் நபியாகயிருந்து 147 வது வயதில் வபாத்தா னார்கள்.

# யூஸுப் நபி (அலை) அவர்கள்

யஃகூப் (அலை) - ராஹிலா தம்பதியின் புதல்வராக யூஸுப் (அலை) அவர்கள் பிறக்கிறார்கள். மிகவும் அழகு வடிவான இவர் நபியாகப் போவது குறித்து சிறு வயதிலே கனவு மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இதனால் பொறாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பட்ட சகோதரர்களால் பாழ் கிணற்றில் தள்ளப்படுகிறார்.

அங்கிருந்து காப்பாற்றப்பட்டு அரச மாளிகையிலே வளர்ந்து வருகிறார்கள். சாம் தேசத்தில் ஏற்பட்ட பாரிய பஞ்சம் காரணமாக இவரது சகோதரர்கள் இவரை நாடிவந்து உதவி பெறுகிறார்கள். பின்னர் இனங்காணப்பட்டு தந்தை யுடன் சேர்ந்து எல்லோரும் கூடி வாழ்கிறார்கள்.

சுலைஹாவை மணந்து, தந்தைக்குப் பின் 23 வருடங் கள் வாழ்ந்து வபாத்தாகி மறுவுலகை அடைகிறார்கள்.

## ஐயூப் நபி (அலை) அவர்கள்

ஷாம் தேசத்தின் செல்வந்தராகயிருந்த அமூஸ் என்பவரின் மகனாக ஐயூப் (அலை) அவர்கள் பிறந்தார்கள். யூஸுப் (அலை) அவர்களுக்கு பின் பனீ இஸ்ராயீல்களுக்கு நபியாக அல்லாஹ் ஐயூப் (அலை) அவர்களைத் தேர்ந் தெடுத்தான். யூஸுப் (அலை) அவர்களின் மகன் அபறாயம் என்பவரின் மகள் றஹ்மாவை மணம் புரிந்தார்.

18 வருடங்களாக குஷ்ட நோயிலே அவதிப்பட்டார். கண், மூக்கு தவிர்ந்த உடம்பின் எல்லா இடங்களிலும் புண்கள் ஏற்பட்டு அதிலிருந்து புழுக்களும் வெளிவந்தன. சீல் வடிந்து துர்நாற்றம் வீசும் இவ்வாறு சோதிக்கப் பட்டார்கள். இறுதியில் அல்லாஹ் அவர்களுக்கு பூரண சுகத்தைக் கொடுத்தான்.

## துல்கிப்லி நபி (அலை) அவர்கள்

ஐயூப் (அலை) அவர்களின் மகனாகப் பிறந்தவர் தான் பசீர் என்பவர். இவரே துல்கிப்லி (அலை) அவர்கள் என்று அழைக்கப்படும் நபியாவார்கள். அப்போது ஆட்சியிலிருந்த ஸாமிப்னு தகாம் என்பவன், துல்கிப்லி (அலை) அவர்களின் சகோதரியைப் பெண் கேட்டு அவரை சிறையில் அடைத்த தாகவும் . இறுதியில் நெருப்பிலிடப்பட்டதாகவும் கஸஸுல் அன்பியா குறிப்பிடுகிறது.

இப்றாஹீம் நபியைப் போல இவரும் காப்பாற்றப் பட்டார்கள். ஷாம் தேசத்திற்கு நபியாகயிருந்து மறைந் தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுஐப் நபி (அலை) அவர்கள்

இப்றாஹீம் நபியின் மத்யன் என்ற மகனின் சந்ததிகள் மத்யன், ஐக்கத், ஆகிய இரு நகரங்களை உருவாக்கி வாழ்ந்து வந்தனர். இவர்களிடையே இருந்த பணக்காரர் ஒருவரின் மகனாக சுஐப் (அலை) அவர்கள் பிறந்தார்கள்.

அவர் நபியாக்கப்பட்டு போதனைகளில் ஈடுபட்ட போதும் மக்கள் திருந்தவில்லை. இணை வைப்பும் சிலை வணக்கமும் மேலோங்கியிருந்தது. மக்கள் அளவை, நிறுவை மோசடிகளில் ஈடுபட்டனர். இறை தண்டனையாக கடும் வெப்பம் வெளியாகி மக்கள் கருகி மாண்டனர்.

சுஐப் (அலை) அவர்களுக்கு பீறை என்ற பெயரும் இருந்தது.

## மூஸா நபி (அலை) அவர்கள்

பிர்அவ்ன் மன்னனின் அராஜக ஆட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில் மூஸா (அலை) அவர்கள் பிறந்தார்கள்.

இவரது பிறப்பு குறித்து சோதிடர்கள் எச்சரிக்கை விடுத்த போதிலும் மன்னனின் அத்தனை தடைகளையும் தாண்டி, மூஸா (அலை) அவர்கள் அரச மாளிகையிலேயே வளர்கிறார்கள்.

ஆதம் (அலை) அவர்களின் 28 வது தலைமுறையிலும் இஸ்ஹாக் (அலை) அவர்களின் 6 வது தலைமுறையிலும் இம்றான்- யுஹானிது தம்பதியின் புதல்வராகப் பிறந்து நபிப்பட்டம் பெறுகிறார்கள்.

அஸா எனும் அற்புத கோலால் அற்புதங்கள் புரிகிறார்கள். நைல் நதியைப் பிளந்து கடந்து சென்ற பின்னர் பிர்அவ்னும் கூட்டத்தினரும் அங்கு மூழ்கடிக்கப்படுகிறார்கள். பிர்அவ்னின் சடலம் இன்றும் கூட எகிப்து நூதன சாலையில் சான்று பகர்ந்து கொண்டிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120 வருடங்கள் வாழ்ந்து இவ்வுலகை விட்டும் வபாத்தாகிறார்கள்.

அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் ஒன்று பிர்அவுன்



மறுமை நாள் வரை அல்லாஹ்வினால் பாதுகாக்கப்பட்ட பிர்அவ்னின் சடலம் எகிப்து நூதனசாலையில்

தன்னைக் கடவுள் என்று கூறிக் கொண்டு இறை தூதர் மூஸா நபியுடன் முரண்பட்டு அவர்களை இல்லா தொழிக்கும் நோக்கோடு விரட்டிச் சென்ற போது அல்லாஹ் மூஸா (அலை) அவர்களைக் காப்பாற்ற கடல் நீரைப் பிழந்து வழியமைத்துக் கொடுத்த போது அவர்கள் நீரூடாக செல்வ தைக் கண்ட கொடியவன் பிர்அவுன் தானும் தனது படையு டன் பின்தொடர்ந்தான். அல்லாஹ்வின் உதவியால் மூஸா (அலை) அவர்களும் அவரது கூட்டத்தினரும் மறுகரையை அடைந்த பின் அல்லாஹ்வின் நாட்டப்படி மீண்டும் கடல் ஒன்று சேர பிர்அவ்னும் அவனது கூட்டத்தினரும் கடலில் மூழ்கடிக்கப்பட்டு மாண்டு போயினர்.

இது நிகழ்ந்து பல்லாண்டுகளுக்குப் பின்னர் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளிய புனித குர்ஆனிலே அல்லாஹ் இச்சம்பவத்தைக் குறிப்பிட்டு உலக மாந்தருக்கு ஒரு அத்தாட்சியாக பிர்அவுனின் சடலத்தைப் பாதுகாத்து வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன அதிசயம் சமீபத்தில் அவனது சடலம் கண்டெடுக்கப்பட்டு எகிப்திய நூதனசாலையில் மக்கள் பார் வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பிரான்ஸின் கட்டுப் பாட்டில் எகிப்து இருந்த போது விஷேட விமானம் மூலம் தமது நாட்டுக்கு கொண்டு சென்று ஆய்வு நடத்தி அது பிர்அவுனு டையது தான் என்று உறுதி செய்து மீண்டும் எகிப்து நூதன சாலைக்கு கொண்டுவரப்பட்டு மக்கள் பார்வைக்காக வைக்க ப்பட்டுள்ளது.



மேலே உள்ள படம் புத்தளம் முன்னாள் அதிபர் எஸ்.ஏ.ஸீ யாகூப் அவர்களினால் அல்-ஹாஜ் எம்.ஐ.ஏ லதீப் மாஸ்டர் அவர்களுக்கு அன்பளிக்கப்பட்டு ஊடகவியலாளர் ஏ.எல்.எம். ஸத்தார் மூலம் கிடைக்கப் பெற்றது.

## இல்யாஸ் நபி (அலை) அவர்கள்

ஹாரூன் (அலை) அவர்களின் நான்காவது தலை முறையில் பிறந்த பஷீரின் மகனாக இல்யாஸ் (அலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பிறந்தார்கள்.

40ம் வயதில் நபியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவரது அறப் போதனைகளையும் ஏற்க மறுத்த மக்களுக்கு வறட்சியைக் கொடுத்து உணவுப் பஞ்சத்தால் அவர்கள் அழிக்கப்பட்டனர்.

## அல்யஸஃ நபி (அலை) அவர்கள்

பனீ இஸ்ராயீல்களின் கொடுமை தாங்க முடியாமல் இல்யாஸ் (அலை) அவர்கள், ஒரு வீட்டில் ஒதுங்கியிருந்தார். அந்த வீட்டுப் பெண்ணை மணந்த நபி அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அக் குழந்தையே அல்யஸ.ஃ. (அலை) அவர்களாவார்கள்.

அல்யஸ.ஃ. (அலை) அவர்களின் போதனையை ஏற்காது நபியைத் துன்புறுத்திய கூட்டத்தினருக்கு அல்லாஹ் கல் மழையைப் பொழியச் செய்து அழித்தான்.

## தாவூத் நபி (அலை) அவர்கள்

யாகூப் (அலை) அவர்களின் தலைமுறையில் தாவூத் (அலை) அவர்கள் பிறந்தார்கள். பனீ இஸ்ராயீல்களின் கூட்டத்தில் தாலூத்-ஜாலூத் மன்னர்களிடையே சண்டை மூண்டு கொண்டிருந்தது.

தாலூத் மன்னனின் கூட்டத்திலிருந்த ஈஸா என்பவரின் 13 பிள்ளைகளில் இளையவரே தாவூத் (அலை) அவர்கள். இவரே இரும்பை அறிமுப்படுத்தி, இரும்புக் கவசத்தை முதலில் பயன்படுத்தினார். நபியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 100 வருடங்கள் வாழ்ந்து மறைந்தார்கள்.

## யூனுஸ் நபி (அலை) அவர்கள்

ஹூது (அலை) அவர்களது பரம்பரையில் வந்த மத்தா என்பவருடைய மகனாக யூனுஸ் (அலை) பிறந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை நபியாக்கி, நீனவா பட்டணத்து மக்களை நேர் வழிப்படுத்த அல்லாஹ் ஏவினான். அம்மக்களும் நபிக்கு மாறு செய்யவே, நெருப்பு மழை பொழியப்பட்டது.

ஒரு சந்தர்ப்பத்தில் யூனுஸ் (அலை) அவர்களை நூான் எனும் மீன் விழுங்கி 40 நாட்கள் கடலின் அடியே அற்புதங்கள் பார்த்த பின்னர் மீன் கரையிலே கொண்டு வந்து யூனுஸ் (அலை) அவர்களை வெளியே கக்கியது.

## ஸக்கரிய்யா நபி (அலை) அவர்கள்

சுலைமான் (அலை), தாவூத் (அலை) அவர்களுடைய பரம்பரையில் பறுக்கியாவின் புதல்வராக ஸக்கரிய்யா (அலை) அவர்கள் பிறந்தார்கள்.

நபியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பாக்கூஜா என்பவருடைய மகளை மணந்தார்கள். இத்தம்பதிக்கு 120 வயது வயதில் தான் குழந்தைப் பாக்கியம் கிடைக்கிறது.

ஏகத்துவப் போதனையில் ஈடுபட்ட இவரைக் கொலை செய்யத் தேடப்பட்ட போது, மரம் ஒன்று இரண்டாகப் பிளந்து, இவரை மறைத்துக் கொண்ட போதும் இப்லீஸ் இவரது தலைப் பாகையை இனங்காட்டவே மரம் இரண்டாக அறுக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார்கள்.

## யஹ்யா நபி (அலை) அவர்கள்

ஸக்கரிய்யா (அலை) அவர்கள் முதுமையடைந்து, பிள்ளைப் பாக்கியம் இல்லாத நிலையில் அவரது 120 வது வயதிலும் மனைவியின் 98 வது வயதிலும் யஹ்யா (அலை) பிறந்தார்கள். இவருக்கு மூன்று வயதாகயிருக்கும் போதே நபிப்பட்டம் வழங்கப்படுகிறது. ஈஸா (அலை) அவர்களை விட 6 மாதங்கள் மூப்புடையவர்.

பனீ இஸ்ராயீல் மன்னனின் மனைவியால் யஹ்யா (அலை) அவர்களின் தலை துண்டிக்கப்பட்டு பெட்டியில் வைத்து மன்னனிடம் ஒப்படைக்கப்பட்டது. இக் கொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து மன்னன் கோபமடைந்தான். அல்லாஹ்வின் தண்ட னையாக இப் பிரதேசத்தை பூமி விழுங்கியது.

# ஈஸா நபி (அலை) அவர்கள்

மர்யம் (அலை) அவர்களுக்கு 15 வயதாகயிருக்கும் போது ஜிப்ரீல் (அலை) மூலம் றூாஹு ஊதப்பட்டு ஈஸா (அலை) அவர்கள் பிறந்தார்கள்.

ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டு, அவருக்கு றூாஹு ஊதப்படும் போது, அவர் தும்மிய போது வெளியான அந்த றூாஹைப் பிடித்து வைத்துக் கொள்ளும்படி அல்லாஹ் வால் கட்டளையிடப்பட்டது. அல்லாஹ்வின் நாட்டப்படி பிடிக்கப்பட்ட றூாஹு மர்யம் (அலை) அவர்களின் கழுத்தி லே ஜிப்ரீல் (அலை) அவர்களால் ஊதப்பட்டு கர்ப்பமுற்றார் கள்.

மர்யம் (அலை)யின் சிறிய தந்தையின் மகன் யூஸுப் என்பவரின் பராமரிப்பிலே ஈஸா (அலை) அவர்கள் வளர் கிறார்கள்.

ஸுர்யானி பாஷையில் இன்ஜீல் வேதம் அருளப்பட்டு ஈஸா (அலை) போதனை புரிகிறார்கள். முன்னைய தௌராத் வேதக்காரர்கள் கொதித் தெழுகிறார்கள். சிலுவை எனும் கழு மரத்திலே அறைந்து கொலை செய்ய முனைகிறார்கள்.

ஈஸா (அலை) வானத்தளவில் உயர்த்தப்ப டுகிறார்கள். அவரின் உருவையொத்த பிறிதொருவர் சிலு வையில் அறையப்படுகிறார்.

உலக முடிவின் போது ஈஸா (அலை) அவர்கள் மீண்டும் பூமியில் இறங்கி 40 ஆண்டுகள் வாழ்ந்து தஜ்ஜாலு டன் போரிட்டு அவனைக் கொன்றொழிப்பதும் இறுதிநாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஹம்மத் நபி (ஸல்) அலை அவர்கள்

ஆதம் (அலை) அவர்களைப் படைக்கும் முன்பே அல்லாஹ் சுவர்க்கத்தின் வாயிலிலே தன்னுடைய பெயருடன் சேர்த்து முஹம்மத் (ஸல்) அவர்களுடைய பெயரையும் பதித்து வைத்திருந்தான்.

றூாஹு ஊதப்பட்ட பின் இது குறித்து அவதானித்த ஆதம் (அலை) அல்லாஹ்விடம் வினவிய போது

உங்களுடைய சந்ததியிலிருந்து இறுதியாக அனுப்பப்படக் கூடிய ரசூலின் நாமம் தான் இது என்று அல்லாஹ் எடுத்துரைத்தான்.

அந்த ஏற்பாட்டின் பிரகாரம் ஈஸா (அலை) அவர்களுக்கு 571 ஆண்டுகளுக்குப் பின்னர் அல்லாஹ்வின் இறுதித் தூதராக முஹம்மத் (ஸல்) அவர்களை அப்துல்லாஹ் - ஆமினா தம்பதியின் அருமைப் புதல்வராக பிறக்கச் செய்கிறான்.

அன்னாருக்கு 40 வயதாகும் போது அவரை நபியாக அங்கீகரித்து, முழு மனித சமுதாயத்திற்கும் வழிகாட்டுவதற்காக திருக்குர்ஆனை வழங்கினான். அந்தக் குர்ஆனுக்கு விளக்கமாக ரசூல் (ஸல்) அவர்களை வாழச் செய்து அன்னாரது சொல், செயல் அங்கீகாரம் அனைத்தையும் மக்கள் பின்பற்ற வேண்டிய வாழ்க்கை முறையாக அமையச் செய்தான்.

புனித குர்ஆன் எந்தப் பிசகுமின்றி, பதியப்பட்டு, பாதுகாக்கப்பட்டுள்ளது. அனைத்து மக்களும் சிரமப்படாமல் பின்பற்றி, ஒழுகி, ஈடேற்றம் பெறக் கூடியவழிகளை மனித சமுதாயத்திற்கு அல்லாஹ், ஆதம் (அலை) அவர்களுக்கு வாக்களித்தபடி வழங்கியுள்ளான்.

இலங்கையும் மனித குலத்தின் தந்தையும் என்ற இந்த நூலின் இறுதியாக எடுத்துறைக்க விரும்புவது அல்லாஹ் அவனுடைய நாட்டப்படி மனிதனைப் படைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிநாள் வரையுமான வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளான். அதன் மூலம் ஏக தெய்வக் கொள்ளையை நிலை நாட்டி நல்வழி நடந்தோருக்கு சுவர்க்க வாழ்வை வழங்கவும், வழி தவறி நடப்போருக்கு, குறிப்பாக ஏக தெய்வ கொள்கையை மறுத்து படைக்கப்பட்டவைகளை முன்னிறுத்தி, வணங்கி, வழிகெட்டு நடக்கக் கூடியயவர்களுக்கு தண்டனையாக நரகத்தையும் வாக்களித்துள்ளான்.

எல்லா வழி காட்டிகளும் நல்ல தர்ம போதனைகளைப் போதித்து, நல் வழிகாட்டினாலும் அவர்கள், அவர்களுக்கு மேலுள்ள மாபெரும் சக்தியை - (இறைவனை) தியானித்து வந்துள்ளார்கள். எச்சந்தர்ப்பத்திலும் அவர்களுடைய மறைவுக்குப் பின்னர் பின்னரும் தங்களுக்கு உருவம் அமைத்து வழிபடும்படி சொன்னதாக எங்கும் பதிவாகியில்லை.

ஆனால் ஆதம் (அலை) அவர்களை வழி கெடுக்கச் சபதமிட்டு அல்லாஹ்விடம் மன்றாடிப் பெற்ற அனுமதியின்படி மக்கள் சமூகத்தை ஓரிறைக் கொள்கையிலிருந்து திசைதிருப்பி சபிக்கப்பட்ட இப்லீஸ், எனும் சைத்தான், இறுதி நாள் வரை செயல்பட்டுக் கொண்டேயிருக்கிறான்.

இதனாலேயே உருவ வழிபாட்டு முறைகள் பரவலாகக் காணக் கூடியதாகயிருக்கின்றன.

உதாரணமாக ஈஸா (அலை) இயேசு நாதர் அவர்கள் ஓரிறைக் கொள்கையையே போதித்ததுடன் ஒரே இறைவனையே வணங்கி வந்திருக்கிறார்கள். அவரது மறைவின் பின்னர் அவரைப் பின்பற்றியோரில் ஒரு சாரார் அவருக்கு உருவம் அமைத்து வழிபட்டு வருவதை இன்றும் சர்வ சாதாரணமாகக் கண்டு வருகிறோம்.

ஏனைய சமூகத்தவர்களாலும் வணங்கப்படும் உருவ வழிபாட்டு முறையும் இவ்வாறே தோன்றியுள்ளமை மறுப்பதற்கிடமின்றி கவனிக்கத்தக்க விடயமாகும்.

அனைவரும் அல்லாஹ்வால் அருளப்பட்ட இறுதி மார்க்கத்தின்படி வாழ்ந்து, இருலோக பாக்கியங்களையும் பெற்று ஈடேற்றம் பெற அருள்புரிவானாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிமார்கள் பெயர் மற்றும் அவர்களது வயது

1. ஆதம் (அலை) அவர்கள் : 930 வருடங்கள்
2. நூஹ் (அலை) அவர்கள் : 950 வருடங்கள்
3. சுஐப் (அலை) அவர்கள் : 882வருடங்கள்
4. ஸாலிஹ் (அலை) அவர்கள் : 586 வருடங்கள்
5. இத்ரீஸ் (அலை) அவர்கள் : 356 வருடங்கள்
6. ஹுூத் (அலை) அவர்கள் : 265 வருடங்கள்
7. ஸகரிய்யா (அலை) அவர்கள் : 207 வருடங்கள்
8. இப்றாஹீம் (அலை) அவர்கள் : 195 வருடங்கள்
9. ஸுலைமான் (அலை) அவர்கள் : 150 வருடங்கள்
10. அய்யூப் (அலை) அவர்கள் : 146 வருடங்கள்
11. யாகூப் (அலை) அவர்கள் : 139 வருடங்கள்
12. இஸ்மாயீல் (அலை) அவர்கள் : 137 வருடங்கள்
13. மூஸா (அலை) அவர்கள் : 125 வருடங்கள்
14. இஸ்ஹாக் (அலை) அவர்கள் : 120 வருடங்கள்
15. ஹாரூன் (அலை) அவர்கள் : 119 வருடங்கள்
16. யூஸுப் (அலை) அவர்கள் : 110 வருடங்கள்
17. யஹ்யா (அலை) அவர்கள் : 95 வருடங்கள்
18. முஹம்மத் (ஸல்) அவர்கள் : 63 வருடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுதல் . . .

மனுக் குலத்தின் தாயகம் என்ற இந்நூலை என்னால் இயன்ற மட்டில் முயன்று ஒரு ஆரம்ப முயற்சியாக ஓரள வுக்கு தொகுத்து வெளியிடுகிறேன். இக் கருத்தை மென் மேலும் வலுப்படுத்தி முன்னெடுக்க வேண்டும் என்பது எனது அவாவாகும்.

பல்துறை சார் அறிஞர்கள் ஆய்வாளர்கள் இம்முயற்சியை முன்னெடுத்துச் செல்ல வேணடும் என்று வேண்டுகிறேன். எமது நாட்டிலுள்ள பல்வகை வளங்களை யும், ஆளனிகளையும் கொண்ட பலமட்டங்களிலுமான கலாபீடங்கள் இம் முயற்சியிலீடுபட்டால் மிகப் பொருத்த மானதாயிருக்கும் என்பது எனது கருத்தாகும். எகிப்து, துருக்கி, சவுதி அரேபியா, யெமன், ஈராக், முதலான நாடு களில் நூதனசாலைகள் மற்றும் வாசிகசாலைகள் மற்றும் உயர் கலாபீடங்கள், ஆகியவற்றிலும் இங்கிலாந்து, இத்தாலி. முதலான மேற்கு நாடுகளிளும் தேடல்களில் ஈடு பட்டால் இன்னும் கூடுதலான தகவல்களைப் பெறலாம் என் பது எனது கருத்தாகும்.

எமது தாய் நாட்டின் புதை பொருள் ஆய்வுகளின் போது வெளியான அனைத்து தகவல்களும் வெளிக் கொணரப்படவில்லை என்பது எனது சொந்த அபிப்பிராயமா கும். ஆய்வுகளில் ஈடுபட்ட ஒரு சிலரைத் தவிர அநேக மானவர்கள் மஹாவம்சம் போன்ற சரித்திர எல்லைகளுக்க ப்பால் செல்லக் கூடிய தடயங்களைப் பொருட்படுத்தவோ வெளிக் கொணரவோ முயற்சிக்கவில்லை அல்லது விரும்ப வில்லை என்பது எனது சொந்த அபிப்பிராயமாகும். எனவே இது வரையிலுமான கண்டுபிடிப்புகளைத் திரட்டி பதிவு செய்து இனிமேலும் இத்துறையில் கவனம் செலுத்தி செயற் பட ஏதாவது ஒரு நிறுவனம் செயல்பட வேண்டும் என்பதும் எனது எதிர்பார்ப்பும் உள்ளத்தில் ஊறிய கருத்தாகும்.

மேலும் அரசாங்க அதிகார மட்டத்திலுள்ளோர் நாட்டு நலனை முன்வைத்து உத்தியோகபூர்வமாக ஒரு குழுவை அல்லது பொறிமுறையை ஏற்படுத்தி மறைக்கப்பட்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகளை வெளிக் கொணர முயலவேண்டும் எனவும் உரியவர்களை வேண்டி நிற்கிறேன்.

இவ்வாறு நடந்தேறினால் ஏற்படப்போகும் அடைவுகளை எடுத்தியம்பி தெளிவு பெறச் செய்வது இயலுமானவர்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

## *சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயங்களாவன.*

1. உலகின் முதல் மனிதனின் பாத அடையாளத்தை இலங்கை கொண்டுள்ளது.

2. இச்சுவடு- பதிவு உலக மாந்தரின் முதல் தந்தையுடையதாதலால் இது ஒரு உலக மரபுரிமை சொத்தாகும்.

3. உலக மரபுரிமை சொத்தொன்றை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம் பராமரிக்க வேண்டும்

4. உலகெங்கிலுமிருந்து மக்கள் இதனைப் பார்வையிட வேண்டிய வசிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

5. நவீன உலகில் ஹெலிபாட், மற்றும் மொனோ ரைல் (HELIPAD & MONO RAIL) களோ இதனை விட நவீன வசதிகளோ ஏற்படுத்தப்படல் வேண்டும்.

மேலே சொன்னவைகள் நடந்தேறினால் எமது நாட்டின் உல்லாசப் பயணத்துறை மேலோங்குவதுடன் நாடடின் செல்வ நிலையும் பெருகி புகழும் கீர்த்தியும் உயர்ந்தோங்கி உலகம் போற்றி மதிக்கும் ஒரு நாடாக மிளிரும் என்பது திண்ணம்.

இவ்வெண்ணக் கரு வெற்றியடைய ஒத்த கருத்துடைய அனைவரையும் பிரார்த்திக்கவும் செயல்படவும் வேண்டிக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை . . .

மனுக் குலத்தின் தாயகம் இலங்கை என்னும் இந்நூலில் முதல் மனிதன் ஆதமும் மனைவி ஹவ்வாவும் இறைவனால் படைக்கப்பட்டு பின்னர் சுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டு இலங்கையின் பாபா ஆதம் மலையில் ஆதமும், சவுதி அரேபியாவின் மக்கமா நகருக்கு அண்மையிலுள்ள அரபா என்னுமிடத்தில் மனைவி ஹவ்வாவும் இறங்கிய வரலாறும் விவரமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் கால் நடையாக ஆதமின் பாலம் மூலமாக வானவர் ஜிப்ரீலின் வழி காட்டலில் மக்கா சென்று மனைவி ஹவ்வாவை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வந்து குடும்ப வாழ்வை ஆரம்பித்து மனித சந்ததிப் பெருக்கம் ஆரம்பமான வரலாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மனித குலத் தாயகம் இலங்கை என்று சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணம் ஆகின்றது. எதிர் காலத்தில் கண்டுபிடிக்கப்படும் ஆதாரங்கள் அத்தாட்சிகள் இக் கூற்றை மென்மேலும் உறுதி செய்யும் என்பது திண்ணம்.

மேலும் ஆய்வாளர்கள் தாம் கண்டுபிடிக்கும் தடயங்கள் எச்சங்களின் ஆண்டுகள் பற்றிய கணிப்பீடுகளில் காணப்படும் முரண்பாடான கணிப்பீடுகளுக்கு முக்கியமான இரண்டு காரணங்கள் உண்டென்பதை கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

1. முதல் மனிதன் ஆதத்தின் உயரம் 60 முழம் 90 அடி பின்னர் 40 முழமாக குறைந்து படிப்படியாக இன்றைய உயரம், பருமனை அடைந்துள்ளது. அதே போன்று ஆரம்ப கால மனிதர்களின் உடற் கூறுகள் அதிக துரித முதிர்ச்சியைப் பெற்றிருந்ததால் தற்கால நவீன ஆய்வுகளின் போது கண்டெடுக்கபபடும் மனித எச்சங்களின் ஆயுட்காலம் பற்றிய கணிப்பீடுகள் பன்மடங்குகளாக கூட்டிக் காண்பிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அடுத்ததாக மனிதன் படைக்கப்படுவதற்கு முன்னதாக வெவ்வேறு உருவ அமைப்பில் மனிதனல்லாத உயிரினங்கள் ஒவ்வொரு காலச்சக்கரத்திலும் படைக்கப் பட்டு வாழ்ந்து அழிந்து போயுள்ளன. இவற்றின் எச்சங்கள் கூட ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட இடமுண்டு. அவ்வாறான வேளைகளில் கண்டுபிடிக்கப்படும் எச்சங்கள் மனித எச்சங்களாக கருதப்பட்டு ஆண்டுகள் பற்றிய கணிப்பீடு வித்தியாசப்பட இடமுண்டு.

## மனித குலத்தின் ஆயுளும் பருமனும்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஆதம் (அலை) முதல் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரையிலான நபிமார்கள், ரசூல்மார்களின் ஆயுட்கால அட்டவணை மனித சந்ததிகளின் ஆயுட்காலம் படிப்படியாக் குறைந்து வந்துள்ள மையை சான்று பகர்கின்றது.

## கல்லறைகள்

தலைமன்னாரிலும் இந்தியா ராமேஸ்வரத்திலும் இலங்கையில் கிண்ணியா, மாத்தளை கோட்டேகொட, பாணந்துறை, புத்தளம் முதலான இடங்களில் அமைந்துள்ள நீண்ட கல்லறைகள் முதல் மனிதர் ஆதம் (அலை) வாழ்ந்த காலத்தின், அண்மிய காலங்களில் வாழ்ந்த சந்ததியினரின் உயரம் பருமன் பற்றி சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன

மனிதனின் ஆயுட்காலம் குறைவடைந்து வந்தது போலவே, மனிதனின் பருமன் படிப்படியாகக் குறைவடைந்து இன்றைய நிலைமைக்கு வந்துள்ளது.

மேலும் சமீப காலங்களில் எமது நாட்டின் தொல் பொருள் ஆராய்ச்சியின் போது கண்டு பிடிக்கப்பட்ட கற்குகைகள், மனித எச்சங்கள், அவர்களது காலத்தில் பயன்படுத்திய பொருட்கள் அனைத்தும் ஆரம்ப கால மனிதர்கள் இலங்கையில் வாழந்த வரலாற்றை மேலும் அத்தாட்சிப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

ஆதிபிதா ஆதம் (அலை) அவர்கள் எமது தாய் நாட்டில் கால் பதித்து, மனித குலம் உலகில் பல்கிப் பெருகி வாழ்ந்த வரலாறை ஓரளவுக்கேனும் நூலுருப்படுத்தி அச்சிட்டு வெளியிட அருள் புரிந்த அருளாளன் அன்புடையோனைப் போற்றி புகழ்கிறேன் அல்ஹம்துலில்லாஹ். வல்ல நாயனுக்கு நன்றி கூறியவனாக,

இந்நூலுக்கான அணிந்துரையை மனமுவந்து சிறப்புர வழங்கிய ஸ்ரீ-லங்கா முஸ்லிம் கவுன்ஸில், ஸ்ரீ-லங்கா முஸ்லிம் மீடியா போரம் என்பவற்றின் தலைவரும் நவமணிப் பத்திரிகையின் பிரதான ஆசிரியருமான அல்-ஹாஜ் என்.எம். அமீன் அவர்கள்.

தொல்பொருள் ஆய்வில் கிடைத்த திரட்டிய தகவல்கள், படங்கள் அடங்கிய பத்திரிகை நறுக்குகளையும் கொண்டு நூலுருப்படுத்தும் கைங்கரியத்தில் உறுதுணையாகவிருந்து உதவிய ஊடகவியலாளர் கலாபூசணம் **ஏ.எல்.எம். சத்தார்**

தகவல்களை திரட்ட உதவிய மூத்த ஆய்வாளர் ஏ.ஜே.எம் நிலாம்.

கஸஸுல் அன்பியா நூல் வழங்கிய நீர்கொழும்பு மர்ஹூம் ரவூப் ஹாஜியார்.

நூலாசிரியரும் ஆய்வாளருமான எம்.எஸ். முஹம்மது ஜான்ஸின்

இந்தியாவிலிருந்து நூற்களைப் பெற உதவிய அல்-ஹாஜ் ஏ.எச். முஹம்மது இஸ்மாயீல்

அல்-ஹாஜ் ஏ.எல்.எம் ஹுஸைன் (ஜெலீல் பவுன்டேஷன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைகள் வழங்கி உதவிய சகோதரர் அல்-ஹாஜ் மௌலவி எம்.எச்.எம் லாபிர்.

குருநாகல் முஹம்மது ரஸீன் மற்றும் புத்தளம் லதீப் மாஸ்டர்,

சோனகத் தேசம் ஆசிரியர் ஏ.பீ.எம். இத்ரீஸ்

இந்நூலை வடிவமைத்து அழகுற சீர்படுத்தி அச்சிட்டு வழங்கிய ( BEST ART ) அச்சக உரிமையாளர் முஹம்மத் நஜ்முல் ஹுஸைன் அவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் நன்றி நவின்றதன் பின்,

பலவித வழிகளிலும் நூல் வெளியிட ஆதி முதல் உதவி புரிந்த அன்பு மனைவி ஹாஜியானி சித்தி நுஸைரா, மகனமார்களான முஹம்மது ஹுஸைன், முஹம்மது பாயிஸ், மபாஸ், மஸுத், முயினுத்தீன், மகள் ஹாஜியானி பாதிமா நஸுஹா சகோதரியின் மகன் ஸபருள்ளாஹ் முதலானோருக்கும் மனப் பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து இறை அருளையும் வேண்டி நிற்கிறேன்.

நூலாசிரியர்
***எம்.எச்.ஏ. சஹீத்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்:
**எம்.எச்.எஸ். சஹீத்**
இல: 246, தொம்பே வீதி, மள்வானை
011-2571584

புத்தகம் பெற விரும்புவோர் தொடர்பு கொள்க

**Kelani Valley Motor Co.**
No: 634 , Maradana Road,
Colombo - 10
(Opposite Ananda College)
Tel: 0112 697 005

**ISLAMIC BOOK HOUSE**
No. 77, Dematagoda Road,
Colombo - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந் நூல்
உலக மாந்தரின் தாயகம் இலங்கை
என்பதை விரிவாக எடுத்தியம்புகிறது.

இப் பாதம்
வலுவாக அதனை உறுதி செய்கிறது.

ISLAMIC BOOK HOUSE
200.00
00031332 - - 1
Manudaththin Thayakam Ilangai - A.Shahaed

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org